
கல்கி
KALKI
21.3.1965
30 காசு

தனிப்பட்ட தொழிலுக்கு பிரத்தியேகமான எஃகு

1946-ல் டி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனியார் முதல் முதலாக இந்தியாவில் டைனமோ கிரேடு எலெக்ட்ரிகல் எஃகுத் தகடுகளை வர்த்தகப் பரிமாணத்தில் உற்பத்தி செய்யத் தொடங்கினர். இந் நாட்டில் இவர்கள் மட்டுமே இன்னும் இவற்றைத் தயாரித்து வருகின்றனர்.

நம் நாட்டில் தயாரிக்கப்படும் இந்த எஃகுத் தகடுகளே மின்சாரத் தொழிலின் அடிப்படையான மூலப் பொருளாகும். இவை, மின்சார விசிறி-மின்சார மோட்டார் தொழில்கள் இவற்றின் வியக்கத்தக்க விரிவாக்கத்திற்கும் பெரிதும் உதவியன. இதன் விளைவாக ஸ்விட்சுகியர் ரேடியோ ரிஸீவர்கள், ப்ளோரஸெண்ட் விளக்குகளுக்கான சோக்குகள் முதலியவற்றின் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.

ஜம்ஷெட்பூரிலுள்ள கட்டுப்பாடு - ஆராய்ச்சி சாலைகளின் பணிமூலம் இந்தியாவில், டைனமோ கிரேடு எலெக்ட்ரிகல் எஃகுத் தகடுகள் தயாரிப்பதில் டி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனியார் முன்னோடிகளாக விளங்க முடிந்தது.

1925-ல் சிறிய முறையில் தொடங்கப் பெற்ற இந்த கட்டுப்பாடு – ஆராய்ச்சி சாலைகள் இன்று, பூரணமான உபகரணங்களுடன் – ரசாயனம், உலோக உருக்குத் தொழிற்கலை, ரிப்ராக்டரிகள் இவை பற்றிய மூன்று தனிப் பகுதிகளைக் கொண்டிருக்கின்றன. நன்கு பயிற்சி பெற்ற உலோக உருக்குத் தொழிற் கலைஞர்கள் இந்திய எஃகுத் தயாரிக்கப்படும் பொருள்களை ஆராய்ச்சி செய்கின்றனர். இயக்குதல் பற்றிய பிரச்சினைகளுக்கும், உற்பத்தியான எஃகின் தரத்தை கட்டுப்படுத்துவதற்கும் உதவி அளிக்கின்றனர்.

டாடா ஸ்டீல்



The Tata Iron and Steel Company Limited

JWT TN 2068A


கல்கி

பொருளடக்கம்

குரோதி பங்குனி 8 ● ● ● ● ● மார்ச் 21



● "கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



இந்தத் துரும்பாவது காப்பாற்றுமா?
இந்தி எதிர்ப்புக் கொந்தளிப்பு
ஒரிஸ்ஸா துர்நாற்றத்துக்கு முகமூடி
காங்கிரஸ் "காம-தேனு"
ஹா— மரத்துப் போச்சே!
காங்கிரஸ்
நிர்வாகம்
நேர்மை
விலகுவதற்குக் காலம் வந்து விட்டது!
PK



மலர் 24 ○ இதழ் 34

கேரளத் தேர்தல் முடிவுகள்

காங்கிரஸ் சர்க்காரின் தவறான போக்கின் விளைவாகக் கேரளத் தேர்தல்கள் சீனாவுக்குச் சாதகமாக முடிந்திருக்கின்றன! காங்கிரஸிலிருந்து பிரிந்து போன 'கேரள காங்கிரஸ்' என்ற கட்சிக்குக் கிடைத்துள்ள ஸ்தானங்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது அங்கு ஆள்கிற கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பும் பிளவும் ஏற்பட்டது எவ்வளவு நியாயமென்று வெளியாகிறது. கட்சியிலிருந்து பிரிந்துபோனவர்கள், இடதுசாரி கம்யூனிஸ்டுகள் இருவருடனும் ஒப்பிடும்போது மகத்தான அதிகாரம் பெற்ற ஆளும் கட்சி படுதோல்வி அடைந்திருக்கிறது.

பரிபூரண சர்க்கார் சர்வாதிபத்தியத்தை ஆதரிக்கும் இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியானது விரோதி நாட்டுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது எனினும், காங்கிரஸைப் போலன்றி அக்கட்சியில் தனி மனிதப் பண்புகளை யொட்டிய நேர்மை இருக்கிறது. அதோடு அக்கட்சியினர் சிறைப்பட்டிருந்ததால் ஒரு தியாகப் பிரபையும் பெற்றிருந்தனர். கம்யூனிஸ்ட்களின் வெற்றிக்கு இவை முக்கியமான காரணங்கள்.

அகில இந்திய காங்கிரஸ்காரர்கள் கேரள காங்கிரஸுடன் சேர்ந்து மந்திரி சபை அமைக்கமாட்டார்கள் என்று தெரிகிறது. அநேகமாகக் கேரளத்தில் ஜனநாயக சட்டசபைச் சர்க்கார் எதுவும் அமையாது என்றே தோன்றுகிறது.

இனி கேரளத் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் முயற்சிக் கதையைப் பார்ப்போம். பதினான்கு ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டுப் பதின்மூன்று ஸ்தானங்களில் தோல்வியுற்ற சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்ததாகவே தோன்றும். ஆனாலும் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். சுதந்திரக் கட்சியானது கேரளத்தில் ஏராளமான ஸ்தானங்களைப் பெற முடியும் என்று எப்போதுமே எண்ணவில்லை. இதனாலேதான் மொத்தம் இருந்த 133 ஸ்தானங்களில் பதினாலே தொகுதிகளில்தான் அக்கட்சி அபேட்சகர்களை நிறுத்தி வைத்தது. காங்கிரஸை எதிர்ப்பதன் மூலம் கம்யூனிஸ்ட்களின் கைக்கு வலிவு தந்துவிடக் கூடாது என்பது சுதந்திரக் கட்சியின் திட்டமான எண்ணம். ஏறக்குறைய ஒரே கொள்கையைக் கொண்ட காங்கிரஸ், கம்யூனிஸம் இவற்றுக்கிடையே எதைத் தேர்ந்தெடுப்பது என்பதில் இரு பிரிவாகப் பிரிந்து நின்ற கேரள மக்கள் எந்தக் கட்சி அதிக ஆபத்தானது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் காங்கிரஸ், கம்யூனிஸம் இவை தவிர இன்னொரு மார்க்கமும் உண்டு என்று எடுத்துக்காட்ட வேண்டிய அத்தியாவசியமான பணியில் சுதந்திரக் கட்சி முதல் அடி எடுத்து வைத்தது. கம்யூனிஸ்ட்கள் ஒருகாலும் வென்று விடக்கூடாது என்று ஒரு பெரும் பகுதி மக்களும், அதேபோல் காங்கிரஸ் ஒருகாலும் ஆட்சிக்கு வந்துவிடக் கூடாது என்று இன்னொரு பெரும் பகுதி மக்களும் தீவிரமாயிருந்து வருகின்றனர். சுதந்திரக் கட்சியோ மற்றக் கட்சிகளோ அரசாங்கம் அமைக்குமளவுக்குப் பெருவாரி ஸ்தானங்களில் போட்டியிடாததால், காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் கம்யூனிஸ்ட் கட்சியே ஆட்சிக்கு வந்தாலும் பாதகமில்லை என்று

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

அதற்கு வாக்களித்து விட்டார்கள். இருப்புச் சட்டிக்கும் நெருப்புக் கட்டிக்கு மிடையே அகப்பட்டுக் கொண்ட எறும்புபோல் காங்கிரஸா கம்யூனிஸமா என்று திகைத்த கேரள மக்களுக்கு இவ்விரண்டுமில்லாத ஒரு மார்க்கத்தைக் காட்ட வேண்டிய பொறுப்பைச் சுதந்திரக் கட்சி அங்குரார்ப்பணம் செய்திருக்கிறது. காங்கிரஸ், கம்யூனிஸம் இரண்டுக்கும் மாறாக, சர்க்கார் சர்வாதிபத்தியமின்றி, மக்களின் சுதந்திர வாழ்முறை மூலம்தான் சுபிட்சம் காண முடியும் என்கிற புதிய பாடத்தைக் கேரள மக்களுக்குத் தொடங்கவே சுதந்திரக் கட்சி முயன்றது.

காங்கிரஸா கம்யூனிஸமா என்று திகைத்த கேரள மக்களின் குழப்பத்தைச் சுதந்திரக் கட்சி மிகச் சிறிய அளவுக்கேனும் தீர்த்துவைத்திருக்கிறது என்று தேர்தல் முடிவுகளிலிருந்து கூற முடியும். மக்களிடம் வரி பெறும் எந்தச் சர்க்காரும் செய்ய வேண்டிய காரியங்களை மக்களுக்குச் சுட்டிக்காட்டிக் காங்கிரஸ் கட்சிக்கு வாக்குத் தேடிய தந்திரசாலிகளையும், தியாகப் பிரபை பெற்ற கம்யூனிஸ்ட்களையும் மட்டும் சுதந்திரக் கட்சி எதிர்க்கவில்லை ; காங்கிரஸிடம் விரோதத்தால் கம்யூனிஸ்ட்களைத் தவிர வேறு கதியில்லை என்றும், கம்யூனிஸ்ட்களிடம் விரோதத்தால் காங்கிரஸைத் தவிர வேறு வழியே கிடையாது என்றும் எண்ணிய மக்களின் மயக்கத்தையே சுதந்திரக் கட்சி வெல்ல வேண்டியிருந்தது.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரக் கட்சி என்று மூன்றே கட்சிகள் இராமல் காங்கிரஸில் இரண்டு கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சியில் இரண்டு பிரிவுகள் மற்றும் முஸ்லிம் லீக், சோஷலிஸ்ட்கள், ஜனசங்கம் முதலியனவும் சேர்ந்ததால் சுதந்திரக்கட்சியின் வாய்ப்புக்கள் மேலும் மங்கின. காங்கிரஸும் பிடிக்காமல் கம்யூனிஸமும் பிடிக்காமல் போனவர்களில் பலர் கேரள காங்கிரஸ் என்ற செல்வாக்குள்ள உள்ளூர்க் கட்சிக்கு வாக்களித்தனர். மற்ற எதிர்க் கட்சிகளோடும் பல முனைப் போட்டியிடாமல் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பின் சுதந்திரக் கட்சி இப்போதைக் காட்டிலும் அதிக வாக்குகள் பெற்றிருக்க முடியும். தற்போதைய சூழ்நிலையில் நாரக்கல், பாலக்காடு முதலிய இடங்களில் சுதந்திரக் கட்சி சுமார் 5000 வாக்குகள் பெற்றதைப் பெரும் சாதனையாகவே கருதலாம். சுதந்திரக் கட்சியின் ஒரே வெற்றி ஸ்தானமாகிய பூஞ்சாரில் கம்யூனிஸ்ட் ஆதரவு பெற்ற சுயேச்சை அபேட்சகர் 15,000 வாக்குகளும், காங்கிரஸ் அபேட்சகர் சுமார் 6000 வாக்குகளும் பெற்றிருக்க நமது அபேட்சகர் 22,000 வாக்குகள் பெற்றது பெருமைப்படத்தக்கது.

கம்யூனிஸத்தின் ஒளிவு மறைவற்ற பரிபூரண சர்க்கார் சர்வாதிபத்தியத்தை எதிர்க்கும் மக்களும், ஒளிவு மறைவுடன் லஞ்ச ஊழலுக்குப் பல வகைகளில் இடமளிக்கும் காங்கிரஸின் சர்க்கார் சர்வாதிபத்தியத்தை எதிர்க்கும் மக்களும் இருபெரும் கூறுகளாகப் பிரிந்திருக்கும் கேரளத்தின் சிக்கலுக்கிடையே புதிய சுதந்திரப் பாதையை நிலை நாட்டுவது பொறுமையுடனும், நிதானமாகவும் செய்யவேண்டிய சிரமசாத்தியமான காரியம் – ஆனால் மிகவும் தேவையான காரியம். ஆட்சி, பொருளாதாரம் இவை குறித்துக் கேரள மக்களுக்குப் புதிய கருத்துக்களைப் புகட்டுவதோடு சுதந்திரக் கட்சியின் பொறுப்பு முடிந்துவிட வில்லை. தனி நபர் சுதந்திரம், பொது வாழ்க்கையின் நேர்மை, சமூக ஐக்கியம் என்ற மூன்று தத்துவங்களை ஆதரிக்கும் பான்மையையும் அம்மக்களுக்குப் புகட்டியாக வேண்டும். இவற்றில் 'சமூக ஐக்கியம்' என்ற கருத்து கேரளத்தில் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கம்யூனிஸ்ட்கள், காங்கிரஸார் இருவருமே சமூகத்தின் பல பகுதிகளிடையே பரஸ்பரப் பகையை மூட்டி வளர்த்து மக்களின் மனத்தைக் கெடுத்திருக்கிறார்கள். இந்நிலையில் அந்த உள்ளங்களிலிருந்து அருவையின் உணர்வைக் கெல்லி எறிவது கடினம்.

லஞ்ச ஊழலுக்கு ஆஸ்பதமான காங்கிரஸ் சர்வாதிபத்தியத்தைவிட, விரோதி நாட்டுடன் தொடர்புள்ள கம்யூனிஸ்ட்களின் ஒளிவு மறைவற்ற சர்வாதிபத்தியம் சிறப்பானது என்று கேரளம் கருதி விட்டதெனில், அந்தக் கருத்தை அப்படியே விட்டு வைப்பதற்கில்லை. காங்கிரஸைப் போல ஊழலும், கம்யூனிஸ்ட் கட்சியைப் போலத் தேசத் துரோகமும், இவ்விரண்டுக்கும் பொதுவான சர்வாதிபத்தியமும் இல்லாமலே மக்களுக்குச் சுதந்திரமளித்து அரசாங்கம் நடத்த முடியும் என்ற உண்மையை அம்மக்களிடையே பரப்பிக் கொண்டேயிருத்தல் வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து விடுமோ, கம்யூனிஸம் ஆட்சிக்கு வந்துவிடுமோ என்று பயந்து இரண்டில் ஒன்றே வழியென நம்பும் கேரள மக்களின் பயம் தெளிந்தால் நாம் எதிர்பார்க்கும் நல்ல முடிவு விரைவிலேயே உறுதியான முறையில் ஏற்படக் கூடும். பயம் என்பது ஒரு மாயை தான். இறைவன் அருளால் அந்த மாயை ஒரு நாள் நீங்கியே தீரும்.


வேண்டுகோள் ரத்து

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் கைதான மாணவர்களின் சார்பில் நீதிமன்றங்களில் வழக்காடுவதற்காக ஒரு நிதி தொடங்குவதென உத்தேசித்து, மேற்படி நிதிக்கு உதவி செய்ய விரும்புகிறவர்கள் மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-10 என்ற விலாசத்துக்குப் பொருளனுப்புமாறு கோரி சென்ற இதழில் ஒரு வேண்டுகோள் வெளியிட்டிருந்தோம். ஆனால் சில ஆயிரம் பிரதிகள் அச்சானவுடனேயே, மாணவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தையும் சர்க்கார் வாபஸ் பெற்று விட்டனர் என்ற நற்செய்தி கிடைத்தபடியால் 'ஹிந்தி எதிர்ப்பு மாணவர் வழக்கு நிதி'யை ரத்து செய்து விட்டோம்.



வந்தனை செய்து வரவேற்கிறோம் !

இவ்விதழ் அச்சாகும் தருணத்தில் சென்னை மாநகருக்கு மகத்தான ஒரு பாக்கியம் கிடைத்திருக்கிறது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகளும், இளையஸ்வாமிகளாகிய ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி அவர்களும் சென்னைக்கு எழுந்தருளியிருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன் ஆசாரிய ஸ்வாமிகள் சென்னைக்கு விஜயம் செய்ததால் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சிக்குப் புத்துயிரூட்டவே அவர்கள் பருவமறிந்து மீண்டும் வந்திருக்கிறார்கள் எனக் கருதி வந்தனை செய்து வரவேற்கிறோம்.



- ❊ பத்திரிகைச் சுதந்திரம்
- ❊ ஐந்து தேவைகள்!
- ❊ வேலையின்மைப் பிரச்னை

பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் குறைப்பதில் பல நாட்டுச் சர்க்கார்கள் முனைந்திருப்பதைக் குறித்து சர்வதேசச் சட்ட நிபுணர் குழு (International Commission of Jurists) பெரும் கவலை கொண்டுள்ளது. இந்தியப் பார்லிமெண்டின் இரு சபைகளின் கூட்டுக் கமிட்டிப் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ள இந்தியப் பத்திரிகைக் கவுன்ஸில் மசோதாவை ஆட்சேபித்து சர்வதேசச் சட்ட நிபுணர் குழு தனது தேர்ந்த கருத்தைப் பின்வருமாறு கூறுகிறது :

> மசோதாவின் நோக்கம் எதுவாயினும், உத்தேசிக்கப்பட்டுள்ள பத்திரிகைக் கவுன்ஸில் பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்காது என்றும் கட்டுப்படுத்தவே செய்யுமென்றும் அஞ்சப்படுகிறது. மசோதாவின் ஷரத்துக்களை ஆராய்ந்ததில், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதிக்கும் கீழ்க்கண்ட விளைவுகள் தெரிய வருகின்றன:
>
> 1. கவுன்ஸிலின் முடிவுகளை ஆட்சேபித்துச் சட்ட மன்றங்களில் வழக்குத் தொடுக்கும் ஜனநாயக உரிமையைப் பத்திரிகைகள் இழந்துவிடும்.
>
> 2. பத்திரிகை நலன்களைக் காக்கக் கூடியவர்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளித்திருப்பினும், மேற்படி கவுன்ஸிலானது சர்க்காரால் நியமனம் செய்யப்படுவதால் அது யதார்த்தத்தில் பத்திரிகைகளின் நலன்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்காமலே போகக் கூடும்.
>
> 3. பத்திரிகைகளின் மீது சாட்டப்படும் குறைகளைக் கவுன்ஸில் விசாரிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பத்திரிகைகளின் உரிமைகளைச் சர்க்கார் தகர்த்தால் சர்க்கார் மீது பத்திரிகைகள் புகார் கூற இடமளிக்கப்படவில்லை.
>
> 4. பத்திரிகையாளர்கள் தாங்கள் பிரசுரிக்கும் விஷயத்தின் ஆதாரம் என்ன என்பதை வெளியிடாமல் காப்பதற்குச் சம்பிரதாயமாக ஓர் உரிமை பெற்றிருக்கிறார்கள். பத்திரிகைக் கவுன்ஸிலின் விதிமுறைகளின் கீழ் இந்த உரிமை பாதிக்கப்படலாம்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு பத்திரிகைக் கவுன்ஸில் மசோதா உத்தேசிக்கப்பட்ட போதே சர்வதேசப் பத்திரிகையாளர் நிலையம் (International Press Institute) பிரதமர் லால்பஹாதூர் அவர்களுக்குப் பின்வருமாறு தந்தி கொடுத்திருந்தது:

> ஜனநாயக நாடுகளிடையே இந்தியா பெற்றுள்ள பெரும் அந்தஸ்து காரணமாக உத்தேச மசோதா உலக முழுவதிலுமுள்ள சுதந்திரப் பத்திரிகை அமைப்புக்குப் பெருத்த கவலையளித்துள்ளது.
>
> உத்தேசிக்கப்பட்டுள்ள பத்திரிகைக் கவுன்ஸில் மசோதாவின் மூலம் இந்திய சர்க்கார் பெறக் கூடிய அதிகாரத்தைத் தற்போதுள்ள பாரத அரசாங்கம் துர்நோக்கத்துடன் பயன்படுத்தாது என்று நம்புகிறோம். எனினும், சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்றுள்ள மேற்படி கவுன்ஸில் தற்போது எந்தச் சுதந்திரத்தைக் காப்பதற்காக அமைக்கப்படுகிறதோ அதே சுதந்திரத்தை நாசமாக்கும் பயங்கர ஆயுதமாகவும் பயனாக முடியும் என்று சர்வதேசப் பத்திரிகையாளர் நிலையம் கருதுகிறது.

பத்திரிகைக் கவுன்ஸில் நிறுவுவதில் இந்திய சர்க்கார் கொண்டுள்ள நன்னோக்கத்தை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அதன் ஷரத்துக்களால் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு ஏற்படக் கூடிய கட்டுப்பாடுகளைத்தான் ஆட்சேபிக்கிறோம். ஸ்ரீ ஜவாஹர்லால் அவர்கள் பத்திரிகைச் சுதந்திரம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களின் அடிப்படையில் கவுன்ஸிலின் காரியக்கிரமத்தைப் பார்லிமெண்ட் கூட்டுக் கமிட்டி ஆராய்ந்தால் நலமாயிருக்கும். அகில இந்திய செய்திப் பத்திரிகை ஆசிரியர் மகாநாட்டில் ஸ்ரீ ஜவாஹர்லால் அவர்கள் கூறியதாவது :

> "அதிகாரத்திலுள்ளவர்களின் தவறுகள் விமரிசிக்கப்பட வேண்டும்; இடையறாமல் விமரிசிக்கப்பட வேண்டும். நல்லெண்ணத்தோடு அவர்களின் குற்றங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். கண்டனம் எவ்வளவு வலுவாக இருக்க வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வளவு வலுவாகக் கண்டிக்கலாம். என் மனத்துக்குப் பத்திரிகைச் சுதந்திரம் என்பது ஒரு பிரசார மந்திரமாக மட்டும் தோன்ற

வில்லை. பத்திரிகைச் சுதந்திரமென்பது ஜனநாயக முறையின் ஒரு ஜீவாம்சம். பத்திரிகைகளின் சுதந்திரத்தைச் சர்க்கார் விரும்பாவிடினும், அது ஆபத்தானது என்றே கருதினாலும் இவ்விஷயத்தில் சர்க்கார் தலையிடுவது தவறு என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. கட்டுப்பாடுகளைச் சுமத்துவதால் உண்மை நிலையை மாற்றிவிட முடியாது. கருத்துக்கள் பரவாமல் அமுக்கி வைப்பதற்கே சர்க்கார் நடவடிக்கை உதவும். எனவே, பத்திரிகைச் சுதந்திரத்தைத் தவறான முறையில் பயன்படுத்திக் கொள்வதால் அபாயங்கள் ஏற்படக் கூடும் எனினும், சர்க்கார் கட்டுப்பாட்டுக்கு ஆட்பட்ட பத்திரிகைத் தொழிலைவிட பூரண சுதந்திரம் பெற்ற பத்திரிகைத் தொழிலையே நான் வரவேற்கிறேன்.''

* * *

புகழ்பெற்ற முதலாம் ராக்பெல்லரின் பேரப் பிள்ளையாகிய டேவிட் ராக்பெல்லர் தொழில் துறையில் ஆக்கரீதியான நிருவாகம் நடைபெறுவதற்கு ஐந்து தேவைகளைக் கூறுகிறார். இவை சர்க்கார் நிருவாகத்துக்கும் பொருந்தும். தெளிவு கனிவு, ஏற்புத் திறன், நன்மையில் நம்பிக்கை, தைரியம், சமூகப் பொறுப்புணர்ச்சி என்பனவே இந்த ஐந்து தேவைகள்.

சமூகப் பொறுப்புணர்ச்சி என்பது சர்க்கார் நிருவாகத்தின் முக்கியமான அம்சம். இதையே ஒப்புரவு முறை என்பதன் மூலம் காந்தியடிகள் தொழில் துறைக்கும் பொருத்தினார்.

மற்ற நான்கு தேவைகளை அரசியல்வாதிகள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். விஷயத்தை எல்லாக் கோணங்களிலும் எப்போதும் ஆராய்ந்து பார்த்துத் திருத்திக் கொள்ளத் தயாராயிருக்கும் மனோபாவமே தெளிவு — கனிவு. இந்தத் தன்மை நம் சர்க்காரிடம் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளுவார்கள். புதிய கருத்துக்களைப் பட்சபாதமின்றி ஆலோசித்துப் பார்த்து அவசியமானவற்றை அங்கீகரிப்பதே ஏற்புத் திறன். ஏதோ ஒரு சூழ்நிலையில் என்றோ ஒரு நாள் வகுக்கப்பட்ட சித்தாந்தங்களையும் சூத்திரங்களையும் மூடப் பிடிவாதத்துடன் பிடித்துக் கொண்டிருக்கும் இந்திய சர்க்காருக்கு ஏற்புத் திறன் இல்லை என்பது வெட்ட வெளிச்சம். தீமைகள் இருப்பினும் இறுதியில் நன்மை வெல்லும் என்ற உற்சாக உணர்வைத்தான் ராக்பெல்லர் 'நன்மையில் நம்பிக்கை' எனக் கூறுகிறார். இது வெறும் கொள்கை மட்டுமல்ல. மானுட சக்தியின் ரகசியமே இதில்தான் உள்ளது. ஆனால் பாரத சர்க்கார் தன்னிடமுள்ள தீய அறிகுறிகளை மக்களுக்குத் தெரியாமல் மூடி மறைப்பதில்தான் கவனமாயிருக்கிறதே அன்றி அதனைத் தீர்த்து வைப்பதில் தீரம் காட்டவில்லை. நான்காவது தேவையான 'தைரியம்' என்பது ஒரு செயல் முறையில் ஏற்படும் இடுக்கண்களைத் துணிந்து ஏற்பதைக் குறிக்கும். இடுக்கண்கள் மக்களின் ஆதரவைக் குறைக்குமாதலால் 'தைரியத்துக்கு' ஜனநாயக அமைப்பு இடம் தருவதில்லை. துணிச்சல் வாய்ந்த தலைவர் இருந்தாலன்றி அரசாங்கம் கோழையாகவே இருந்துவிடும். நல்ல நிருவாகத்தின் பெரும் எதிரி கோழைத்தனம் தான். வாக்காளர்களில் எந்தப் பகுதியினரை நல்ல முறையிலோ கெட்ட முறையிலோ திருப்திப்படுத்துவதால் வெற்றிபெற முடியுமோ, அவர்களைக் குறித்துப் பயப்பிராந்தி கொண்டுள்ளவர்களின் நிருவாகத்தில் தைரியத்துக்கு இடமேது?

* * *

நமது தேச வாழ்வில் காணப்படும் பல தவறான கருத்துக்களில் மிகவும் பெரிய தவறு மொத்த உற்பத்திப் பெருக்கம் வேறு, வேலை வாய்ப்பு வேறு என்று புரிந்துகொள்ளாததுதான். மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படாத எஃகு போன்ற பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கோடிக் கணக்கில் செலவிடப்பட்டிருக்கிறது. இவை பெருவாரியான மக்களுக்குத் தொழிலளிக்கவும் பயன்படவில்லை. போக்குவரத்துச் சாலைகள் அமைப்பது, ஏழை பொதுமக்களுக்காக வீடுகள் கட்டுவது போன்ற இனங்களில் தேசியத் திட்டம் அமைத்து இத்தொகையைச் செலவிட்டிருந்தால் பல லட்சக் கணக்கான மக்களுக்கு வேலை அளித்திருக்க முடியும். தற்போது மின்விசைத் தறிகளைப் பெருக்கித் துணி உற்பத்தியை அதிகமாக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். துணி உற்பத்தி பெருகக் கூடும். ஆனால் குடிசைத் தொழிலாகக் கைத்தறி நெசவு செய்து வந்த லட்சக்கணக்கான தொழிலாளர் வேலை இழப்பார்கள். வேலையின்மைப் பிரச்னையும், பட்டினிச் சாவும் பிச்சைக்காரக் கோஷ்டிப் பெருக்கும் கடுமையாகும்.

ORWO

ஆர்வோ

ரோல் ஃபிலிம்

கலரிலும் பிளாக் அண்டு ஒயிட்டிலும்

சுலபமானது! ஆர்வோ கலர் ஃபிலிமில் புகைப் படம் எடுப்பது பிளாக் அண்டு ஒயிட்டைப் போலவே மிகவும் சுலப மானது.

40 ஆண்டுகளாக நீங்கள் உபயோகித்த அதே ஃபிலிம்தான். இப்பொழுது "ஆர்வோ" என்ற புதிய பெயரில் விற்கப்படுகிறது.

55 ஆண்டு அனுபவமுடைய வேப் ஃபிலிம் ஃபேப்ரிக் உல்பனின் தயாரிப்பு.



VEB FILMFABRIK WOLFEN
German Democratic Republic
ஆர்வோ பிலிம்ஸ் ஈஸ்டர்ன் யூனிட்
சென்னை - 2 - கல்கத்தா - 13

கல்யாண சுந்தரர்

இரண்டு கோலாகலத்
திருமணங்கள் நிகழ்ந்த
பங்குனி உத்தரம்
கல்யாண சுந்தரர்களுக்கு
உகந்த திருநாள்





பரமேசுவரனும் பார்வதியும் மணம் புரிந்து கொண்டு அருள்பாலிக்கும் கல்யாண சுந்தரர் திருக்கோலங்கள் தமிழ்நாடெங்கும் ஆலயங்களில் சிற்பங்களிலும், படிமங்களிலும் நிறைந்து காண்பது. இறைவனும், இறைவியும் மணம் புரிந்து கொண்ட மங்கலக் காட்சியில் கல்ருன் கொண்ட

வி.கோபாலன்



ஈடுபாடு புரிகின்றது. கலைஞன் வடித்த அற்புதக் கோலத்தை.

''அத்தலம் நின்ற மாயோன்
ஆதி செங்கரத்து நங்கை

கைத்தலம் கமலப் போது
பூத்ததோர் காந்தள் ஒப்ப

வைத்தரு மனுவாய் ஓத
கரகநீர் மாரி பெய்தான்

கொத்தலர் கண்ணி விண்ணோர்
தொழுது பூமாரி பெய்தார்''

என்று பரஞ்சோதியார் திருவிளையாடல் புராணத்தில் அழகாகச் சொல்கிறார்.

சிற்பக் கலையில் கல்யாண சுந்தரர் எழிற் கோலம் தனிச் சிறப்புடையது. கஸ்யப சில்பம், சில்ப சங்கிரஹம், சில்ப ரத்னு, மாயாமதம் போன்ற சிற்ப சாஸ்திரங்கள் கல்யாண சுந்தரரின் கோலாகலக் கோலத்தை விளக்குகின்றன.

இரண்டு கோலாகலத் திருமணங்கள் நிகழ்ந்த பங்குனி உத்தரம் கல்யாணசுந்தரர் களுக்கு உகந்த திருநாளாகக் கொண் டாடப்படுகிறது. பங்குனி உத்தரம் ஓர் இணைப்புத் திருநாளாகத் திகழ்கின்றது. சிவபிரானுக்குக் கல்யாணசுந்தரர் என்று ஒரு திருநாமமுண்டு. தசரதகுமாரனுக்கும் கல்யாணராமன் என்றொரு பெயருண்டு. சுந்தரர் என்றாலும் அழகானவர் என்று பொருள்; ராமன் என்றாலும் அழகானவர் தான். கல்யாணமூர்த்திகள் அழகிலும் ஒப் புடையவர்கள் அன்றோ! அங்கே சிவனுக்கும் பார்வதிக்கும் மணம் முடிப்பது மகா விஷ்ணுவே; இங்கே ராமனுக்கும் சீதைக் கும் திருமணம் நிகழக் காரணமாவது சிவ தனுசுவேதான். இப்படிப் பல ஒற்றுமை களைக் கொண்ட கல்யாணசுந்தரர்களைக் கொண்டாடும் பங்குனி உத்தரத் திருநாள் ஹரிஹர புத்திரரான சாஸ்தாவுக்கும் உகந்த நாள். ஆகவேதான் இதனை ஒரு சமரஸ இணைப்புத் திருநாள் என்றே போற்றிக் கொண்டாடி வருகிறோம்.

பங்குனி உத்தரப் பௌர்ணமி தினத்தில் நடந்த திருமணத்துக்குப் பிறகே ராமாயண காவியம் தனது லட்சியத்தை நோக்கிப் படர்கின்றது.

கயிலையில் கல்யாண சுந்தரருக்கும் உமா தேவிக்கும் கந்தன் பிறக்கிறான். அக்கிர மத்தை எதிர்த்து நிக்கிரகம் செய்யப் புறப் படுகிறான் வேலேந்திய அவ்வீரன். சத்தியம் புலனாகிறது. ஞானம் தழைக்கிறது; தர்மம் வாழ்கிறது.

அரக்கர்களை அழித்து சத்தியத்தை உணர்விக்கக் கல்யாண சுந்தரர்களாக மணக் கோலம் பூண்ட அந்தத் தெய்வீக தம்பதி களைப் போற்றுவோம்.

அட்டைப்படக்கதை

பொய் சொல்லலாமா?

எஸ். லட்சுமி சுப்பிரமணியம்



விடியற்காற்று ஜன்னல் வழி உட் புகுந்து 'சில்' என்று மேலே மோதியது. சந்திரன் போர்வையை உதறிக் கொண்டு எழுந்திருந்தான்.

அவன் படுத்திருப்பது சென்னையில் அவன் வீடு. அதற்கு ருசுவாய்த் தலைக்கு மேலே அவன் தந்தையின் படம் அவனைப் பார்த்துச் சிரிக்கிறது. தெருவில் கேட்க ஆரம்பித்து விட்ட விற்பவர்களின் கூவலுக்கு நடுவே தூரத்தில் கடல் அலைகளின் ஓசை மெதுவாய் இரைகிறது. தாயார் பாத்திரங்களைக் கழுவும் சத்தம் வேறு கேட்டது.

முகாமில் இத்தனை நேரம் எல்லோரும் அணிவகுப்புக்குப் போயிருப்பார்கள். அடிவானத்தில் இளங் கீற்று விழுவதற்கு முன்னுல் காலைப் பயிற்சியில் பெரும் பகுதி முடிந்து போயிருக்கும். கனத்த பூட்ஸுகள் அழுத்தமாய் விழும் ஒலி, துப்பாக்கியைத் தோள் மேல் சாய்த்து 'பட்ஸல்யூட்' அடிக்கும் ஓசை, ராகம் போடும் டிரக்குகளின் தொடர்ந்த சத்தம்—இவைகள்தான் அங்கே காலை நேரத்து ஒலி வரிசைகள்.

ஒரு மாத லீவு. அது முடியும் வரை அவை யாவும் நினைவுகள். அதற்குப் பிறகு இந்தச் சூழ்நிலையின் நினைவுதான். ஜன்னல் வழியே அவன் பார்வை நீல வானைத் துழைத்தது. காலைப் பொன்னில் உயரப் பறக்கும் கொக்குக் கூட்டம். காயக் கட்டிய வேட்டி பூரித்து அலைவது போல அசையும் வெண்ணிற இறக்கைகள்.

கூடவே தில்லியிலிருந்து வரும் காலை நேரத்து விமானம் தெரிந்தது. முன் அறிவிப்பாய் அதன் முனகும் சத்தம். வர வரப் பெரிதாகிக் கொண்டே வந்தது அது. சட்டென்று அவன் பார்வை தாழ்ந்தது. ஏதோ ஒரு நினைவு அவன் நெஞ்சை விரலிப் பிடித்தது. கதிரொளியின் வெப்பு, மீன் உடலாய் மின்னும் விமானத்தில் விழும்போது, அதைப் போலவே தீப்பிடித்துச் சீறி விழுந்த ஒரு விமானத்தின் ஞாபகம்.

கையில் தட்டில் வைத்த கப்பும் சாஸருமாக அவன் தாயார் வந்து நின்றாள். காப்பியின் மேல் பனிப் புகையாய் ஆவி சுருண்டு கொண்டிருந்தது.

''ஏது? இவ்வளவு சீக்கிரம் ?''

அவன் காப்பியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு இலேசாய்ச் சிரித்துக்கொண்டான். குளிருக்கும் அந்தச் சூட்டுக்கும் இதமாக இருந்தது. விரல்கள் சூடான கோப்பையைப் பற்றிக் கொள்ளும் உணர்வும்தான்.

பல்லைத் தேய்த்து முகம் கழுவிக் கொண்டு வரும் போதே டெலிபோன் மணி 'கணகண' வென்று அடித்தது. என்னென்னவோ யூகங்கள் மனத்தில் மேலெழுந்து வரப் பார்க்கும் கிளர்ச்சி. யாராக இருக்கும்?

''மிஸ்டர் சந்திரனிடம் பேச முடியுமா?''—ஒரு பெண் குரல்.

''நான்தான் பேசுகிறேன்.''

''குட்மார்னிங். இந்த வாரம் நீங்கள் சென்னைக்கு வரலாம் என்று கேள்விப்பட்டேன். நான் மிஸ்டர் ரவியின்.... ரவிக்காக.... நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.... அவர் எழுதுவதுண்டு.... நான் தான் மீனு....''

கையெழுத்துப் புரியாத கடிதத்தின் உறையைக் கிழித்து விட்டு உள்ளே கடிதம் தெரிந்ததும் தயக்கத்தோடு உள்ளேயே வைத்து விடுவது போல், இந்தப் போனை எடுக்கும் வரை இருந்த ஆர்வம், இப்போது கலக்கமாய் மாறிற்று. அந்த அழைப்புக்கு அவன் தயாராக இல்லை.

''ரவி சொன்னதுண்டு..... நானே பேசுவதாக இருந்தேன்.''

"பங்களூரிலிருந்து அவருடைய தந்தையும் நானும் நேற்றுத்தான் சென்னைக்கு வந்தோம். உங்களைப் பார்க்க வேண்டுமென்று அவர் ரொம்ப ஆசைப்படுகிறார். எப்போது உங்களுக்குச் சௌகரியம்?"


"நானே வருகிறேன். பிற்பகல் நான்கு மணிக்கு வரலாமா?"

"ஓ!" என்று அவள் தான் தங்கியிருக்கும் வீட்டின் விலாசத்தையும் போன் நம்பரையும் கொடுத்தாள். அவன் பேச்சை முடித்து விட்டுப் போனை வைத்து விட்டான். ஒரு கணம் அவனை ஒரு திகில் இலேசாய்ச் சூழ்ந்தது. அடைத்த கதவை இடிப்பது போல, தூக்கத்தில் அயரும் இமைகளைப் புரட்டுவது போல, நினைவுகளைத் திருப்ப முயன்றான்.

மேஜையின் மேல் வெள்ளைத் துணி விரித்து அவன் தாயார் தட்டில் பலகாரத்தைப் பரிமாறிக் கொண்டிருந்தாள். எதிரே கண்ணாடிக் குப்பியில் கலசப் பூ. முகத்தில் சோப்பு நுரையுடன் கையில் கத்தியை ஏந்திய வண்ணம், கண்ணாடியில் குனிந்து பார்க்கும் போது அவன் தாயார் அவனையே அளப்பது போலப் பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. உதட்டோரங்கள் யோசனையில் குழிந்தன.

"போனில் யார் கூப்பிட்டது?"

அவன் உடனே பதில் சொல்லவில்லை. க்ஷவரம் செய்து கொள்ளும் பாவனையில் இரண்டொரு நிமிஷங்கள் சமாளிக்கலாம். அதற்குள் பதிலைத் தயார் செய்து கொள்ளலாம். என்னென்னவோ கற்பனைகள், பதிலின் வரிசைகள், யோசனைகளின் அடுக்குகள், முன்னும் பின்னுமாய்ப் பிடிபடாமல் சரி



தன. மேஜைக்கு முன் உட்கார்ந்தபின் குனிந்த தலை நிமிராமல் சொன்னான்.

"பங்களூரிலிருந்து ரவியின் தகப்பனார் வந்திருக்கிறார்."

"நீ கடிதத்தில் அடிக்கடி எழுதுவாயே! உன்னோடு எப்போதும் ஒட்டி ஒட்டிப் பழகிக் கொண்டு ஒரு பையன் இருக்கிறான் என்று?"

"ஆமாம்."

"அவனைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறாரா? அவனுக்கு எப்போது லீவு?"

யோசனையின் கடுமை தாங்காமல் அவன் முகம் கணம் தளும்பிற்று. விரல்கள் தட்டின்

தடுமாறித் துழாவின. கண்கள் திரிபோல் எரிந்தன.

"அவன் வர மாட்டான்."

"ஏன் ?"

"அவன் உயிரோடு இல்லை."

கதவு திடீரென்று திறந்தாற்போல் அவள் அதிர்ந்து போனாள். நாக்கிலிருந்து ஒருங்கே குதிக்க எத்தனையோ சொற்கள், நினைவுகள், உணர்ச்சிகள் தவித்திருக்க வேண்டும். ஆனால் பேச்சு எழவில்லை.

"என்னடாது ?"

அவன் நிமிர்ந்து பார்த்தான். "இதற்கெல்லாம் விளக்கம் ஏது அம்மா? படையில் சேர்ந்துவிட அனுமதி கொடுத்து விட்ட போதே, பிள்ளையை நாட்டுக்குக் கொடுத்து விட மனத்தைத் தைரியம் பண்ணிக் கொண்டால்தான் முடியும். ஏன் நானும்கூட—"

"ஏதாவது உளறாதே !"

அவன் மீண்டும் மௌனமானான். ரவிக்குத் தாயார் இல்லை. இருந்திருந்தால் அந்தச் செய்தியை எப்படி ஏற்றிருப்பாளோ? ஓரளவு விஷயம் தெரிந்தபின்னும் ஏதோ ஒரு நம்பிக்கையில், கற்பனை செய்து விட்ட ஒரு புதிய திருப்பத்தைப் பிடித்துக் கொண்டு, அவனிடம் செய்தி தெரிந்துகொள்ள வந்து நிற்கும் ரவியின் தந்தை ? அவனை மணம் செய்துகொள்ளக் காத்திருந்த அந்தப் பெண்?

ரவி இனி திரும்ப மாட்டான். அதை அவன் எப்படிச் சொல்வது? அந்தப் பிரிவில் அவன் தன்னுள் படும் வேதனையை அவர்களுக்கும் சொல்லி அதன் நிழலை அடையாளம் கண்டு துடிக்கவா ? சேர்ந்த நாள் முதலாய் ஒன்றாய் இழைந்து, ஒருவரிலிருந்து ஒருவர் பிரியாமல் சூல் கண்ட எண்ணங்களையும் கூடப் பரிமாறிக் கலந்து, ஒரு நாள் திடீரென்று கைநழுவி மண்ணில் சிந்தி சிதறி மறைந்துவிட்ட அவர்கள் நட்பின் கதையைக் கண்ணீரில் கன்னம் குளிர, விசிப்பில் நெற்றி சுருங்க, மீண்டும் மீண்டும் சொல்வதால் என்ன பயன்? மாலையில் தனித்தனி மணியாய் நெருடலில் உணருவது போல, நினைவில் விழிக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் வரிசையாய் எடுத்துப் பெருமூச்சுக்களிடையே உதிர்த்து என்ன பலன்? மனம் இலேசாகவா ? பிறர் மனத்தில் சுமை ஏற்றவா ?

ஏதோ ஒரு தடுமாற்றத்தோடு, இருட்டில் வழி தேடுவது போலத்தான் அந்த வீட்டுக்குள் நுழைந்தான்; மணிக்கட்டில் நான்கில் நின்ற கடிகாரமுள்ளைப் பார்த்துக்கொண்டு. அவனைப் பார்த்ததும் முன்புறம் உட்கார்ந்திருந்த அந்தப் பெண் எழுந்திருந்தாள். கன்னத்தின் கோணத்தில் ஒரு சிறு துடிப்பு. உதட்டோரத்தில் ஓர் இழுப்பு. அதற்கேற்ற சிரிப்பில் முக வார்ப்பு மாறிற்று. சிரிப்புக்கேற்ற மலர்ச்சியில் முகம் திரிந்தது: செயற்கையானதும்கூட.

"நீங்கள்தான் சந்திரன். இல்லையா?"

"ஆமாம்."

"உட்காருங்கள்.... அவரை.... ரவியின் தகப்பனாரைக் கூப்பிடுகிறேன்."

அவளிடம் தெரிந்த அந்த நிதானம், இழுத்து மூடிக் கொண்டது போல் கலக்கம் வெளிப்படாத அமைதி, கொஞ்சம் தேறி இருப்பது போலவும்கூட அந்தச் சிரிப்பு எல்லாமே அவனைச் சற்றுத் திகைக்க வைத்தன. என்ன நம்பிக்கை இந்தப் பெண்ணுக்கு ? அவன் தைரியம் கொடுக்கக் கூடிய செய்தி ஏதும் கொண்டு வந்திருப்பான் என்ற நினைப்போ ? குற்றம் புரியப் போகிறவனைப் போல ஓர் உணர்வு. தலை குனிந்தது. பூட்ஸ் காலினால் மிதியடியில் தாளம் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"வாருங்கள்."

சட்டென்று நிமிர்ந்தான். முதுமையின் கனிவும் பளபளப்புமாய் அந்த முகம். நரை விழுந்து சுருண்ட தலை மயிர். பாந்தமாய்ச் சிரிக்கும் அந்தப் பாவனை ; எத்தனையோ நாட்கள் பழகியதைப் போல. தூண்டிய திரியென, இலேசாய்க் காந்த ஒளி வீசும் கண்கள். அவருக்கா அவன் பதில் சொல்ல வேண்டும்?

"நான்தான் ரவியின் தகப்பனார். இவள் தான் அவனுக்காகக் காத்திருக்கும் பெண். என் தங்கையின் மகள் —"

அப்போதுதான் அறிமுகம் ஆனவனைப் போல் அவன் கையைக் குவித்து வணங்கினான். குவிந்த அவன் கைகள் தடுமாற்றத்தில் விரல்கள் பின்னி மடியில் விழுந்தன. எழுந்தவன், மீண்டும் உட்கார்ந்து கொண்டான்; அவர்கள் உட்கார்ந்ததைப் பார்த்ததும். காற்றில் சுற்றுயிராய் அலையும் பூவிலிருந்து சிந்தப் போகும் இதழைப் போல, அவன் வாயிலிருந்து விழக் காத்திருக்கும் அந்த வார்த்தைகள். அதை அவன் சொல்லி அவர்கள் அமைதியைக் குலைக்கவா? ஏதும் பேசாமலே இருந்து விட்டால்தான் என்ன?

"ஏப்ரலில் அவனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நாள்கூட நிச்சயம் செய்து வைத்திருக்கிறது....."

அவர் பேச்சின் நிழலாய், கன்னம் சிவப்பு பூக்க, அவள் தலை குனிந்தது. அவர் இதழ்களில் கீற்றாய் விழுந்த புன்னகை. அவர் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறார் ? அவருக்கு உண்மை தெரியாதா ? தெரிந்தும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறாரா? யாருக்காக இப்படிக் கடைசி வரை விடாப்பிடியாக ஒரு போலி நம்பிக்கையில் தொங்கிக் கொண்டிருக்கிறார்?

பார்வை நிமிரவில்லை. ஆனாலும் அந்த நிலையிலேயே அவள் மடிமேல் கிடந்த அவள் கைவிரல்கள் தெரிந்தன. சுட்டு விரலுக்கு அடுத்த விரலில் அந்த மோதிரம். மேலே நீலத்தில் அந்த ஒற்றை எழுத்து. சந்திரனின் பார்வை அதனின்று அகல முடியவில்லை. ரவி அவனிடம் சொல்லியிருக்கிறான் அதைப் பற்றி. இப்போது அது ரவியின் ஞாபகமாக மட்டுமா ? அல்லது அவளுக்கும் அவனுக்கும் இடையே நிச்சயமாகிவிட்ட மணத்தை இன்னும் பிணைத்துக் கொண்டு நிற்கும் தொடர்பா ? அதற்கு ஏது அந்த வலிமை ?

எதையோ எதிர்பார்த்துக் கொண்டு அவர்கள் காத்திருக்கிறார்கள். அவனிடம் ஒன்றும் இல்லை. அதைச் சொல்ல முடியவில்லை. அவர்கள் சொல்ல விடவில்லை. ஒரு சந்தர்ப்பம் கிடைத்தாலும் வார்த்தைகளை உதறிவிட்டு அங்கிருந்து ஓடி விடலாம். அந்த இடத்தில் இருக்கும்போது என்

ணங்கள் நெஞ்சை அழுத்தும் குழப்பத்தை அவனால் தாங்க முடியவில்லை.

அவர்கள் அவனைப் பேச விடவில்லை.

மாறி மாறி அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே போனார்கள். அவர் பேசும்போது அவருடைய கண்கள் தனக்குள்ளேயே தாழ்ந்திருந்தன. புன்னகையில் இலேசாய்க் குழையும் உதடுகள். அவர் உதட்டைப் பிதுக்கி, கைகளை விரித்து, பேச ஆரம்பித்ததை நிறுத்தி விட்டதும், கலகலவென்று குழந்தைச் சிரிப்பாய் அவள் பேச ஆரம்பித்து விடுவாள். பேசாமல் உட்கார்ந்திருந்த அவன் கைவிரல்கள், தாமாகவே மொட்டவிழ்ந்த மலரின் உருவை அமைப்பது போல, மார்பின் மேல் குவிந்து மடியும்.

அவனுக்குப் பிடித்த உணவு, உடைகள்; அவன் விரும்பிக் கேட்கும் இசை; அவனுக்கு இசைவாய் அமைந்த பொழுது போக்குகள்; ஒவ்வொன்றுக்கும் உதாரணமாய் நிகழ்ச்சிகள். அவர்கள் இருவருமாய் ரவியின் நினைவுக்கு அங்கே உயிரூட்டிக்கொண்டிருந்தார்கள்.

''மீனு! கொஞ்சம் காப்பியும் பிஸ்கட்டும் கொண்டு வா.''

அவள் மரியாதையாய் வேண்டாமென்று சொல்ல நினைத்தான். ஆனால் அவர் வேண்டாமென்றுதான் அவளை உள்ளே அனுப்பியது போல இருந்தது. அவனுடன் தனியாகப் பேசவா ?

அவள் போனதும் அவர் முகம் சட்டென்று மாறிற்று. சிரிப்பும் மலர்ச்சியும் மறைந்து இருள் கவிந்தது. யோசனையோடு மோவாயைக் கையில் தேக்கிக் கொண்டார்.

''எல்லைப் பாதுகாப்புக்குச் சென்ற விமானத்துக்கு நேர்ந்த விபத்தைக் குறித்து வந்த செய்தியைப் பேப்பரிலே படித்தேன். ரவியைப் பற்றி அதில் குறிப்பிட்டிருந்தது.''

அவன் குலுங்கி நிமிர்ந்தான். ''அவ்வளவு தானா? உங்களுக்குத் தபாலில் செய்தி வரவில்லை....?''

''இல்லை. வர வேண்டாம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். உங்களிடம் கேட்டால் தெரியும் என்று இருந்து விட்டேன். ஒரு வேளை, ஏதோ ஓர் அதிசயமாய் அவன் உயிர் பிழைத்திருக்கலாம் என்று— இந்தச் செய்திகள் தவறாக இருந்து விடக் கூடாதா என்று – என்னென்னவோ நினைக்கத் தோன்றுகிறது இல்லையா ?''

''செய்தியில் தவறு இல்லை.''

''ரவி இனி திரும்ப மாட்டான் என்று உறுதியாகச் சொல்கிறீர்களா ?''

''ஆமாம்'' என்ற முறையில் அவன் தலையை அசைத்தான். இறுகிய தாடைகளில் மாலைகள் வழிந்தன. ஏதோ ஒரு முயற்சியில் தன் கடமையை ஒரு விதமாக முடித்து விட்டான்.

''மிஸ்டர் சந்திரன்! வருத்தப்படாதீர்கள். கண்ணைத் துடைத்துக் கொள்ளுங்கள்.'' இரு கைகளாலும் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார் அவர். பெருமூச் செறிந்தவண்ணம் அவன் தலை நிமிர்ந்தான். அவருடைய பார்வை அவனைத் துளைத்தது.

''சந்திரன்! உங்களிடம் ஒரு வேண்டுகோள். என்னைப் போல் அந்தப் பெண் மீனுவும் ஒரு வேளை ரவி இன்னும் உயிர் பிழைத்திருக்கலாம் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவளிடம் இதைப் போலத் தீர்மானமாய்ச் சொல்லி விடாதீர்கள். அவள் தாங்க மாட்டாள். அவளுக்கு மனம் அதிர்ந்து விடாமல் பேசிக் கொண்டே வந்திருக்கிறேன் நான். தெம்பாக இருப்பது போலப் பழகிக் கொண்டு வந்திருக்கிறேன். நான் எத்தனையோ கஷ்டங்களைக் கண்டவன். என்னால் பொறுத்துக் கொள்ள முடியும். அவளால் தாங்க முடியாது.''

அவர் தம்முள் சேர்த்து வைத்திருந்த மனோ பலம் அனைத்தும் அப்போது செலவாகி விட்டது. அவர் ஒரு குழந்தையைப் போல் அழத் தொடங்கினார். அந்த உணர்ச்சிகளின் போராட்டம் சந்திரனின் மனத்தில் ஓர் அச்சத்தையே விளைவித்தது. ஆனாலும் அந்த மன உறுதியின் கம்பீரத்தையும் அவனால் தரிசிக்க முடிந்தது. இந்த யுத்தத்துக்கு எப்படி ஒரு யானைப் பசி? அதன் வாயில் விழுந்து பொருளும் சுடும் இழந்து பிசுபிசுத்துச் சூனியமாகி விட்ட அந்தக் குடும்பத்தின் எதிர்காலம்?

அந்தச் சோகம் கருமேகத்தின் தழுவலாய் அவன் மேல் கவிந்தது. மீனு உள்ளிருந்து வரும் காலடிச் சத்தம் கேட்டு அவர் தம்மைத் தேற்றிக் கொண்டு நிமிர்ந்ததைப் பார்த்ததும் அவனும் தன்னை அந்த அழுத்தத்திலிருந்து

விடுவித்துக் கொண்டான். ஆனாலும் அவனால் சிறிது நேரம் பேச முடியவில்லை. தட்டில் வைத்திருந்த கோப்பையை எடுத்து மௌனமாய்த் தேநீரை அருந்தத் தொடங்கினான்.

கடற்கரைக் காற்று குளிர்ந்து வீசிற்று. அவர்கள் இருவரும் வற்புறுத்தி அழைத்ததினால் சந்திரன் அவர்களுடன் அங்கே வர வேண்டியதாயிற்று. அவர்களுடன் தான் சற்று நேரம் இருந்தால், அவர்களுக்கு ஓர் ஆறுதலாக இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவர்களுடைய உணர்ச்சிகளை ஆட்டுவிக்கும் மூல சக்தியாக இருந்த நண்பன் மறைவை அவனால் எப்படி ஈடுகட்ட முடியும்? கைக்குள் நெருப்புத் துண்டை வைத்து மூடிக் கொண்டு சிரிக்க முயலும் அந்தப் பெரியவரின் வேதனையை எத்தனை நேரம் சகித்துக் கொள்ள முடியும் அவனால்?

"சற்று நேரம் பேசிக் கொண்டிருங்கள். இதோ வந்து விட்டேன்."

அவர் தம்முடைய நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டு உலாவப் போய் விட்டார். யோசனையில் மணலை அளைந்து கொண்டிருந்த சந்திரனின் விரல்கள் நடுங்கின.

அவள் என்ன பேசப் போகிறாள்? அவனை என்ன கேட்கப் போகிறாள் ?

அவள் பார்வை தூரத்தில் வெறித்து நின்றது. கடலில் இரண்டொருவர் அமிழ்ந்து நீந்தி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவள் இதழ்களில் ஒரு புன்னகை உறைந்து நின்றது. மணலைச் சமமாய் நீவிக் கொண்டே பேசினாள். "அவருக்கு நீந்துவது என்றும் பிடிக்கும். ஜலத்தில் மல்லாந்து படுத்து மணிக்கணக்காய்க் கிடப்பார். இங்கே நீச்சல் குளத்துக்குப் பகல் வேளையில் வருவோம். நானும் நீந்தக் கற்றுக் கொள்ள வேணும் என்று அவருக்கு ஓர் ஆசை. எனக்குத்தான் ஒரு சங்கோசம்."

மெல்லிய இருளில் அவள் பற்கள் பளீரென்றன. அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. திரும்பிக் கொண்டான். தூரத்தில் கலங்கரை விளக்கம். அதன் சுற்றை ஒளி தெரிய ஆரம்பித்து விட்டது. எத்தனையோ கப்பல்களுக்கு நம்பிக்கை தரும் ஒளி அது. அவனால் அவர்களுக்கு ஏன் தேறுதலாய் ஒரு வார்த்தைகூடச் சொல்ல முடியவில்லை ?

கரு வானில் ஒரு நட்சத்திரம் தனித்து நிலை கலைந்து ஊசலாடிற்று. அவன் மனத்தில் அது ஒரு பீதியை விதைத்தது. அவள் கேட்கப் போகிறாள்..... அவர் சொல்ல வேண்டாமென்று கூறியிருக்கிறார்... அவன் எப்படிப் போய் சொல்வது ?

"ரவியைப் பற்றிய செய்தியின் உண்மை எனக்குத் தெரியும்."

அவனுக்குத் 'திக்' என்று ஆயிற்று. ஆனால் அவள் குரலில் தயக்கம் இல்லை.

"ரவியின் தகப்பனார் செய்தியைப் படித்ததோடு சரி. ரவி இன்னும் ஒரு வேளை உயிர் பிழைத்திருக்கலாம் என்றே அவர் எண்ணியிருக்கிறார். ஹெட்குவார்ட்டர்ஸிலிருந்துவந்த கடிதத்தை நான் வாங்கி உள்ளே வைத்து விட்டேன். அவருக்கு அது தெரியாது. ஏதோ ஒரு நம்பிக்கையில் அவர் தம்மைத் திடப்படுத்திக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார். அதைக் குலைக்க எனக்கு இஷ்டமில்லை."



மனைவி : இது ஒன்பது கெஜம் டெர்ரிலின் ஸாரி. இதை வாங்கினா எனக்கு ஒரு புடவை ; உங்களுக்கு ஒரு ஷர்ட் இரண்டு பேருக்கும் ஆகும். ஒரே கல்லிலே இரண்டு மாங்காய் !

நீண்ட இமைகளின் கீழிருந்து பெரிய கரு விழிகள் அவனைத் துயரத்துடன் நோக்கின. அவன் கண் கலங்கிற்று.

"உங்களிடம் ஒரு வேண்டுகோள். உங்களுக்கு உண்மை தெரியும். அதை அவரிடம் தீர்மானமாய்ச் சொல்லி விடாதீர்கள்; அவர் கேட்டாலும்கூட. அவர் தாங்க மாட்டார். அவருடைய மனம் அதிர்ந்து விடாமல் பேசிக் கொண்டே வந்திருக்கிறேன் நான். தெம்பாக இருப்பது போலப் பழகிக் கொண்டு வந்திருக்கிறேன்; என்னுடைய உள்ளம் படும் வேதனையை முக மலர்ச்சியால் மறைத்துக் கொண்டு. என்னால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியும். அவரால் தாங்க முடியாது. வாழ்க்கையில் அவர் எத்தனையோ கஷ்டங்களைக் கண்டவர். அவருக்கு இதுவாவது மிச்சமாய் இருக்கட்டும்."

அதுவரை தைரியமாக இருந்தவள் சட்டென்று உடைந்து போனாள். சேலையின் தலைப்பினால் முகத்தை மூடி விம்மினாள்.

தூரத்தில் ரவியின் தகப்பனார் திரும்ப நடந்து வருவது தெரிந்தது. ஒரு நிமிஷம் அதை அவளிடம் சொல்ல வேண்டாமென்று ஓர் எண்ணம். —நொந்து சலித்த மனத்தில் ஏற்படும் விரக்தி — அவனைத் தூண்டிற்று. அந்த நினைப்பை மென்று விழுங்கினான்.

"தைரியமாய் இருங்கள்...... அதோ அவர் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்."

அவள் கண்களை அவசரம் அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.






முஷ்டாக் அலி

சென்னையில் நியூஸி லந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் நடந்த டெஸ்ட் பந்தயத்தில் இந்திய ஆட்டக்காரர்கள்பந்தை 'பிளாக்' செய்து ஆட்டத்தைப் போரடித்த போதெல்லாம், ''ஸார்! இப்போ முஷ்டாக் அலி இல்லாமல் போய்விட்டார். இப்படியா பந்தை 'பிளாக்' செய்து நமக்குத் தொல்லை கொடுப்பார்? ஒவ்வொரு பந்தும் ஸிக்ஸரும் பவுண்டரியுமா ஆட்டம் கன ஜோராக இருக்குமே?'' என்று ரஸிகர்கள் பக்கம் குரல் எழுந்தது.

இந்தியாவின்பெருமையை உயர்த்திய முஷ்டாக் அலி, வி. கே. நாயுடு ஆகியோரின் வாரிசுகள் என்று சொல்லக் கூடியவர்கள் பலர் தோன்ற வேண்டும் என்பதற்காக இந்தத் துறையில் அநுபவம் மிக்கவர்களின்அபிப்பிராயங்களை இங்கே திரட்டித் தந்திருக்கிறோம்.

''உலகத்திலேயே நம் இந்திய நாட்டில்தான் கிரிக்கெட் டெஸ்ட் பந்தயங்களுக்குப் பல்லாயிரக்கணக்கில் மக்கள் வந்து பார்க்கிறார்கள் என்ற பெருமை உண்டு. சமீப காலத்தில் இந்த டெஸ்ட் பந்தயங்களுக்கு வரும் கூட்டம் குறைந்துதானிருக்கிறது. இது நாளுக்கு நாள் இன்னும் குறைந்து போய்விடுமோ என்று பயமாகத்தான் இருக்கிறது. டெஸ்ட் மாட்சுகள் ஒரு முடிவில்லாமல் 'டிரா'வாகி ஆட்டம் போரடிப்பது ஒரு காரணமாயிருக்கலாம். இவ்வொரு டெஸ்ட் முடிந்து நாலைந்து மாதங்களுக்குள்ளேயே மற்றொரு டெஸ்ட் பந்தயத்தை நடத்தியதும் காரணமாயிருக்கலாமோ என்னவோ?'' என்று பூர்வபீடிகை போட்டார் கிரிக்கெட் சங்கக் காரியதரிசி ஸ்ரீராம்.

''கூட்டக் குறைவுக்குக் காரணம் வேறு ஏதாக இருந்தாலும் சரி, ஆட்டம் 'போர'டித்தது என்று ரஸிகர்கள் கருதியது வாஸ்தவந்தானே?''

''ஆட்டம் 'போர்' அடிக்கத்தான் செய்தது. சென்னையில் நிகழ்ந்தது முதல் டெஸ்ட். நியூஸிலந்து கோஷ்டியில் ரீட், சட்கிளிப் தவிர மற்றவர்களின் ஆட்டத்தைப் பற்றிக் காப்டன் பட்டாடிக்குக் கேள்விப்பட்டிருக்க இயலாது. ஆகவே எதிராளியின் பலத்தைத் தெரிந்து கொள்வதற்காகப் பட்டாடி முதல் டெஸ்டில் அவர்களை நோட்டம் பார்த்திருக்கலாம்.''

''பட்டாடி என்ன செய்வார்? இந்திய கோஷ்டியில் இந்த டெஸ்டில் விரைவாகப் பந்து வீசும் நிபுணர்கள் (Fast bowlers) இல்லையே? இருக்கும் தேசாயையும் இந்த டெஸ்டில் சேர்க்கவில்லையே?'' என்ற சந்தேகத்தைக் கிளப்பினோம்.

ஸ்ரீராம்




''ஆமாம்! இந்திய கோஷ்டிக்கு விரைவாகப் பந்து வீசும் நிபுணர்கள் இல்லாதது பெருங்குறைதான். பாஸ்ட்பௌலர்களால்தான் எண்ணிக்கை எதிர்த்த கோஷ்டிக்கு ஏறுமல் தடுக்க முடியும். ஒவ்வொரு ராஜ்யமும் ரஞ்சித் கோப்பையிலும், மற்ற கிரிக்கெட் பந்தயங்களிலும்


பிராட்மன், ஹட்டன்
வி. கே. நாயுடு, மெர்ச்செண்டு







மீண்டும் வருவாரா?



கிடைக்கக் கூடிய 'பாஸ்ட் பௌலர்'களை நன்கு அறிமுகப் படுத்தி, அவர்களுக்குப் பயிற்சியளித்து முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்.''

''ஆம்! ஆனால், இல்கிரைஸ்டு ஆகிய பந்து வீச்சு நிபுணர்களால்தானே மேற்கிந்தியத் தீவினருக்கு ஆட்டம் பல தடவை வெற்றி முனையில் திரும்ப வழி ஏற்படுகிறது? 'ஒரு வழிப் பாதை' போல் பாட்ஸ்மேன் மட்டும் வெற்றிப் பாதையைச் சமைத்துவிட முடியாது. நல்ல விரைவாகப் பந்து வீசும் நிபுணர்களும் வேண்டும்!''

''பாஸ்ட் பௌலர்களும் பாட்ஸ்மேன்களும்தான் ஆட்டத்துக்கு விறுவிறுப்பூட்டுகிறார்கள் என்பதில்லை. மைதானத்தில் உள்ள 'பிச்'சும் ஓரளவு ஆட்டத்தின் முடிவுக்குக் காரணமாக இருக்கிறது! நம் சென்னை நேரு ஸ்டேடிய 'பிச்' உயிரற்ற 'பிச்'. அது அவ்வளவாக பௌலர்களுக்கு உறுதுணையாக இல்லை. விக்கெட் மடமடவென்று விழுந்தால்தானே ஆட்டம் விறுவிறுப்பாக அமையும்?'' என்றார் ஸ்ரீராம்.

செலக்ஷன் கமிட்டியில் ஒருவராக முன்பு விளங்கியவரும் டெஸ்ட் அனுபவம் மிக்கவரும், சிறந்த ஆட்டக்காரருமான திரு வி. ராமசாமியிடம் சென்றோம்.

''செலக்ஷன் கமிட்டி பிரும்மாக்கள் கையில்தான் அநேகமாக ஆட்டத்தின் தலைவிதி இருக்கிறது. கமிட்டியினர் திறமையையே குறிக்கோளாகக் கொண்டு ஆட்டக்காரர்களைத் தேர்ந்தெடுத்தால் நிச்சயம் பலன் கிட்டும்'' என்று தம் அனுபவபூர்வமான ரகசியத்தைத் தெரியப்படுத்தினார் திரு வி. ராமசாமி.

வி. ராமசாமி



''நம் இந்திய கோஷ்டியில் பாஸ்ட் பௌலர்கள் இல்லை என்ற குறையை நிவர்த்திக்க என்ன செய்யலாம்?''

''பாஸ்ட் பௌலர்கள் இன்று இல்லையே என்று கதறுகிறார்கள். ஆனால் பிரபல இங்கிலாந்து பந்து வீச்சு நிபுணர் அலான் மாஸும் செலக்டர் ஜேயும் சிரமப்பட்டு நமது இருபது இளைஞர்களது பௌலிங்கைப் பார்த்து, 'இவர்களுக்குப் பாஸ்ட் பௌலர்களாகப் பயிற்சியளித்தால் நல்ல பலன் கிட்டும்' என்று கிரிக்கெட் போர்டுக்குத் தெரிவித்தார்கள். அது சம்பந்தமாக இதுவரை எந்த முயற்சியும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இது தவிர முதல்தர 'ஆப் ஸ்பின்னர்'களும், நான்கைந்து 'லெக் ஸ்பின்னர்'களும் நல்ல பயிற்சியுடன் வந்தால் இந்திய கோஷ்டியின் ஆட்டத் திறமை பெருகும்!'' என்று எடுத்துக் கூறினார் திரு வி. ராமசாமி.

இந்தியாவுக்கு முன்னாட்களில் தம் கிரிக்கெட் ஆட்டத்தினால் புகழ் தேடித் தந்தவரில் திரு எம். ஜே.

ஹஸாரே, முஷ்டாக் அலி,
மன்காட், வால்காட்

கோபாலனும் ஒருவர். அவரிடம் ஆட்டம் சூடு பிறப்பதற்கான வழிமுறைகளைக் கேட்டோம்.

''இந்தக் காலத்தில் பாட்ஸ்மேன்கள் ஸிக்ஸராகவும் பவுண்டரியாகவும் அடித்தால்தான் ஆட்டம் என்று நினைக்கிறார்கள். ஒத்தை ரன்கள் எடுப்பது அகௌரவம் என்று கருதுகிறார்கள். ஆனால் பாட்ஸ்மேன் ஒத்தை ரன் அடி எடுப்பதால் அது பௌலரைத் திணறச் செய்யும்; காப்டனை பீல்டிங் அடிக்கடி மாற்றச் செய்யும். விரைவாகப் பக்கத்தில் தட்டி விட்டு ரன் ஓடுவதைக் கண்டதும் காப்டன் பீல்டிங்கை நெருங்கி வரச் செய்வார். இந்தச் சமயத்தில் தலைக்கு மேலாகப் பவுண்டரி கிளப்பினால் பீல்டிங் செய்வது எதிர்த்த கோஷ்டிக்குச் சிரமம். அவர்கள் என்ன செய்வதென்று திணறுவார்கள். ஆட்டமும் விறுவிறுப்படையும்; பார்க்கவும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ரன்களும் கிடுகிடு என்று ஏறினதே தெரியாமல் உயர்ந்து விடும். இந்த மாதிரி பாட்ஸ்மேன்கள் சமயமறிந்து ஆடத்தொடங்கினால் இந்த 'போர்' தலை காட்டாது!'' என்றார் திரு எம். ஜே. கோபாலன்.

எம். ஜே. கோபாலன்



நியூஸிலந்து கோஷ்டிக்கு எதிராக 1956ம் வருஷத்தில் பெங்களூரில் ஆடி ஒன்னேகால் சதம் போட்டு ரஸிகர்களின் மனத்தில் இடம் கொண்டவர் திரு வி. டி. கோபிநாத். அவர் தம் அனுபவத்திலிருந்து கூறியவற்றைக் கேட்கலாம்.

''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது பழமொழி. மனத் திட்பம் உள்ள பாட்ஸ்மேன்கள் எந்த பௌலிங்கையும் தைரியத்துடன் அடித்து நொறுக்கிவிடுவார்கள். விக்கெட் போய்விடுமோ என்ற கிலி ஏற்பட்டால் அந்தக் கிலியே ஆட்டத்தையும் கொன்று அவரையும் 'அவுட்'டாக்கி மைதானத்தை விட்டு அனுப்பிவிடும். பாட்ஸ்மேன்கள் பௌலர் பந்து வீச்சைக் கண்டு அதற்கு மதிப்பளித்து ஆடத் தொடங்கினால் வந்தது ஆபத்து. கொஞ்சம் கொஞ்சமாக அந்த பௌலரும் நேர்த்தியாக வீசத் தொடங்கி கடைசியில் விக்கெட்டையே வீழ்த்தி விடுவார். அடிக்க வேண்டிய பந்தை அடிக்காமல் 'பிளாக்' செய்வதினால் ஆபத்துத்தான் மிகுமே தவிர அது பாதுகாப்பான ஆட்டமாகாது. நம் இந்திய ஆட்டக்காரர்கள் மேற்கிந்தியத் தீவினரின் ஆட்ட முறையைப் பின்பற்றுவது நலம். அவர்கள் ஐம்பது ரன்களுக்குள் ஐந்து விக்கெட்டை இழந்தாலும் கலவைப்படாமல் நன்றாகப் பந்தை அடித்தே ஆடுவார்கள்'' என்று தம் மனத்தில் பட்டதை எடுத்துச் சொன்னார் கோபிநாத்.

கோபிநாத்



திரு குருநாதன் நல்ல கிரிக்கெட் ஆட்டக்காரர் மட்டுமல்ல; பல வருஷ காலம் 'ஹிந்து'வில் கிரிக்கெட் விமரிசனம் எழுதி அதில் உலகப் புகழ் பெற்றவர். அவரிடம் சென்று, ''இப்பொழுதெல்லாம் கிரிக்கெட் டெஸ்டில் ஆட்டம் 'டல்' அடிக்கிறதே, இதற்கு ஏதாவது தாங்கள் வழி சொல்லக் கூடாதா?'' என்றோம்.

குருநாதன்



''ஆட்டம் 'டல்' அடிக்கிறதா? எனக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லையே? யார் 'டல்' அடிக்கிறது என்று சொல்கிறீர்கள்!'' என்றார் வியப்புடன்.


''கிரிக்கெட் ரஸிகர்கள்தான். உங்களுக்கு 'போர்' அடிக்கவில்லையா? அதிசயம்தான்!''

''ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். இங்கிலாந்து டெஸ்ட் ஒன்றில் பெரிய பாட்ஸ்மேன் ஹட்டனுக்கு 'எட்டு ஓவர்'கள் மன்காடு பந்து வீசினார். மன்காடு வீசிய பந்தில் ஒரு ரன்கூட அடிக்கவில்லை ஹட்டன். ஒன்பதாவது ஓவரில் ஹட்டன் ஒரு ரன் எடுத்தார். இதில் யாரைப் பாராட்டுவீர்கள்? 'பெரிய பாட்ஸ்மேன் ஹட்டனும்! எட்டு ஓவரில் ஒரு ரன்கூட அவர் எடுக்கவில்லை. போர் அடித்து விட்டாரே இந்த ஹட்டன்' என்றுதானே தூற்றுவீர்கள்! ஆனால் பௌலரின் சிறப்பை உற்றுப் பார்ப்பீர்களா? மன்காடு அழகாக 'பீல்டிங்' அமைத்து அருனப்பட்ட ஹட்டனையும் எட்டு ஓவருக்கு ஒரு ரன்கூட எடுக்க விடாமல் பந்து வீசினாரே, அந்தப் பெருமையைச் சொன்னால் என்ன? கிரிக்கெட் டெக்னிக்கைப் பல கோணங்களிலும் ஆராயத் தொடங்கினால் இந்தப் 'போர்' பிரச்னை தலைகாட்டாது. பாட்ஸ்மேன் அழகாக ஸிக்ஸரும், பவுண்டரியும் அடித்தால்தானா ஆட்டம் ஜோர்? பௌலர் நல்ல பாட்ஸ்மேனை அடிக்க விடாமல் செய்வதும் சிறந்த 'டெக்னிக்'குத்தானே? அதை ஏன் மெச்ச மாட்டேன் என்கிறீர்கள்? ஆட்டத்துக்கு ஒரு 'முடிவு' ஏற்பட்டால்தானா ரஸிக்க முடியும்? அதில்லாமல் ஆட்டத்தின் இருப்பங்கள், பந்து வீச்சு, பீல்டிங் ஆகியவற்றிலுள்ள கலைத் திறனை அனுபவிக்கலாமே? என்னைக் கேட்டால் ஒரு கட்சி தோல்வியடைவது போலிருந்து, அந்தத் தோல்வியிலிருந்து சிரமப்பட்டு மீண்டு, ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடிக்கிறதே அதுவே ஒரு பெரிய சாதனை. இப்பொழுது சொல்லுங்கள், ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்ததினாலேயே 'டல்' என்று சொல்லிவிடலாமா?'' என்று வாதாடினார் திரு குருநாதன்.

''நாங்கள் வெற்றிகரமாக வாபஸ் வாங்குகிறோம்....!''

—குண்டுமணி


உங்கள்
இருமல்
விரைவில்
அகலும்
தொண்டை
மற்றும்
மார்பு உபாதை
களுக்கு உகந்த
பெப்ஸ்
வில்லைகளை உட்கொள்ளுங்கள்.
பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணம
ளிக்கும் ஆவிபோன்ற அதன் சத்து வலி
யைக் குறைக்கவும், தொண்டைப் புண்,
இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் கார
ணமான கிருமிகளைக் கொல்ல உதவுவ
துமான வேலையைச் செய்வதை உணருங்
கள். உடனடி இதமளிக்கிறது பெப்ஸ்.
கெடுதி விளைவிக்கும்
மருந்துகள் எதுவும்
இதில் கிடையாது.
குழந்தைகளுக்கும்
பயமின்றி
அளிக்கலாம்.
ப்ராங்கைடிஸ்
தொண்டைப் புண்,
மண்டைநீர், அடைப்பு
ஜலதோஷம் மற்றும்
இருமலுக்கு உடனடி
இதமளிக்கிறது.
எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.
ஸி. இ. ஃபுல்ஃபோர்ட் (இந்தியா) பிரை. லிட்.


பவுன் சூரியன்
மார்க் புகையிலை
காரைக்குடி



கந்தன்

திருமுருக
கிருபானந்தவாரியார்

20. அண்டங்களை ஆண்ட அவுணர்கோன்

திக்விஜயம் புறப்பட்ட சூரபன்மன் அசுர சேனைகளுடன் புறப்பட்டு அளகாபுரியை அடைந்தான். இந்திர ஞாலம் என்னும் தன் தேரில் ஏறிக் கொண்டான்.

சிவபெருமானால் அளிக்கப்பட்ட இந்திர ஞாலத்தேர் சூரியனுடைய தேரை விட ஒளி பொருந்தியது; விசாலமானது; அதில் ஏறினால் இமைக்கின்ற நேரத்தில் எங்கு வேண்டுமானாலும் சென்று திரும்பி விடலாம்; இத்தேர் பகைவர்களின் தேர் மீது பாய்ந்து அழித்து விடும். ஒரு கோடிக் குதிரைகள் பூட்டப் பெற்ற இந்தத் தேரின் மணிகள் ஒலித்தால் இடியொலி போன்றிருக்கும்.

பல்லாயிரம் யாளிகளும், குதிரைகளும், பூதங்களும் பூட்டப்பட்ட தேரில் சிங்கமுகனும், பதினாயிரம் குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் தாரகனும் ஏறிச் சென்றனர். அவர்களைச் சூழ்ந்து எண்ணற்ற அசுரப் படைகள் சென்றன. சூரபன்மன் குபேரனுடைய நகரத்தை வளைத்துக் கொண்டான்.

சூரபன்மனும் அவனது சேனைகளும் அளகாபுரியை வளைத்துக் கொண்டதை யறிந்த குபேரன் முதலில் அஞ்சி நடுங்கினான். சிவபெருமானிடம் வரம் பெற்ற அசுரர்களை வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து, புஷ்பக விமானத்தில் ஏறிச் சென்று சூரபன்மனை யடைந்தான். அவனைக் கண்டதும் வணங்கி, ''நான் உங்கள் அடியவன்'' என்று காலில் விழுந்தான். ''இந்த வாக்கிலிருந்து நீ தவறக் கூடாது'' என்று சொல்லி அனுப்பி விட்டான் சூரபன்மன். அசுரப் படைகள் அளகாபுரி நகரத்தினுள் புகுந்து செல்வங்களை யெல்லாம் சூறை யிட்டன. செல்வமெல்லாம் இழந்த அளகாபுரி களையிழந்து கிடந்தது.

குபேரனை அடிமை கொண்ட சூரபன்மன் அளகாபுரியிலிருந்து வடகிழக்கே சென்றான். அது ஈசானருத்திர

கருணை



ருடைய தலம் என்று அறிந்து அங்கிருந்து இந்திர உலகம் சென்றான்.

சூரபன்மன் இந்திர உலகம் வருவதை அறிந்த இந்திரன் அஞ்சி நடுங்கி, சுவர்க்கத்தில் போய் ஒளிந்து கொண்டான். இந்திரன் சுவர்க்கத்தில் ஒளிந்து கொண்ட செய்தி சூரபன்மனுக்குத் தெரிந்தது. உடனே அவன் சுவர்க்கத்தைக் கொளுத்தினான். பின்னர் அங்கிருந்து தன் சேனைகளுடன் அக்கினி பகவானின் நகரத்துக்குச் சென்றான். சூரபன்மன் வருவதையறிந்த அக்கினி பகவான் மிகுந்த சீற்றம் கொண்டு, பல கோடி வீரர்களுடன் வந்து சூரபன்மனை எதிர்த்தார். இருதரப்பினருக்கும் கடுமையான யுத்தம் நடந்தது. அக்கினி பகவான் பெரிய உருவம் எடுத்து அசுரர்களை வளைத்து அழித்துக் கொண்டிருந்தார். அப்போது தாரகன் மிகுந்த கோபத்துடன் சிவாஸ்திரம் விடுப்பதற்காக வழிபாடு செய்தான். சிவாஸ்திரத்தினால் உலகமே அழிந்து விடும் என்று கருதிய அக்கினி பகவான் தமது பேருருவத்தைக் குறுக்கிக் கொண்டு, தாரகாசுரன் எதிரில் வந்து வணங்கி, "நான் செய்த குற்றத்தை மன்னித்து விடுங்கள்; சிவாஸ்திரத்தை ஏவ வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார். அக்கினி அடிபணிந்ததால் தாரகனின் கோபம் நீங்கியது.

அப்போது அசுரர்கள் அக்கினி தேவரைக் கொல்ல முற்பட்டார்கள். அவர்களை யெல்லாம் தடுத்த தாரகன் அக்கினியிடம், "நீ நம் அடிமையானதால் உயிர்ப் பிச்சை கொடுத்தோம்" என்று கூறி அனுப்பினான். அசுரப் படைகள் அக்கினி தேவரின் நகரத்துள் புகுந்து செல்வங்களை யெல்லாம் கொள்ளையடித்தன.

பின்னர் சூரபன்மன் இயமபுரிக்குச் சென்றான். ஒரு தூதன், சூரபன்மன் வரும் செய்தியை இயமனிடம் தெரிவித்தான்.

இயமனும் நடுங்கினான்.

சேனைகள் சூழச் சூரபன்மனிடம் வந்து வணங்கி நின்றான் இயமன். அவன் தன்னிடம் அடிமையாக வந்து நிற்ப

தைக் கண்ட சூரபன்மன் மிக்க மகிழ்ச்சி யடைந்தான். ''நீ என் ஏவலைச் செய்து கொண்டு இங்கேயே இரு'' என்று பணித்தான். சூரனுடைய சேனைகள் இயமபுரியில் புகுந்து செல்வங்களை யெல்லாம் அள்ளிக் கொண்டன.

சூரபன்மன் திக்விஜயத்தைத் தொடர்ந்தான். படைகளுடன் தென் மேற்குத் திசை நோக்கிச் சென்று நிருதியின் மீது போருக்கு ஆயத்த மானான். சிவபெருமானிடம் பெரு வரம் பெற்ற சூரனுடன் யார்தான் போரிட முடியும்? நிருதி தன் சேனைகளுடன் சென்று சூரபன்மனை வணங்கி, ''நான் உன் சுற்றம்'' என்று அடிபணிந்தான். சூரபன்மன் மகிழ்ச்சியுற்று நாகர் உலகுக் குச் சென்றான். ஆதிசேடன் சூரபன் மனை எதிர்த்தான். சூரபன்மனே வெற்றி பெற்றான்; நாகருலகச் செல்வம் முழுவதையும் தன் வசமாக்கிக் கொண் டான். தேவர்களிடம் முன்பு ஆதி சேடன் வாங்கி வைத்திருந்த அமிர்தத் தைச் சூரன் பெற்றுத் தன் தம்பிய ரோடு உண்டான்.

எல்லாத் திசைகளிலும் புகழை நிலைநாட்டிய சூரன் சாகத் தீவைக் கடந்து பாற்கடலுக்குச் சென்றான். அவுணப் படைகள் பாற்கடலைக் கலக் கின. ஆதிசேடன் மீது அறிதுயில் கொண் டிருந்த திருமால் துயிலை விட்டு நீங்கினார். நிலமகளும் திருமகளும் அச்சத்தால் திருமாலைத் தழுவிக் கொண்டார்கள். ''பயப்படாதீர்கள்'' என்று அவர்க ளுக்கு ஆறுதல் கூறிய திருமால் சினங் கொண்டு கருடன் மீது ஏறிப் பெருமழை பொழிவது போல் அசுரர்மீது பாணங் களைப் பொழிந்தார். அசுர சேனைகள் சூறாவளியில் சிதறுண்ட மேகங்கள் போலப் பாண மழையில் பதைத்து ஓடின. தேவர்கள் ஆரவாரம்செய்தனர்.

அவுணப் படைகள் தோற்று ஓடுவ தைக் கண்ட தாரகன், அவர்களுக்கு ஊக்கமளித்துக் கோபத்துடன் திருமாலோடு நெடுநேரம் போர் புரிந் தான்; கணைகளைப் பொழிந்து ஆர வாரம் செய்தான். திருமால் அள வற்ற கணைகளை அவன் மீது செலுத் தித் தேரையும் தேர்ப் பாகனையும் வீழ்த் தினார். பின்னர், திருமாலும் தாரக னும் மாய வடிவங்களைத் தாங்கி நான்கு நாட்கள் போர் புரிந்தனர். திருமால் கோடி பாணங்களை விடுத் துத் தாரகனின் வில், தேர், குதிரை முதலியவற்றை அழித்தார். தாரகன் வெகுண்டு தண்டாயுதத்தை ஏந்தி அண்டங்கள் நடுங்க யுத்தத்தில் தீவிர மாக ஈடுபட்டான். திருமாலை உக்கிர மாக எதிர்த்தான். திருமால் விடுத்த கணைகளை யெல்லாம் தண்டினால் தடுத்தான் சூரன். திருமால் சக்கராயு தத்தை விட்டார். அது தாரகன் கழுத்தை அறுத்துத் தள்ளாமல் செம் பொன்னாரமாக விழுந்தது.

தாரகனின் தவப் பெருமையைக் கண்ட திருமால் வியப்புற்று, அவனு டன் சமாதானம் செய்து கொண்டார். ''உனக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை. நீடூழி காலம் வாழ்க'' என்று வாழ்த்தினார்.

சூரபன்மன் முன் சென்று நடந்த வற்றை யெல்லாம் தாரகன் தெரிவித் தான். அவற்றைக் கேட்டு மகிழ்ந்த சூரபன்மன் தன் படைகளோடு புறப் பட்டுச் சுவர்க்கலோகத்தை யடைந் தான். சூரபன்மன் சுவர்க்கம் வந்திருக் கும் விஷயமறிந்த இந்திரன் அஞ்சி நடுங் கினான். சூரனைத் தன்னால் நிச்சயமாக வெல்ல முடியாது என்பதால் தேவ ராஜன் இந்திராணியுடன் குயில் உருவம் கொண்டு பறந்து ஓடி ஒளிந்தான்.

அரசனை இழந்த அமரர் அனைவரும் சூரபன்மனைப் பணிந்து ஏவல் செய்வ ராயினர். அசுரர்கள் இந்திரனைத் தேடி யலைந்தும் அவன் கிடைக்கவில்லை. அவ னுடைய செல்வங்களை அசுரர்கள் கவர்ந்து புறப்பட்டனர்.

சூரன் பிரமலோகஞ் சென்றான். நான் முகக் கடவுள் சூரபன்மன் முன் வந்து, ''நான் உனது பாட்டன். திருமாலை எதிர்த்து வெற்றி பெற்ற உன்னை வெல்ல எவராலும் இயலாது. நீ நெடுங் காலம் வாழ்ந்திரு'' என்று ஆசி கூறி, தனது படைக்கலங்களைச் சூரபன்மனுக் கும் அவன் தம்பியருக்கும் தந்தார்.

சூரபன்மன் திருக்கயிலாயம் சென்ற டைந்தான்—போர் புரிவதற்கல்ல, போரில் தனக்குப் பேராற்றல் தந்த பிரானைப் பணிவதற்கே சென்றான். தன் னுடன் வந்த படை வீரர்களை வெளி யில் நிறுத்தி வைத்துத் தம்பியருடன் எம்பெருமான் திருக்கோயிலின் புறக் கடை வாயிலை அடைந்தான். திருநந்தித் தேவரிடம் விடைபெற்று உள்ளே சென்று, உமாதேவியையும் சிவ பெரு மானையும் பணிந்து துதித்தான். கருணை நிறைந்த சிவபெருமான் சூரபன்மனை நோக்கி, ''அண்டங்களையெல்லாம் உனது ஏவலால் அரசு புரிந்து கொண்டு வாழ் வாயாக'' என்று அருள் புரிந்தார். சூரன், எம்பெருமானுடைய பொன்னார் திருவடிகளை வணங்கி விடைபெற்றான்.

சூரபன்மன் தன் சேனைகளுடன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் சென்று பார்வையிட்டான்; இதுகாறும் யுத்தம் புரிந்து தோல்வியுறச் செய்யாதவர்களை



அமிர்தாஞ்சன்

லிமிடெடின்


கிரைப் மிக்சர்

தயாரிப்பவர்கள்:

அமிர்தாஞ்சன் லிமிடெட் சென்னை - 4.



FDS. ACM. 472 TM A


வளரும் உங்கள்
குழந்தைகளுக்கு
காமதேனு வனஸ்பதி
(வைடமின் A, D கலந்தது)
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. சேலம் ஜில்லா.
மானேஜிங் ஏஜெண்டஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
CRITERION. MC-325

யெல்லாம் சமர் புரிந்து வென்றான். அவுணர்களை ஆங்காங்கே ஆட்சியில் நியமித்துத் தன் ஆட்சியை நிலைநாட்டிக் கொண்டான்.

அசுரர்களின் அரசனுகிய அசுரேந்திரன் சூரபன்மன் சிவபெருமானிடம் பெற்ற வரங்களையும் அருளையும் எண்ணிச் சுக்கிராச்சாரியாருடன் வந்து சூரனைத் தொழுது உறவு கொண்டாடி மகிழ்ந்தான். சூரபன்மன் அசுரேந்திரனிடம் குசலம் விசாரித்தான். அசுரேந்திரன் சூரபன்மனை நோக்கி, ''தாங்கள் இருக்கும்போது க்ஷேமத்துக்கு என்ன குறை?'' என்று கேட்டான். நியாயமான கேள்விதானே? சூரன் அதிகாரத்தில் இருந்தவரை அதருமக்காரர்களின் க்ஷேமத்துக்கு என்ன குறை?

சூரபன்மன் மண்ணுலகம் வந்தடைந்தான். இச்செய்திதான் தேவர்களை மிகவும் நடுக்குறச் செய்தது. தேவருலகைச் சூரன் வென்ற பின்னும் மண்ணுலக மறையவரின் வேள்வியால் அவர்களுக்கு ஆஹுதி கிடைத்து வந்தது. மண்ணுலகில் வேத கருமம் மறைந்ததால்தான் தேவர்களுக்குத் துர்ப்பிட்சம். தேவர்கள் மானுடரை வாழ்விக்கின்றனரெனில், மானிடர்தான் தேவரை வாழ்விக்கின்றனர். வேள்வியின் மூலம் இவ்வாறு பரஸ்பரம் வாழ்வித்துக் கொள்ளுமாறு கீதையில் கண்ணன் உபதேசித்திருக்கிறார். எனவே, சூரன் பூவுலகில் புகுந்ததும் தேவர்களும் முனிவர்களும் பாற்கடலை அடைந்து அறிதுயில் புரியும் அரவணைச் செல்வரை வணங்கி, சூரபன்மனால் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களைக் கூறி முறையிட்டுக் கொண்டார்கள்.

''சிவபெருமானை நீக்கித் தக்கன் செய்த வேள்வியில் கலந்து கொண்டதால் வந்த துன்பம் இது. இதனை விலக்க எவராலும் இயலாது. சூரபன்மன் சிவபெருமானிடம் அளவற்ற வரங்களைப் பெற்றிருக்கிறான்; அண்டங்கள் எல்லாவற்றையும் வென்றிருக்கிறான். அவனை வெல்ல நம்மால் முடியாது. அவனுடன் சமாதானம் செய்ய முயல்வதே நம்மால் இயலும்'' என்றார் நாராயணர்.

அவ்வாறே திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் புறப்பட்டுச் சென்றனர். சூரபன்மனிடம் வந்து ஆசி கூறி நின்றார்கள்.

தேவர்களுடன் பதினொரு கோடி உருத்திரர் கூட்டங்கள் ஒருங்கு நிற்பதைக் கண்ட சூரபன்மன், ''சிவபெருமானைப் போல் வடிவம் கொண்டுள்ள இவர்கள் யார்?'' என்று கேட்டான்.

உடனே திருமால் அவர்களின் வரலாற்றைக் கூறலானார்:



''எவளாவது 'கார்மோகினி' காதலிக்க வருவான்னு கார் வாங்கினேன். கார் மோகினியாவது கத்திரிக்காயாவது....ஒரு ஈ காக்கை கிட்டே நெருங்கமாட்டேங்குதே!''

''அசுரகுலத்தரசே! முன்னொரு கற்பகாலத்தில் பிரமன் மூவுலகங்களையும் உயிர்களையும் படைத்து, அதனால் செருக்குற்றான். தானே முழு முதற் கடவுள் என்று கருதிச் சிவபெருமானை மறந்து விட்டான். அவன் அவ்வாறு எண்ணிய உடனே சராசரங்களின் வளர்ச்சி நின்று விட்டது. அதனைக் கண்ட பிரமன், 'இதற்குக் காரணம் என்ன?' என்று சிந்தித்தான். சிந்தனையின் விளைவாக ஐந்தொழில்களைச் செய்பவராகிய சிவபெருமானை மறந்து, அவரது அருளின்றிப் படைத்தல் தொழில் செய்ததே காரணம் என்று உணர்ந்தான். எம்பெருமானை நோக்கி அளவற்ற காலம் தவம் புரிந்தான். சிவபெருமான் பிரமனுக்குக் காட்சி தரவில்லை. எனவே, பிரமன் வருந்திக் கதறினான்; அவனது கண்களினின்றும் நீர்த் துளிகள் சிந்தின; அக்கண்ணீர்த் துளிகள் பேய்களாய் எழுந்து நின்றன. அப்பேய்களைக் கண்டு பிரமன் நடுங்கி மயங்கி விழுந்தான்.

கருணாமூர்த்தியான கைலாசநாதன் பிரமனுக்கு உணர்வு அளித்து, அவனது கனவில் தோன்றினார். ''மகனே! வருந்த வேண்டாம். நீயே முழுமுதற் பொருள் என்று கருதி எம்மை மறந்ததால் உன் படைப்புத் தொழில் நிறைவேறவில்லை. அது மீண்டும் விரைவில் நிறைவேறும் வண்ணம் நம் பக்கத்தில் உள்ள உருத்திரர்களை உன்னிடத்து அனுப்புவோம்'' என்று சிவபெருமான் அருளிச் செய்தார். அதன்பின்

பிரமன் நல்லுணர்வு பெற்றான். சிவ பெருமான் திருவருளினால் பதினொரு உருத்திரர்கள் பிரமன் நெற்றியிலிருந்து வெளிப்பட்டு நின்றார்கள்.

''நீங்கள் எனது நெற்றியில் தோன்றியது ஏன்?'' என்று அவர்களைக் கேட்டான் பிரமன். ''உன் படைப்புத் தொழில் நிறைவேற வேண்டும் என்பதற்காகச் சிவபெருமான் எங்களை இவ்வாறு தோன்றச் செய்துள்ளார்'' என்று உருத்திரர்கள் பதில் கூறினார்கள்.

''அன்போடு என்னிடம் வந்த நீங்கள் விரைவில் உயிர்களைச் சிருஷ்டியுங்கள்'' என்று பிரமன் கூறினான். அந்தப் பதினொரு உருத்திரர்களும் தங்களைப் போலவே பதினொரு கோடி உருத்திரர் கூட்டத்தைப் படைத்தார்கள். பிரமனின் படைப்புப் போல் அல்ப ஜீவர்களை அவர்களால் படைக்க இயலவில்லை.

''உருத்திரர்களைச் சிருஷ்டி செய்தால் உலகம் தாங்காது'' என்று முறையிட்டான் பிரமன்.

''அப்படியானால் நீ முன்போல் உயிர்களைச் சிருஷ்டி செய்து கொண்டிரு. நாங்கள் இப்போதே பதத்துக்குச் செல்கிறோம்'' என்று கூறிப் பதினொரு உருத்திரர்களும் புவனம் அடைந்தார்கள். தாங்கள் சிருஷ்டித்த பதினொருகோடி உருத்திரர்களைத் தேவர்கள் கூட்டத்தில் இருக்கும்படி சொல்லிவிட்டு அவர்கள் சென்று விட்டனர். அவர்களே இந்த உருத்திரர்கள். இவர்கள் சிவசாருப்பியம் எய்தித் தேவர்களுடன் சேர்ந்து விட்டவர்கள்.''

இவ்வாறு திருமால் சூரபன்மனுக்கு உருத்திரர் சரிதத்தைக் கூறினார்.

சூரபன்மன் முன்னிலையில் தேவதச்சன் வந்து நின்றான். ''இப்பூவுலகில் வசிப்பதற்கு ஏற்ற அழகானதொரு நகரத்தை விரைவில் அமைத்துக் கொடு'' என்று சூரபன்மன் ஆணையிட்டான். அதன்படி தேவதச்சன் தென் கடலையடைந்தான். அதன் நடுவில் எண்பதினாயிரம் யோசனை விரிவுடையதாக ஒரு நகரத்தை அமைத்தான். செம்பொற் கோபுரங்கள் அந்நகரில் வானளாவி நின்றன; மதில் அரண்மனைகள், மாட மாளிகைகள், பொன் னெடுந் தெருக்கள் ஆகியன பாங்குற அமைந்திருந்தன; எல்லா வகையிலும் சிறந்த பெரிய நவரத்தின மாளிகையையும் அங்கே உண்டாக்கி அந்நகருக்கு 'வீரமகேந்திரபுரம்' என்று பெயரிட்டான். வீரமகேந்திரபுரத்தின் எட்டுத் திசைகளிலும் ஏமபுரம், இமையபுரம், இலங்கைபுரம், நீலபுரம், சுவேதபுரம், அவுணர்புரம், வாமபுரம், பதுமபுரம் என்னும் எட்டு நகரங்களையும் அழகு பெற அமைத்தான்.

சூரபன்மன் கட்டளைப்படி தேவதச்சன் சிங்கமுகாசுரனுக்காக வடகடலில் எண்பதினாயிரம் யோசனை விஸ்தாரமுள்ள 'ஆசுரம்' என்னும் நகரத்தை உண்டாக்கினான். நாவலந்தீவில் ஏமகூட மலைக்கு ஒருபுறத்தில் தாரகனுக்காக மாயமாபுரம் என்ற நகரை உண்டாக்கினான். அவுண சேனைகள் தங்குவதற்கென மற்றைய கடல்கள் தோறும், தீவுகள் தோறும் பல நகரங்களை அமைத்தான்.

ஆணையின் வண்ணம் அழகு நகரம் அமைக்கப்பெற்ற செய்தியைத் தேவதச்சன் சூரபன்மனிடம் கூறினான். சூரபன்மன் நல்ல நாளில் தன் படைகளுடன் சென்று வீரமகேந்திரபுரத்தில் குடிபுகுந்தான்.

பிரமன் முதலிய தேவர்கள், சகல புவனங்களையும் வென்று ராஜதானியில் புகுந்த சூரபன்மனுக்கு முடிசூட்ட ஆயத்தம் செய்தனர். சூரபன்மன் நீராடி, பீதாம்பரம் உடுத்தி, மலர்களைச் சூடி ஆபரணங்கள் அணிந்து பட்டாபிஷேகத்துக்குத் தயாரானான். தம்பியர் இருமருங்கும் வர அவுணர்களும் அமரர்களும் துதிக்க சிங்காதனத்தில் அமர்ந்தான். பிரமதேவர் மணிமகுடத்தை எடுத்துச் சூட்டினார். அவுணர்கள் ஆரவாரம் செய்து வணங்கினார்கள். தேவர்களும் முனிவர்களும் பொன் மலர்களைத் தூவினார்கள். யுத்தம் செய்து வெற்றி பெற்றவனுக்கு உரிய மரியாதையைச் செலுத்தத்தானே வேண்டும்?

சூரபன்மனுடைய இளவல்களின் ஏவலினால் தேவராஜனாகிய இந்திரன் சூரபன்மனுக்குக் காளாஞ்சியை ஏந்தினான்; குபேரன் அடைப்பையை ஏந்தினான்; வாயு சாமரை வீசினான்; அசுரேந்திரன் உடைவாள் பிடித்தான்; சந்திரசூரியர்கள் குடை பிடித்தார்கள். வருணனும் புத்திரர்களும் ஆலவட்டம் வீசினார்கள்; கருடனும் கந்தருவரும் சித்தரும் இசை பாடினார்கள்; இயமனும் அக்கினியும் பணியாட்களாகப் பிரம்பு ஏந்திச் சபையினரை வரிசைப்படுத்தி நிறுத்திச் சூரபன்மனைப் புகழ்ந்து துதித்தார்கள். தேவகுருவும் அசுரகுருவும் முனிவர்களும் பொற்கலசத்திலிருந்த கங்கை நீரைத் தெளித்து ஆசி பல கூறினார்கள். மேனகை, அரம்பை முதலிய தெய்வமாதர்கள் ஆடிப் பாடினார்கள்.

தேவரும் பிறரும் ஏவல் செய்யச் சூரபன்மன் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசு செய்யலானான். (தொடரும்)



ஆம், அவள் சகுந்தலா! ஆடையணிகளுக்கும் சட்டை களுக்குமான பிரிண்ட்கள்

ராஜேஷ் டெக்ஸ்டைல்ஸ்—பருத்தித் துணிகளில் வாங்க லாபகரமானவை நீடித்துழைக்கும் பருத்தி ஃப்ராக்குகள், பிரிண்டட் புடவைகள், நாள் பூராவும் புதுமைப் பொலிவுடன் குளுகுளுப்பூட்டும் பாப்ளின் சட்டைகள்—இவற்றில் எது தேவையானாலும் ராஜேஷ் டெக்ஸ்டைல்ஸ் என்று வற்புறுத்திக் கேட்டு வாங்குங்கள்.

ராஜேஷ் டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிட்.

பம்பாய்-13

இது ஒரு ரோஹித் க்ரூப் ஸ்தாபனம்

81-RH-1 TAM

அத்தியாயம் பன்னிரண்டு

பருவ மின்னல்



அந்த இளம் பெண்ணின் உடல் ஓர் அதிர்ச்சியுற்றுக் குலுங்கியது. பீதியுடன் பின்னால் நகர்ந்து அவள், ''இல்லை, அண்ணா! கார்ப்பொரேஷனிலே வேலைக்கு எழுதிப் போடப் போனேன்....'' என்று குமறினாள்.

''இன்னாது?''

''ஆமாம், அண்ணா! டீச்சர் வேலைக்கு அப்ளிகேஷன்எழுதிக் கொடுத்துட்டு வந்தேன்.....''

நச்சி இதைக் கேட்டுச் சினத்துடன் சிரித்தான். ''இன்னா தங்கச்சி! எனக்கே புளிப்புக் குத்தப் பார்க்கிறியா?''

''இல்லை, அண்ணா! நிஜமாகத்தான் சொல்கிறேன்!'' என்று பயந்த குரலில் இழுத்தாள் வேதா.


''உனக்கு இன்னா டீச்சர் வேலை பார்க்கத் தெரியும்?''

''எட்டாவது வரை படிச்சு இ. எஸ். எல். சி. பரீட்சை எழுதித் தேறினதுக்கப்புறம், வீட்டில் சும்மாயிருக்க வேண்டாமே என்று ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து இரண்டு வருஷம் படிச்சு, 'ஹையர் கிரேடு' பாஸ் பண்ணினேன். போன வாரம் சர்டிபிகேட் வந்தது. அதை எடுத்துக்கிட்டுத்தான் கார்ப்பொரேஷன் பள்ளிகளிலே வேலை கேட்டு மனு எழுதிப் போடப் போனேன்.''

நச்சிக்கு ஒரே ஆச்சரியமாகி விட்டது. அவளைக் கண் கொட்டாமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த அவன், ''அடங்க, இஸ்கி! எனக்கு இதெல்லாம் ஒண்ணும் தெரியாதே? என்னமோ, பள்ளிக்கூடத்துக்குப் போறே வரேன்னுலே நினைச்சுக்கிட்டு இருந்தேன்!'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லி விட்டு ஏதோ யோசிப்பவன் போல் மௌனமாயிருந்தான். பிறகு மெல்லத் தலையாட்டிக் கொண்டு, ''இங்கே பார், வேதா! நீ எதெதுக்கெல்லாமோ படிச்சுப் பாஸ் பண்ணியிருக்கிறதைப்பத்தி எனக்குச் சந்தோசம்தான்; ஆனால், இந்த டீச்சர் வேலை பார்க்கப் போறேன்னு சொல்றியே, அதை மட்டும் நான் ஏத்துக்க மாட்டேன்'' என்றான் உறுதியான குரலில்.

வேதம்மா திடுக்குற்றவள் போல் அவனை ஏறிட்டுநோக்கி, ''ஏன் அண்ணா, இப்படிச் சொல்கிறாய்? டீச்சர் வேலை என்றால் நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று உள்ளூற ஏற்பட்ட பீதியை மறைத்துக்கொண்டு குறும்பாகச் சிரித்தபடியே கேட்டாள்.

வெறுப்புடன் முகத்தைச் சுளித்த நச்சி அமைதியாகச் சொன்னான்: ''டீச்சர் வேலைன்னா புள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிறது என்று மட்டும்தான் எனக்குத் தெரியும், தங்கச்சி! அதுக்கு மேலே ஒண்ணும்



ஜெகசிற்பியன்

தெரியாது. ஏன்னா, நான் படிக்காதவன். ஆனால் ஒரேயடியா படிக்காத மூடம்னு நினைச்சுக்காதே. ரெண்டாங் கிளாஸ் வரை படிச்சுப் பாஸ்கூடப் பண்ணியிருக்கிறேன். சினிமா, நாடகம் வால்போஸ்டர்களைத் தலைகீழா ஒட்டாமல் இருக்கிறதுக்கும், தேர்தல்லே நிற்கிறவருடைய பேரு அச்சிட்ட தட்டிகளை அங்கங்கே சரியாகத் தொங்கவிடறதுக்கும் இந்தப் படிப்புத்தான் உதவுது. இதை எதுக்குச் சொல்றேன்னா, இப்படி ரெண்டாங் கிளாஸ் படிச்சப்பவே, பொண்ணுகள் வீட்டை விட்டு வெளியே போய் வேலை பார்க்கிறதைப்பத்தி எனக்குச் சில அபிப்பிராயங்கள் ஏற்பட்டுப் போச்சு! அது நல்ல அபிப்பிராயம் இல்லே. நான் படிச்ச பள்ளிக்கூடம் அது மாதிரியான ஒரு தப்பு எண்ணத்தை எனக்கு உண்டாக்கும்படி இருந்திருக்கலாம். அதை வைச்சு எல்லாத்தையும் சகட்டு மேனிக்குப் பேசக்கூடாதுதான். ஒத்துக்கறேன். அதனாலேதான் அந்த அபிப்பிராயங்களை உன்னிடம் இப்போ சொல்லலே. அப்படிச் சொன்னால், அதெல்லாம் மிஸ்டேக்குன்னு அடிச்சுப் பேசி என்னை முட்டாளாக்கி விடுவேன்னு எனக்குத் தெரியும். ஏன்னா, நீ எதெதுக்கோ படிச்சுப் பாஸ் பண்ணியிருக்கிறே. ஆனாலும், தங்கச்சி! என் அபிப்பிராயத்தை அவ்வளவு சீக்கிரம் என்னாலே மாத்திக்க முடியாது. எனக்குச் சில விஷயங்களில் எப்பவுமே சந்தேகம் ஏற்படறதில்லே. அதிலே ஒண்ணு, ஆண் – பெண்ணுடைய அடிப்படையான மனோபாவங்களைப் பத்தின விஷயம். என்னோட ஊர் சுத்தி அநுபவம் இதை நல்லா போதிச்சு வைச்சிருக்குது. இதிலே எப்பேர்ப்பட்ட "படிப்பாளியும் என்கிட்டே வந்து 'டச்' பண்ணிக்க முடியாது. இதையெல்லாம் மனசிலே வைச்சுக்கிட்டுத்தான், "நீ வேலை பார்க்கப் போகிறதிலே எனக்கு இஷ்டமில்லே"ன்னு சொன்னேன். இப்பத்திக்கு இதுக்குமேல்



ஒண்ணும் சொல்ல மாட்டேன். போய்ப் படுத்துத் தூங்கு, போ!''

திகைப்பும் பிரமிப்புமாக அவனைப் பார்த்துக்கொண்டிருந்த வேதம்மாவுக்கு என்ன பேசுவதென்றே தோன்றவில்லை. அவன் வந்ததும் விஷயத்தைத் தெரிவித்து, தான் விண்ணப்பித்துள்ள உபாத்திமை வேலையைப் பெற, அவனுக்கு நன்கு அறிமுகமானவரான மருதமுத்துவின் மூலம் முயற்சி செய்யச் சொல்லலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்த அவள் பெருத்த ஏமாற்றத்துக்கு உள்ளானாள். ஆயினும் முழுதுமாகத் தன் நம்பிக்கையை இழந்து விடவில்லை. இன்னொரு நாள் இதுபற்றிப் பேசி அவனை வழிக்குக் கொண்டு வந்து விடலாம் என்று பேசாதிருந்து விட்டாள்.

உடனே அவளுக்கு மற்றொரு நினைவு எழுந்தது. அந்த நினைவு இப்போது திடீரென்று எழுந்ததென்று சொல்ல முடியாது; இன்றைய பொழுதெல்லாம் அவளது மனத்தில் இடைவிடாது குறுகுறுத்துக் கொண்டிருப்பதுதான்—நகரமன்ற அலுவலகத்தில் சபேசனிடம் ஒரு ரூபாய் கடனாக வாங்கிய நினைவே அது. கடன் பெற்ற அந்த நினைவோடு அதைக் கொடுத்தவனைப் பற்றிய ஞாபகமும் அவள் மனத்தில் ஆழப் பதிந்து போயிருந்தது!

மூலையில் கிடந்த கந்தல் பாய் ஒன்றை எடுத்துப் பிரித்துப் போட்டுக்கொண்டிருந்த நச்சி, ''அண்ணா!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

''எனக்கு ஒரு ரூபாய் வேணும்; இருக்குமா அண்ணா?'' என்று தயக்கத்துடன் வினவினாள் வேதா.

''நீதான் எல்லாம் படிச்சு முடிச்சுட்டியே, இனிமே இன்னாத்துக்கு ரூபா கேட்கிறே?.... சோப்பு வேணுமா, பவுடர் வேணுமா, சொல்லு; வாங்கியாந்து தாரேன். கையிலே மட்டும் காசு கொடுக்க மாட்டேன்'' என்றவாறு ஓர் அழுக்கேறிய தலையணையைத் தட்டிப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான் நச்சி.

வேதாவுக்கு உள்ளூறப் பயமேற்பட்டது. தான் வேலை தேடப் போனதே பிடிக்கவில்லை என்று சொன்னவன், அவ்வேலைக்கு விண்ணப்பம் செய்ய முன்பின் அறிமுகமில்லாத ஒருவனிடம் கடனாகப் பணம் வாங்கியதை அறிந்தால் எப்படிச் சீறிவிழுந்து திட்டுவானோ என அஞ்சினாள் அவள். மேலும், தனக்குக் கடன் கொடுத்த அந்த வாலிபன் இவனோடு சேர்ந்து வந்ததை அந்த பஸ் நிலையத்தில் பார்த்ததாலும், அங்கு தன்னை இவன் கண்டு கோபமாகக் கறுவியதை அவனும் கவனித்ததாலும், 'எனக்கு அவன் ஒரு ரூபாய் கடன் கொடுத்த விவரத்தை இவனிடம் சொல்லி விட்டிருப்பானோ?' என்று எண்ணிக் குழப்பமடைந்தாள். 'அந்த விஷயத்தை என் வாயிலாக அறியத்தான் இப்படிக் கையில் காசு தர மாட்டேன் எனச் சொல்லி ஆழம் பார்க்கிறானோ?' என்று நினைத்தபோது அவளுடைய அச்சம் பன்மடங்காயிது. 'ஆனாலும் என்ன செய்வது? நாளைக்கு எப்படியும் அந்த ஒரு ரூபாய்க் கடனைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டுமே! இல்லையானால், அவசர சமயத்தில் பெருந்தன்மையோடு உதவி செய்த அவன் என்னைப்பற்றி வெகு கேவலமாக நினைத்து விடுவானே! அவனைப் பார்த்தால் அந்த ஒரு ரூபாய்ப் பணத்தை அலட்சியமாக எண்ணி மறக்கக் கூடிய வனாகவும் தோன்றவில்லை. அப்படிப் பட்டவன் அந்த விவரத்தைத் தன் நண்பனிடம் இதுவரை தெரிவிக்காமல் இருந்தாலும், தான் ஏமாந்த கோபத்தில் இனி சொல்லிவிட்டால் நிலைமை இன்னும் மோசமாகி விடுமே!'—வேதாவின் மனம் தவியாய்த் தவித்தது. நாளை ஏற்படப் போகிற அவமானத்தை இப்போதே அடைந்து விட்டவள்போல் முகம் வெளிறிக் குமைந்தாள் அவள்.

'உண்மையைச் சொல்லி விடலாமா? ஆமாம், அதைத் தவிர வேறு வழி இல்லை' என்ற முடிவுடன் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு ஓரடி முன்னால் வந்த அவளைச் சட்டென்று ஏறிட்டுப் பார்த்த நச்சி, ''இன்னா தங்கச்சி, இதுக்கா அழுவறே?...சரி, சரி; இந்தா, என்கிட்ட இப்ப இருக்கிறது இவ்வளவுதான்; எடுத்துக்கோ!'' என்று குழந்தையைச் சமாதானப்படுத்துவது போன்ற பரிவுச் சிரிப்புடன் கூறிக் கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்து அவளிடம் கொடுத்தான். பிறகு அவன் வேறு பணம் இல்லை என்பதை அவள் நம்ப வேண்டும் என்பதற்காக ஜேபியை நன்றாகப் பிரித்துத் தட்டியவாறு ஒருக்களித்துப் படுத்து விட்டான்.

வேதாவின் அழகிய முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. தன் கையிலிருந்த ஒற்றை ரூபாய் நோட்டையும், சுவர்ப் பக்கமாகத் திரும்பிப் படுத்த நச்சியையும் மாறி மாறிப் பார்த்த அவளது கண்கள் கலங்கிப் பனித்தன.

புறக்கடையில் மாட்டுக்கு வைக்கோல் பிரித்துப் போட்டுக்கொண்டிருந்த கன்னியம்மாள் மெல்ல உள்ளே வந்தாள். நச்சி படுத்த உடனேயே தூங்கிவிட்டான் என்பதற்கு அறிகுறியாகப் பெருத்த குறட்டை ஒலி

எழும்பிக் கொண்டிருந்தது. அயர்ந்து உறங்கும் தன் மைந்தனையே சற்று நேரம் வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்ற அவள், ''ஹூம்! எத்தினி நாள் தூக்கமோ? அடிச்சுப் போட்டாப்பலே மவன் தூங்கறான்'' என்று கம்மிக் கரகரத்த குரலில் முறுவலித்த வாறு கால்மாட்டில் உட்கார்ந்து பாசப் பரிவுடன் அவனது கை, கால், உடம்பைப் பிடித்து அமுக்கி விடலானாள்.

''ஏ. கன்னிம்மா! தூங்கறயா?''— தெருப் பக்கமிருந்து தம்பையாவின் அதிகாரமான குரல் கேட்டது.

''மூழ்ச்சுக்கிட்டுத்தான் இறேன் அண்ணாத்தே!'' என்று ஓசையாகப் பதிலிறுத்தாள் கன்னியம்மாள்.

''பையன் வந்தானா?''

''இப்பத்தான் வந்து துன்னுப்பிட்டுத் தூங்கறான்.''

''தூங்கட்டும், தூங்கட்டும். காலம் பற விசாரிச்சுக்கறேன்!''

தம்பையா திரும்பிச் செல்கிறான் என்பது அவனுடைய இருமல் ஒலி தொலைவில் கேட்டதிலிருந்து தெரிந்தது.

'இது ஒரு கூறுகெட்ட ஆத்மா! ஒலகத்திலே ஆண்டவன் எத்தினி யெத்தினி விதமான மனுஷாளையெல்லாம் படைச்சு, இன்னின்ன கோலம் காட்டிக்கிட்டு இருக்காரு!' என்று பெருமூச்சு விட்டுத் தனக்குள் முனகிய கன்னியம்மாள் முந்தானையை விரித்துப் போட்டுப் படுத்துக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் தூங்கவும் ஆரம்பித்து விட்டாள்.

பொழுது விடிந்ததுமே அந்த வீடு ஒரு போர்க்களமாக மாறியது. தலைவிரி கோலமாக இருந்த கன்னியம்மாள் வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசிப்பேசிச் சாபமிட்டுக் கூவிக் கொண்டிருந்தாள். இதை வேடிக்கை பார்க்கத் தெருவில் கூட்டமும் கூடியிருந்தது. வேதா ஒரு மூலையில் பயப்பிராந்தியுடன் முழங்காலைக் கட்டிப் பிடித்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

இத்தனை அமர்க்களத்துக்கும் காரணம், விடியற்போதில் எல்லாருக்கும் முன்னதாக எழுந்த நச்சி, தன் தாயார் மாடத்தில் மறைத்து வைத்திருந்த எட்டணாக் காசை எடுத்துக்கொண்டு போய்விட்டான் என்பதுதான்!

காலை மணி பத்துக்கு மேல் இருக்கும். மாதவன் நாயரின் டீக்கடைக்குப் பின்னால் உட்கார்ந்து நச்சி வரும் வழி மேல் விழி வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தான் சபேசன். அன்றிரவு இரண்டு மணிவாக்கில் படுத்து, நாயருடன் ஐந்து மணிக்கெல்லாம் அவன் எழுந்துவிட்டான். போதிய தூக்கமின்றிக் கண்கள் சிவந்து எரிச்சலெடுத்தன. அத்துடன் திறந்த வெளியில் பனிச் சாரலிலும், வறட்சியான கடற் காற்றிலுமாகத் தூங்கி எழுந்ததால் உடல் வெகுவாகச் சோர்ந்து விட்டிருந்தது. இந்தப் புதிய அநுபவங்களால் ஏற்பட்ட சிரமங்களைப் பற்றிக்கூட அவன் அவ்வளவாக வருந்தவில்லை. இதெல்லாம் இன்னும் கொஞ்ச நாளில் பழக்கப்பட்டு உடம்புக்கு ஒத்துப் போய்விடும் என்று அலட்சியமாகவே இருந்தான். ஆனால் இவ்வளவு நேரமாகியும் நச்சி வராததுதான் அவனுக்குப் பெரிய கவலையாக இருந்தது. அந்தக் கவலைக்குக் காரணம், அவனுடைய வயிற்றுப் பிரச்னையே!

நேற்றிரவு கடற்கரைப் பொதுக் கூட்டத்தில் 'பாதுகை வீச்சு' நடத்திக் கைக்கூலி பெற்ற நச்சியிடமிருந்து பங்குத் தொகையாகக் கிடைத்த பணத்தில் இரவுச் சாப்பாட்டுக்கும், காலை 'நாஸ்தா'வுக்கும் போக மீதம் ஒருசில பைசாக்களே அவன் கையில் இருந்தன. அவை ஒரு பன்னுக்கும் சிங்கில் டீக்கும் கூடக் காணாது. எப்படியோ அதை வைத்துப் பகல் பொழுதை ஓட்டிவிட்டாலும், பிறகு இரவுச் சாப்பாடு, மறு நாள் காலை சிற்றுண்டி, அப்புறம் பகல் உணவு, மீண்டும் இர



வுச் சாப்பாடு... சே, இது எவ்வளவு பெரிய பிரச்னே! எத்தனை பயங்கர மான தேவை! — இந்தக் கவலேதான் அவனேப் பேயாகப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது.

மாதவன் நாயர் இருக்கிருனே, அவன் ரொம்பக் கஞ்சப் பேர்வழி. அதிகாலேயிலிருந்து இதுவரை அவனுக்குச் சபேசன் எத்தனையோ எடுபிடி வேலேகள் செய்து கொடுத்துவிட்டான். தண்ணீர் பிடித்து வருதல், கடை வாசலேப் பெருக்குதல், கண்ணுடித் தம்ளர்களேக் கழுவி வைத்தல், பனியில் நனேந்த அடுப்புக் கரியைக் காயப் போடுதல் — இப்படிப் பல. ஆனுலும் அவன் காலேயில் குடித்த ஒரு சாயாவுக்கும், பிறகு சாப்பிட்ட இரண்டு தோசை வடை கறிக்கும் சரியாகக் கணக்குப் போட்டுக் காசு வாங்கிவிட்டான். அன்றிரவு அவனுக்குப் படுக்க இடம் கொடுத்தானே, அது ஒன்றே போதாதா இந்த உழைப்புக்கெல்லாம் கூலியாக?

சென்னேயில் எத்தனே யெத்தனேயோ மூடு மந்திரமான விஷயங்கள் உள்ளன. அவற்றை யெல்லாம் அறிந்து கொள்வதென்பது மிக மிகக் கடினம். ஆனுல், யாவராலும் எங்கிருந்தாலும் எளிதாகத் தெரிந்து கொள்ளக் கூடிய ஒரே விஷயம், நேரக் கணக்குத்தான். கட்டிட வேலேக்குச் சிமிண்ட் கலவை தூக்கிச் செல்லும் சித்தாள் பெண்ணிடம் கேட்டால்கூட நிமிடம் விநாடியோடு பிசகின்றி மணி சொல்லி விடுவாள்!


இப்போது மணி பதினென்றே கால். நச்சி இன்னமும் வரவில்லே. இனிமேல் அவன் எங்கே வரப் போகிருன்? இன்றைக்கு எந்த இடத்தில் என்ன மாதிரியான 'சம்மர்சால்ட்' அடித்துப் பணம் பண்ணப் போய்விட்டானே!

தவிப்புடன் உட்கார்ந்திருந்த சபேசன் மெல்ல எழுந்து நின்றுன். அப்படி எழுந்தபோது அவன் மடியிலிருந்து ஒரு கந்தல் துணி நழுவி விழுந்தது. அதைக் குனிந்து எடுத்துப் பார்த்தான். நேற்றிரவு மன்ரோ சிலேக்கு அடியில் படுத்துத் தூங்கியபோது அவனுக்குத் தெரியாமலே அவனது முகத்தில் போர்த்திக் கிடந்த சேலேத் துணி அது! அந்தத் துணி தன்னிடம் எப்படி வந்தது என்பதுபற்றி அவன் ஏதும் சிந்திக்கவில்லே. ஆனுல் குளிருக்கு அது எவ்வளவு உபயோககரமாக இருந்தது என்பதை மட்டும் அவனுல் மறக்க முடியவில்லே. எனவே, இன்றிரவும் அந்தக் கந்தல் போர்த்திக் கொள்ள உதவும் என்ற எண்ணத்தில், அங்கே ஒரு மரத்தடியிலே மஞ்சள் குங்குமம் பூசி நட்டு வைத்திருந்த 'சாமி'க் கல்லுக்குப் பின்னுல் கொண்டு போய்ச் சுருட்டி வைத்தான். வைக்க வேண்டிய இடத்தில் அது வைக்கப்பட்டு விட்டது!

கவலேயோடு சுற்றுமுற்றும் பார்த்தான் சபேசன். தொலே தூரத்தில் ரிப்பன் மாளிகையின் வெண்ணிறக் கோபுர உச்சி மரச் செறிவுகளுக்கிடையே இலேசாகத் தெரிந்தது. அதனேப் பார்த்ததுமே அவன் மனத்தில் பளிச்சென்று ஒரு நினேவு எழுந்தது. 'நேற்று என்னிடம் அந்தப் பெண் கடனுக வாங்கிப் போன ரூபாயை இன்று திருப்பித் தருவதாகச் சொன்னுளே! அது கிடைத்தால் இன்றைய பொழுதைத் தள்ளிவிடலாம் அல்லவா?'

மறு சிந்தனேக்கே இடம் தராமல் நாயரிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு விட்டான் சபேசன்.

ரிப்பன் மாளிகையின் வலது பக்க மதில் சுவரோரம் வழக்கம் போல் அந்த 'அநாமதேய சகாயர்கள்' கும்பலாக நின்று, உள்ளே வருவோரைத் 'தொழில் நுணுக்கத்துடன்' கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களேப் பார்த்த சபேசன் தயங்கி நின்றுன்.



இன்றைக்கு வேறு காரியத்துக்காக அவன் உள்ளே போனாலும் அவர்கள் அவனைச் சும்மா விட மாட்டார்கள். தங்களுக்குப் போட்டியாக இன்றும் வந்துவிட்டான் என்று எண்ணிச் சண்டைக்குத் தயாராகிவிடுவார்கள். நச்சி இல்லை என்று தெரிந்துகொண்டால் நிலைமை இன்னும் மோசமாகலாம்.

பயப்பிராந்தியுடன் அவர்களைப் பார்த்தவாறு நடைபாதை ஓரமாக மெல்ல நடந்து சென்ற சபேசன், இரண்டு நுழைவாயில்களுக்கும் இடையில் உள்ள மதில் சுவரண்டை போய் நின்று உள்ளே எட்டிப் பார்த்தான்.

அங்கே மாளிகையின் முகப்புக் கூடத்தில் — ஸ்மித் துரையின் சிலையருகே — தனித்து நின்றுகொண்டிருந்தாள் வேதா என்ற அந்தப் பெண்.

நேற்றைக்கும் இன்றைக்கும்தான் அவளிடம் எத்தனை வித்தியாசம்! ஆடையணிகளில் மாறுதல் ஏதும் இல்லையென்றாலும், அவற்றில் கவனம் செலுத்தி அணிந்திருந்த முறையும், நின்றிருந்த கோலமும், முகத்தில் தென்பட்ட மகிழ்ச்சியுமே அவளை வெகுவாக வித்தியாசப்படுத்திக் காட்டின.

ஆனால், சபேசன் அவளை மட்டுமே பார்த்தான். அதற்குமேல் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை; புலப்படுத்திக் கொள்ளவும் முயலவில்லை. நேற்று வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கத்தான் அவள் வந்திருக்கிறாள் என்பது அவனுக்குச் சந்தேகமறத் தெரிந்துவிட்டது.

இன்றைய வயிற்றுப் பிரச்னை நிரவழி பிறந்து விட்டது என்ற மகிழ்ச்சியில் அவளை மனதார வாழ்த்திப் புகழ்ந்து கொண்ட சபேசன், உள்ளே செல்வது எப்படி என்ற கவலையில் மீண்டும் குழம்பித் தவிக்கலானான். அந்த எமகாதக 'சகாயர்கள்' இப்போது மதில் சுவர் ஓரத்தை விட்டுத் தியாகராயரின் சிலையருகே வந்து நின்றுகொண்டிருந்தார்கள்.

'சரி; முன் பக்கமாகச் செல்ல முடியாது. இடது பக்கவாட்டு நுழைவாயில் வழியே பின்புறமாகச் சுற்றிக் கொண்டு போய், அவளைப் பார்த்து விடலாம்' என்ற முடிவுடன் அங்கிருந்து நேரே விரைந்து நடந்த சபேசன், ''ஸ்...ஹய்ல்!...'' என்ற குரல் கேட்டுச் சட்டென்று நின்றான்.

மீண்டும் அதே குரல். இதற்கு முன் கேட்டுப் பழக்கப்பட்ட குரலாகவும் அது இருந்தது: ''ஸ்.. ஹய்ல்!...''

அவன் பரபரப்போடு நிமிர்ந்து பார்த்தான். எதிரே, பெரிய மேட்டு ஸைதாம்ஸ் சாலைப் பக்கமிருந்து அரை நிஜாரும், சாண்டோ பனியனும், தலையில் முண்டாசும், வாயில் பீடித்துண்டு சகிதமாக மண்ணெண்ணெய் வண்டி ஒன்றை இழுத்தவாறு வந்து கொண்டிருந்தான் நச்சி. (தொடரும்)

சடக்!

முத்து 'செல்லமாக' வளர்த்து வந்த நாய்க் குட்டிக்கு 'உள் நாக்கு' வளர்ந்து விட்டது. மிருக டாக்டர் பரிசோதித்துப் பார்த்து விட்டுச் சில மாத்திரைகள் கொடுத்தார். அந்த மாத்திரைகளை நாய்க்குட்டிக்கு எப்படிக் கொடுப்பது? ''பல் இடுக்கில் கட்டையை வைத்து வாயைத் திறக்கச் செய்து மாத்திரைகளைப் போடவேண்டும். நாய்க்குட்டி மாத்திரைகளை விழுங்குகிற வரையில் அதன் வாயை தெம்பியவண்ணமே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்'' என்றார் டாக்டர்.

வீட்டுக்கு வந்த முத்து டாக்டர் சொன்னபடியே செய்து பார்த்தான். ஒன்றும் பயனில்லை. ஒவ்வொரு தடவையும் நாய்க்குட்டி மாத்திரைகளைக் கக்கிவிட்டது. முத்துவுக்கு அலுத்துவிட்டது. மீண்டும் மிருக டாக்டரிடம் நாய்க் குட்டியுடன் போனான்.

''மாத்திரைகளை நாய்க்குட்டி விழுங்கமாட்டேனென்கிறது டாக்டர்!''

''எப்படியாவது நாய்க்குட்டி மாத்திரைகளை விழுங்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் உள்நாக்கு கரையும்'' என்று கூறினார் டாக்டர்.

முத்துவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மீண்டும் டிஸ்பென்சரி வராந்தாவுக்கு வந்து நாய்க்குட்டியின் வாயில் கட்டை கொடுத்து தெம்பி மாத்திரைகளைப் போட முயன்றான். மறுபடியும் நாய்க்குட்டி மாத்திரைகளை விழுங்காமல் கக்கியது.

முத்துவுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. அலுத்துக் கொண்டு மாத்திரைகளை 'சடக்'கென்று வீசி எறிந்தான்.

என்ன ஆச்சரியம்! நாய்க் குட்டி நாலு கால் பாய்ச்சலில் பாய்ந்து ஓடி அந்த மாத்திரைகளை 'லபக்'கென்று விழுங்கிவிட்டது. — விஜயம்

லபக்!



கயல்விழி

அகிலன்

இருபதாம் அத்தியாயம்

சபதம் செய்தான்

சுந்தர பாண்டியனிடம் இறை செலுத்துவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு, பின்னர் அந்த ஓலையையே கிழித்தெறிந்து, பாண்டியனை அவமதித்த இராஜராஜனால் பாண்டியப் படைகளை எதிர்த்து நிற்க முடியவில்லை. இரவோடு இரவாகக் கங்காபுரியை விட்டுத் தன் அரண்மனைச் சுற்றத்தாரோடும், உடன் கூட்டத்தாரோடும் வடக்கே புறப்பட்டான். எப்படியும் காஞ்சிக்குச் சென்று வீரநரசிம்மனிடம் அடைக்கலம் புகுந்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு.

இராஜராஜன் புகலிடம் தேடி ஓடும் செய்தி கோப்பெருஞ்சிங்கனுக்கு எட்டியது. பாண்டியப் படையினரிடம் தப்பி வந்த அவனையும் அவன் கூட்டத்தாரையும் அவர் தெள்ளாற்றில் வளைத்துப் பிடித்துக் கொண்டார். தம்முடைய சேந்தமங்கலம் கோட்டைச் சிறைக்குள் தள்ளி அடைத்தார். வீரநரசிம்மனின் பெயரைச் சொல்லிக் காடவராயர் கோப்பெருஞ்சிங்கனை அச்சுறுத்திப் பார்த்தான் இராஜராஜன்.

"எந்தச் சிங்கம் வந்தாலும் இனி இந்தச் சிங்கம் அஞ்சப் போவதில்லை!" என்றார் கோப்பெருஞ்சிங்கன்; "சுந்தர பாண்டியனுக்கும் எனக்கும் உள்ள நட்பின் வலிமையை உன்னுடைய நண்பர் அறிந்து கொள்ளட்டுமே? உனக்கொரு துணை என்றால் எனக்கும்தான் துணை இருக்கிறது!"

காஞ்சியில் விழுப்பரையரும் கயல்விழியும் நட்புறவுக்காகத் தூது சென்றிருந்த அதே சமயத்தில், சேந்தமங்கலத்தில் பகைமை உருவாகி விட்டது. மறு போரின் வித்தும் ஊன்றப் பட்டு விட்டது.

கோப்பெருஞ்சிங்கனது அவைக்களப் புலவர் தமது மன்னரிடம் சோழன் சிறைப்பட்ட பூரிப்பால், பகை மன்னர்களுக்கு எச்சரிக்கை விடுவது போல் கவிதையே பாடத் தொடங்கி விட்டார்!

"திறையிட் டிருமின்கள்!
தெவ்வேந்தர் செம்பொன்
திறையிட்ட பூம்புகார்ச்
சோழன் சிறை கிடந்த
கோட்டந் தனைநினைமின் !
கோப்பெருஞ்சிங்கன் கமல
நாட்டங் கடைசி வந்த நாள்!" *

கோப்பெருஞ்சிங்கன் எதிர்பார்த்ததற்கு முன்பே வீர நரசிம்மன் போர்க்கோலம் பூண்டு விட்டார் என்ற செய்தி வந்தது. "சோழ மண்டல பிரதிஷ்டாசாரியன் என்ற விருதுப் பெயரை நிலை நாட்டாமல், சோழனைச் சிறை மீட்டுச் சிம்மாசனத்தில் வைக்காமல், எக்காளம் ஊதுவதில்லை என்று சபதம் செய்திருக்கிறாராம்" என்று ஒற்றர் தலைவன் வந்து கூறினான். எக்களிப்பை வெளிப்படுத்தும் மகிழ்ச்சிகரமான ஊதுகொம்பு எக்காளம்.

அடுத்தாற்போல் முன்னிலும் பயங்கரமான செய்தி கோப்பெருஞ்சிங்கனுக்கு எட்டியது. திருமுனைப்பாடி நாட்டின் வடக்கு எல்லையில் வீரநரசிம்மனின் படைத் தலைவர்களான அப்பன தண்டநாயகனும் கொப்பைய தண்டநாயகனும் புகுந்து விட்டார்களாம். பயங்கரமான அழிவு வேலைகளையெல்லாம் தொடங்கி விட்டார்களாம்.

உடனடியாகத் தமது வீரர்கள் அனைவரையும் திரட்டி வடக்கே அனுப்பினார் கோப்

---

* வட ஆர்க்காடு மாவட்டம் வயலூர்க் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டுப் பாடல்.



பெருஞ்சிங்கன் சுந்தர பாண்டியனுக்கும் மதுரைக்கு ஒரு திருமந்திர ஓலை அனுப்பினார்

"நம்முடைய நட்புக்கும் நமது நாடுகளுக்கும் சோதனைக் காலம் வந்துவிட்டது. தாங்கள் துரத்தி விட்ட சோழனை நான் சிறைப் பிடித்து அடைத்து வைத்திருக்கிறேன். சோழனைச் சிறை மீட்பதற்காகவும் என்னைப் பழி வாங்குவதற்காகவும் வீர நரசிம்மன் என் மீது போர் தொடங்கிவிட்டார். எது வந்தாலும் நான் அஞ்சப் போவதில்லை. ஆனால் நாம் இருவரும் ஒன்றாக இணைந்து நின்றால் நரசிம்மனால் நம்மை எளிதில் வெற்றி கொள்ள முடியாது. உடனடியாகத் தாங்கள் படை நடத்திக் கொண்டு திருவரங்கத்தின் வழியாகச் சென்று வீர நரசிம்மனின் கண்ணனூர்க் கோட்டையைத் தாக்குங்கள். கோசலப் படைகளை நாம் இருகூறாகப் பிரித்துவிட வேண்டும். அப்படியே நாம் இந்தப் போரில்


நாளொரு மேனியாக...
எழிலோங்கச் செய்வது
ரெக்ஸோனா
Rexona
GOOD FOR YOUR SKIN
கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்குப் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனா.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான தைலங்களின்
கலவையான 'கேடில்' இருக்கிறது ரெக்ஸோனாவிலே.
தவிரவும், கமகமவென்று மணம் கமழ்வதால்,
மணமோங்கி மலரும் உங்கள் பொலிவு.
கேடில் அடங்கிய ரெக்ஸோனா உங்கள் சருமத்திற்கு உகந்தது.
RX. 24-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

அறிய நேர்ந்தாலும் இருவரும் ஒன்றாக அறிவோம் !''

கோப்பெருஞ்சிங்கனின் ஓலையைக் கண்டவுடன் குலசேகர பாண்டியர் சித்தப் பிரமை கொண்டு விட்டவர் போல் மாறினார். அமைதியை நாடி அவர் கட்டிய மனக் கோட்டைகளும், வகுத்த திட்டங்களும், செய்த முயற்சிகளும் ஆயிரம் சுக்கல்களாக வெடித்துச் சிதறுவது போல் தோன்றியது.

''எத்தனையோ ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த இரு நாடுகளும் இப்போதுதான் உரிமை பெற்றிருக்கின்றன. அதற்குள் இப்படி ஒரு சோதனையா ?''

''சோதனைகள் இல்லாமல் சாதனைகள் நடைபெறுவதில்லை'' என்றான் சுந்தர பாண்டியன். ''எதிர்பாராத சமயங்களில் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் நாம் இன்னல்களை எதிர்பார்க்கத்தான் வேண்டும். இதுவோ நாம் எதிர்பார்த்த இன்னல்தான் : மெல்ல வரும் என்று நினைத்தோம்; சற்று விரைவாகவே வந்து விட்டது.''

''விழுப்பரையரையும் கயல்விழியையும் நாம் தூது அனுப்பியிருந்தோமே? அதன் முடிவு என்னவாகியிருக்கும்?''

''தூது முறிந்து போயிருக்கும்'' என்றான் சுந்தரபாண்டியன்.

''அவர்களின் கதி ?''

அதை நினைத்துத்தான் அவனும் கலங்கினான். விழுப்பரையரை அவன் தனது வழிகாட்டும் தெய்வமாகப் போற்றி வந்தவன். அவர் தமது ஒரே குமாரனை ஆலவாய்நம்பியைத் தன் பொருட்டுப் பலியிட்டவர் என்பதை அவன் மறக்கவே இல்லை. கயல்விழியோ அவனது உயிருக்கும் மேலானவள். 'அவர்கள் இருவரும் எந்த நிலையில் இருக்கிறார்களோ?' என்று எண்ணித் துடித்தான்.

''பாண்டிய நாடு, திருமுனைப்பாடி நாடு ஆகிய இரு நாடுகளுக்கு மட்டிலும் இப்போது சோதனை வரவில்லை. எங்கள் இருவரது நட்புக்குமே பெரும் சோதனை வந்திருக்கிறது'' என்றான் இளைய பாண்டியன்.

மலை குலைந்தாலும் மனம் குலையாத தமது தம்பியே இப்படிக் கலங்குவதைக் கண்ட பெரிய பாண்டியர், தமக்குச் சிறந்ததாகத் தோன்றிய ஓர் ஆலோசனையை வெளியிட்டார் :

'' சேந்த மங்கலத்துச் சிறையில் இராஜ ராஜன் இருக்கிறான். கோசல நாட்டுச் சிறையில் விழுப்பரையரும் கயல்விழியும் இருக்கக் கூடும். நம்மவர்களுக்குப் பதிலாக இராஜராஜனை விடுவிப்பதாகக் கோப்பெருஞ்சிங்கனை விட்டு வீரநரசிம்மனுக்கு ஓலை அனுப்பச் செய்யலாமே? எப்பாடுபட்டாவது நாம் போர்களைத் தவிர்க்க வேண்டும் : அவர்களையும் மீட்க வேண்டும்.''

பெரிய பாண்டியரின் அச்சத்தை இளைய பாண்டியனால் உணர முடிந்தது. ஆனால் அவன் கோப்பெருஞ்சிங்கனின் நிலையையும் எண்ணிப் பார்த்தான்.

''அண்ணா ! நமது நண்பருக்கு இப்படி நாம் ஓலை விடுத்தால் அது அவருடைய ஆபத்தில் நாம் அவரைக் கைவிட்டது போலாகும். நமக்காக உதவி செய்தவரின் துன்பத்தை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது போலாகும். நாம் அவரை இப்போது நரசிம்மனிடம் சரணடையச் சொல்வது நட்புக்கு இழுக்காகுமல்லவா ?''

''வேறு வழி ?''

''கோப்பெருஞ்சிங்கன் காட்டிய வழியில் துணிந்து குதித்துவிட வேண்டியதுதான். இன்றைக்கே போர் முரசறையச் செய்வோம். நிலைமையை மக்களிடமும் வீரர்களிடமும் எடுத்துக் கூறுவோம். நான் மீண்டும் போர் மேல் செல்லுகிறேன். திருவரங்கத்திலும் கண்ணனூரிலும் கோசலப் படைகள் குவிந்து வருவதாகச் செய்தி வந்திருக்கிறது. காவேரிக் கரை ஓரமாகச் சென்று வீரநரசிம்மனின் படைகளின் மீது மோதுகிறேன்.''

பதிலளிக்கத் தோன்றவில்லை குலசேகர பாண்டியருக்கு. சுந்தரபாண்டியனின் துணிவு அவருக்கு வியப்பைத் தந்ததென்றாலும், அவன் செல்லும் வழியின் முடிவை நினைக்கவே அவர் நெஞ்சம் நடுங்கியது.

'' தம்பி !'' என்று உணர்ச்சி பொங்க அழைத்துக் கொண்டே அவனுடைய கரங்கள் இரண்டையும் பற்றிக் கொண்டார் பாண்டியர். ''மாண்டு விட்டாய் என்று நினைத்தேன்; மீண்டும் திரும்பி வந்தாய். நாடும் பறிபோய் விட்டது என்று நம்பிக்கை இழந்திருந்தேன்; அதையும் மீட்டுக் கொடுத்து விட்டாய். எனக்கு நீ வேறில்லை; நாடு வேறில்லை. நீதான் நாட்டின் உயிர் மூச்சு; அது உன் உடல். இரண்டும் ஒன்றி வளரவேண்டிய எதிர்காலம் உன் முன்னே நீண்டு கிடக்கிறது. இரண்டையும் இழந்து விட்டால் பிறகு என் உயிர் நிலைக்காது. மின்னல் போல் தோன்றி மறைந்து என்னை மீண்டும் கதியற்றவனாக்கி விடாதே !''

''போர் தொடுக்க வேண்டாமென்கிறீர்களா? அது நம்மைத் தேடி வந்து

விட்டது. இனி தயங்குவது தர்மமுமல்ல; ஆண்மையுமல்ல. நாடு அழிந்தாலும் நட்புக்குத் துரோகம் செய்யக்கூடாது.''

''நட்புக்காகப் பரிந்துதான் நரசிம்மனும் போரில் குதித்து விட்டார்; நீயும் துணிந்து நிற்கிறாய். இருவர் சார்பிலும் நட்புத்தான் பகையைத் தூண்டுகிறது.''

''கோழையின் நட்பை அவர் ஒரு பொருட்டாக மதிக்கிறார்; நான் வீரரின் நட்பைப் போற்றுகிறேன்'' என்றான் சுந்தரபாண்டியன்.

சிந்தனை செய்தார் பெரிய பாண்டியர். அவனை வாழ்த்துக் கூறிப் போருக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழி அவருக்குப் புலப்படவில்லை. ஆனால் இந்தப் போர் மூண்டால் நிலைமை எப்படி மாறும் என்று நினைக்கவே அவர் தயங்கினார்.

''நீ போருக்குச் சென்று வெற்றியுடன் திரும்ப வேண்டும் என்று வாழ்த்துக் கூறுகிறேன்'' என்று வாழ்த்தி விட்டு, ''அதோடு நீ எனக்கொரு வாக்குறுதியும் அளிக்க வேண்டும்'' என்றார்.

சுந்தரபாண்டியன் அவர் முகத்தை உற்று நோக்கினான்.

''தம்பி! நாடு என்பது வெறும் மண் பரப்பல்ல. நீ இந்த நாட்டின் தலைவன்; குடிமக்கள் உன் குழந்தைகள். அவர்களைப் போரின் அழிவிலிருந்து காக்க ஏதும் வழி தெரிந்தாலும் அதில் போகத் தயங்கக் கூடாது. போரைத் தவிர்க்க முடியுமானால் தவிர்க்க வேண்டும்.''

ஏன் இப்படிக் கூறுகிறார் என்று இளையபாண்டியனுக்குத் தெரியவில்லை. அவரே கூறினார்: ''விழுப்பரையரும் கயல்விழியும் அங்கிருப்பதால் சமாதானத்தின் கடைசி நம்பிக்கை என் னுள் இன்னும் ஒரு மூலையில் ஊசலாடுகிறது. சமாதானத்துக்காக நீ எதை யாவது இழக்க நேர்ந்தாலும் பொருட்படுத்தக் கூடாது.''

''எதை இழக்க நேரிடும்?''

''எதை என்று என்னால் ஒன்றையும் இப்போது குறிப்பிட்டுக் கூற முடியவில்லை. போரில் வெற்றி என்பது எண்ணற்ற வீரர்களின் உயிரை நாம் இழந்த பிறகே கிடைக்கக் கூடியது. அதே போல் அமைதியின் வெற்றிக்காகவும் நீ சிலவற்றை இழக்க நேரிடலாம். பாண்டிய நாட்டின் வாழ்வு உன் கையில் இருக்கிறது. அதைக் காப்பவனே காவலன்.''

தயங்கி நின்றான் சுந்தரபாண்டியன்.

ஆவேசம் வந்தவர் போல் கூறினார் பாண்டியர்: ''நீ உனக்குள் இப்படி ஒரு சபதம் செய்து கொள்: 'நாட்டின் நல் வாழ்வுக்காக நான் உடன்பாடு செய்து கொள்ளவும் தயங்கமாட்டேன். அமைதி காப்பதற்காக நான் எதையேனும் இழக்க நேர்ந்தாலும் இழக்கத் துணிவேன். நாட்டின் தலைவனாக இருந்து நான் எதையும் முடிவு செய்வேன். நான் குடிமக்களின் தலைவன்!' ''

அவ்வாறே திருப்பிக் கூறிச் சபதம் செய்தான் சுந்தரபாண்டியன். அப்போது அவனது அங்கம் முழுவதுமே தீப் பரவுவது போல் ஒரு வேதனை கொழுந்து விட்டது. எதனை இழக்கத் துணிந்தான் அவன்?

இருபத்தோராம் அத்தியாயம்


போர்தான் முடிவா?

தமது படைவீரர்களில் ஒரு பகுதியினரைத் திருமுனைப்பாடிக்கும் மற்றொரு பகுதியினரைக் கண்ணனூருக்கும் அனுப்பச் செய்தார் வீரநரசிம்மன். கண்ணனூருக்கு அனுப்பப் பெற்ற வீரர்கள் திருமுனைப்பாடிக்குச் சென்றவர்களைவிட இருமடங்கு எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். கண்ணனூரிலிருந்து நேரே பாண்டிய நாட்டுக்குள் புகுந்துவிட வேண்டும் என்பது அவரது திட்டம். அவரே முன்னின்று படை நடத்திச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தார்.

பாமினியின் குறுக்கீடு அவருடைய வெஞ்சின நெருப்புக்கு நெய் வார்த்ததே தவிர, அதை அணைக்க முடியவில்லை. இரவில் அந்தப்புரத்தில் அவர் தனித்திருந்த போது அரசியாரின் கண்களும் சிவந்திருந்தன.

அரண்மனைப் பெண்டிர் அனைவருமே கண்ணீர் சிந்தியிருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொண்டார்.

''காலமெல்லாம் ஒரே போர்க்களமாக இருந்து விட்டது தங்களுக்கு. நான் இந்த வாழ்க்கைக்கு என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டேன். நம்முடைய குமாரத்தி பாமினியாவது சிறிது காலம் அமைதியாக வாழ்வதை நான் கண்டு மகிழ வேண்டும்.


1964
1962
1960
1958
1955


உங்கள் குடும்பத்தினருக்கு நாள் முழுவதும்
நீடிக்கும் புத்துணர்ச்சியளிக்க,
சிக்கனமான
ஆல்-பர்ப்பஸ் ப்ரோடெக்ஸ் டால்க்
PROTEX
உங்கள் குடும்பத்திற்கு இன்றே ஒரு டப்பாவை வாங்குங்கள்!
ப்ரோடெக்ஸ் ஆல்-பர்ப்பஸ் டால்கம் பவுடர்

இந்த ஒரே ஒரு வரத்தைத் தாங்கள் எனக்கு அருள வேண்டும்!''

வீரநரசிம்மன் திடுக்கிட்டார். இதுவரை அரசியாருக்கு இவ்வளவு மெய்த் துணிவு ஏற்பட்டதில்லை. காரணத்தை அவர் ஊகித்துக் கொண்டார். பாண்டிய நாட்டுப் பாணர் குலப் பெண் அந்தப்புரத்துக்குள்ளேயே தனது சதிச் செயலைத் தொடங்கி விட்டாள் போலும்!

''உன் மீது குற்றமில்லை. எல்லாம் அந்தப் பாண்டிய நாட்டுப் பெண்ணால் வந்த வினை. அவளை இங்கு அழைத்துக் கொண்டு வா!''

கயல்விழியும் பாமினியும் ஒன்றாக அங்கு வந்தார்கள். கயல்விழி கரம்கூப்பி வணங்கி நின்றாள்.

''நட்புறவு பேசுவதற்காக அவன் உங்களை அனுப்பினானா? அல்லது அந்தப்புரத்துக்குள் பகை மூட்ட உன்னையும், நாட்டுக்குள் உட்பகை மூட்டப் புலவரையும் அனுப்பினானா?''

''எங்கள் இருவரையுமே அவர் அனுப்பவில்லை'' என்றாள் கயல்விழி.

''என்ன!''

''அவருடைய மனம் எனக்குத் தெரியும். பெரிய பாண்டியர் புலவரை அனுப்பி வைத்தார். நான் எனது வற்புறுத்தலின் பேரில் வந்தேன்.''

''இதோ பார்! முயலைப் போல் இதுகாலம் பதுங்கியிருந்த கோப்பெருஞ்சிங்கன், என்னுடைய பகை வரும் என்பதை அறிந்தும் இப்போது இராஜராஜனைச் சிறை யிட்டிருக்கிறான். அவனாக இதைச் செய்யவில்லை. சுந்தரபாண்டியனின் தூண்டுதலும் துணையும் இருப்பதால் அவனுக்கு இந்த நெஞ்சுரம் வந்திருக்கிறது. நானே பாண்டிய நாட்டுக்குள் படையோடு புகுந்து அவனைச் சிறையிட்டுக் கண்ணனூர்க் கோட்டத்தில் அடைக்கப் போ[illegible]றேன்.''

இதைக் கேட்டதும் மூச்சுத் திணறியது கயல் விழிக்கு. அவரே மேலும் கர்ஜித்தார்: ''முதலில் உன்னையும் அந்தப் புலவரையும் கண்ணனூர்க் கோட்டத்தில் அடைக்கப் போகிறேன்.''

''இறைவனின் திருவுள்ளம் நமது இரு நாடுகளுமே அழிந்து சுடுகாடுகளாக மாறிப் போக வேண்டுமென்று இருக்குமானால் அதை யாரால் தடுக்க முடியும்?'' என்று பணிவோடு கூறினாள் கயல்விழி. ''சுந்தரபாண்டியர் வந்த பிறகு பாண்டியநாடே பெரும் பாசறையாக மாறி விட்டது. கோசல நாடும் எப்போதும் பாசறை தான். நீங்கள் போரிட்டு உங்களில் யார் வெற்றி பெற்றாலும், அழியப் போவது மட்டிலும் குடிமக்களாகிய நாங்கள்தாம். இந்தப் போரில் தோல்வி பெறுபவர்கள் அடுத்த போரில் வெற்றி பெற்றவர்களை அழிப்பார்கள். காலம் காலமாக இதுதானே நடக்கிறது? நடந்து விட்டுப் போகட்டும்! காவலர்களாக இருக்க வேண்டிய அரசர்கள் காலனின் தூதுவர்களாக மாறி விட்டார்கள். சுந்தரபாண்டியரும் வெற்றிச் செருக்கில் இவ்வாறுதான் துடித்து நிற்கிறார்.''

கயல்விழியின் பணிவும் துணிவும் அவள் சிந்தனைத் தெளிவும் வீரநரசிம்மனுக்கு அதிர்ச்சியைத் தந்தன.

''கூரைக் குச்சுகளில் வாழும் பெண்களிலிருந்து அரண்மனைகளின் அந்தப்புரங்களில் வாழும் பெண்கள் வரையில் போரால் அவர்கள் பெறும் துன்பங்களை வீரர்கள் அறிய மாட்டார்கள். நீங்கள் போர் செய்து மடியுங்கள். நாங்கள் தீக்குளித்து மடிகிறோம். பிறகு நாங்கள் சுமந்து பெற்ற குழந்தைகளுக்குத் துன்பம்; எங்கள் கையால் உணவு கொள்ளும் முதியோருக்குத் துன்பம். நாங்கள்



பெருமை

''என்னால்தான் நேரம் ஓடுகிறது!'' என்றது கடிகாரம்.

''என்னால்தான் காலம் ஓடுகிறது!'' என்றது காலண்டர்.

''இவை இரண்டும் இப்படிப் பீற்றிக் கொள்கின்றனவே, அந்தச் சூரியன் மட்டும் ஏன் வாயைத் திறக்க மாட்டேனென்கிறது?'' என்று வானத்தை நோக்கிக் கேட்டது பூமி.

''அதற்குப் பீற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை!'' என்றது வானம்.

— விந்தன் —



"என்ன சார் இது? அழைப்பிதழில் திருமணப் பெண்ணின் பெயர் மாலா என்பதற்குப் பதில் கலா என்று போட்டு விட்டீர்களே?"

"இன்விடேஷனை விநியோகித்தாகிவிட்டது சார். பேசாமல் கலாங்கிற பெண்ணையே கட்டிக்கொண்டு விடுங்கள்!"

அமங்கலிகளாக வாழ்ந்தாலோ அதை விட வேறு கொடுமை வேண்டாம்!"

"சுந்தரபாண்டியன் மட்டிலும் சோழ சாம்ராஜ்யத்தை அழித்து நிர்மூலமாக்கலாம் போலும்!" என்று கூறி நகைத்தார் சக்கரவர்த்தி.

"பாண்டிய நாட்டை அழிவிலிருந்து தடுத்துக் கொள்வதற்காக நடத்திய உரிமைப் போர் அது. பாண்டிய நாட்டிலிருந்து கொள்ளை கொண்ட பெருஞ்செல்வத்தில் சிறு பகுதியைத்தான் நாங்கள் திறைப் பொருளாகத் திருப்பிக் கேட்டோம். அதைக் கொடுப்பதாக வாக்களித்துப் பிறகு மாறி விட்டார் சோழர். எங்கே மீண்டும் பாண்டிய நாட்டின் மீது படை எடுப்பு நிகழுமோ என்ற அச்சத்தால் அவரை ஒடுக்க முனைந்திருக்கிறார் சுந்தரபாண்டியர்."

"கோசல சாம்ராஜ்யம் ஒன்று நிலைத்திருக்கும் வரையில் சோழ சாம்ராஜ்யமும் நிலைத்திருக்கும்!"

"பாண்டிய சாம்ராஜ்யமும் அதோடு நிலைத்திருக்கலாமே?" என்று கேட்டாள் கயல்விழி.

"வலிமை மிகுந்தோர் நிலைத்திருப்பார்கள்; எளியவர்கள் வீழ்ந்து விடுவார்களல்லவா?"

"அப்படியென்றால் இராஜ ராஜனை விட எங்கள் இளையபாண்டியர் நூறு மடங்கு வலியவர். நட்பென்றால் உயிரையே வழங்கக் கூடியவர். அந்த வலிமை மிக்கவர் இந்த வலிமை மிக்கவரின் நட்பை நாடுகிறார்."

"பெண்ணே! நீ அவனுக்கு அமைச்சராக இருக்க வேண்டியவள்!" என்று கூறிச் சிரித்தார் வீரநரசிம்மன். "அவன் வலிமை மிகுந்தவன் என்பதை நீ கூறி விட்டால் போதுமா? நான் நம்ப வேண்டுமல்லவா? அதை இந்தப் போரே முடிவு செய்யட்டும்! அவன் வலியவனாக இருந்தால் மதுரைச் சிறைக்குள் நான் இருப்பேன்; நான் வலியவனாக இருந்தால் கண்ணனூர்ச் சிறைக்குள் அவன் இருப்பான். என்ன, தெரிந்ததா, உனக்கு?"

கயல்விழி ஏதுமே பேசவில்லை.

"துவாரசமுத்திரத்திலிருந்தவர்கள் இதுவரை காஞ்சியில் தங்கிவிட்டோம். இப்போது எங்களையும் கண்ணனூர் மாளிகைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்" என்று கேட்டாள் பாமினி.

தமது குமாரத்தியை ஒரு கணம் உற்று நோக்கிவிட்டு, "நான் கண்ணனூரில் தங்கப் போவதில்லை; படைகளுடன் பாண்டியனின் தலை வாயில் கதவைப் போய்த் தட்டப் போகிறேன்!" என்றார்.

"தாங்கள் எங்கு சென்றாலும் கண்ணனூர் மாளிகைக்கு அழைத்துச் செல்லுங்கள். போர் முடியும் வரையிலும் நாங்கள் அங்கு தங்குகிறோம்!"

அரசியாரும் அவ்வாறே வேண்டிக் கொண்டார். சக்கரவர்த்திகள் சிறிது நேரம் ஆழ்ந்து ஆலோசித்தார். பிறகு, "நீங்கள் விரும்புவது போலவே வந்து கண்ணனூர் மாளிகையில் தங்கலாம்" என்றார்.

அரச பரிவாரத்தினர் கண்ணனூர்க் கோட்டையை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்கொண்டழைக்க வந்த கோசல நாட்டுப் படைத் தலைவன் வீரநரசிம்மனிடம் ஒரு செய்தி கூறினான்.

"சுந்தரபாண்டியன் தனது படைகளோடு வந்து நம் தலைவாயிலைத் தட்டுகிறான். காவேரிக் கரையில் உள்ள மகேந்திர மங்கலத்தில் பாசறை அமைத்துக் கொண்டு காத்திருக்கிறான்."

பாண்டியனின் தலைவாயிலைத் தட்டப் போவதாக மார் தட்டியவருக்கு இப்போது தலை சுற்றியது. கயல்விழியும் பாமினியும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு கண்கலங்கினார்கள். (தொடரும்)





நல்ல காபி தயாரிக்க புத்தம்புதிய பொடியே ஆதாரம்.

ப்ருக் பாண்ட் காபி

எப்பொழுதும் புதியது.

மற்ற காபி பொடிகளுக்கும் ப்ருக் பாண்ட் காபிக்கும் என்ன வித்தியாசம். ப்ருக் பாண்ட் காபி உள்ள ஒரு பையை திறந்து பாருங்கள் — விஷயம் புரியும். அது அப்போதே அரைத்த காபிக்கொட்டையின் உண்மையான புது மணம் கமழும்.

பொறுக்கி எடுத்த காபிக்கொட்டைகளை பதமாய் வறுத்து, அரைத்து அவைகள் வீசும் இயற்கையான மணத்தை காற்றுப்புகாத அழகான ஸெலோபேன் பைகளில் அடைப்பதே ப்ருக் பாண்டின் தனிச் சிறப்பு வாய்ந்தமுறை. இப்பொழுதே ப்ருக் பாண்ட் காபி அருந்தி அதன் புத்தம் புதிய பூரணமான மணத்தை அனுபவியுங்கள்.

நீங்களும் ப்ருக் பாண்டும் சேர்ந்து ஒரு கோப்பை அருமையான காபி தயாரிக்க முடியும். அதன் புதுமையையும் நறுமணத்தையும் ருசித்து அனுபவியுங்கள்.

82/88C-6A TAM

குரல் தரும் இன்பம்

1960ம் ஆண்டில் நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னால், பேச்சுத் துறை நிபுணர் என்று புகழ்பெற்ற ஸ்டீபன் எஸ். பிரைஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். 'தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களில் யார் தங்கள் குரல் உதவி கொண்டு அரங்கத்திலும் அந்தரங்கத்திலும் பேச்சின் கவர்ச்சியில் ஒரு தனித்துவத்தைத் தோற்றுவித்துக் கொள்கிறார்களோ அவருக்கே பொது மக்களின் அபிமானம் சேரும். சமீப காலத்தில் இந்த வகையில் நம் பாராட்டைப் பெற்றவர்கள், ஐசன்ஹோவரும் ரூஸ்வெல்டும் ஆவார்கள். முன்னவருக்கு, அவருடைய எளிய கிராமிய பாணியும், தயங்கிய பேச்சும், கவர்ச்சி கலந்த தனித்துவத்தைக் கொடுத்தன. பின்னவருக்கு நயமான வார்த்தைச் செறிவும், நம்பிக்கை ஊட்டும் குரலும், நளினமான புன்சிரிப்பும் ஒன்று கலந்து உயர்வைக் கொடுத்தன. ஆகவே குரல் நயமும் பேசும் பாணியும் பொதுப்பணிக்கு இன்றியமையாதவை' என்று எழுதியிருந்தார்.

ஆரவாரம் நிறைந்த அரசியல் துறையிலேயே குரல் நயத்துக்கு முக்கிய இடம் உண்டு என்றால் அமைதி நிறைந்த கலைத் துறையிலோ அதன் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகமாகி விடுகிறது. கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவே, கலைத் துறையில் தம் குரலின் வலிமையாலும் மென்மையாலும் ஒரு கேந்திர ஸ்தானத்தைப் பிடித்துக் கொண்டு, எழுபது வயதை எட்டிப் பிடித்தும், பேச்சிலும், இசையிலும், பாவத்திலும் பிசிறு தட்டாத இனிமையை உள்ளடக்கித் தனித்துவம் பெற்றிருப்போரை விரல் விட்டு எண்ண ஆரம்பித்தால், காலட்சேபத் துறையின் தனிப் பிரதிநிதியான சரஸ்வதிபாய் அவர்களின் நினைவு ஆரம்ப கட்டத்திலேயே தோன்றி விடும்.

சரஸ்வதிபாய் முறையாய் இசை பயின்றவர். ஆனால் அந்த இசைத் துறையிலேயே இசைந்து தங்கி விடாமல், இசை, இயல், நாட்டியம் மூன்றும் ஒன்றிக் கலந்து பரிமளிக்கும் காலட்சேபத் துறைக்குப் போய்ச் சேர்ந்தார். அவருடைய குரல் வெற்றிப் பாதையில் அவரை இட்டுச் சென்றது!

ஸ்ரீமதி சரஸ்வதிபாயின் அந்த நாள் அனுபவங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முற்பட்டபோது தமிழ் நாட்டில் இந்தக் காலட்சேபக் கலை எப்படி வேரூன்றி வளர்ந்தது என்றும் அறிந்துகொள்ள முடிந்தது.

தஞ்சையில் மகாராஷ்டிர மன்னர்கள் வாழ்ந்த காலம். ராஜ சபையினரை மகிழ்விக்க மகாராஷ்டிரப் பகுதியிலிருந்து பல கலை வித்பன்னர்கள் வருவது வழக்கம். அவர்களில் ராமச்சந்திர பாவா என்னும் காலட்சேபக் கலைஞரும் ஒருவர். பௌராணிக பக்தி பந்தா என்ற அடிப்படையில் அவர் மகாராஷ்டிர பாஷையில் கதை சொன்னார். இண்டி, ஓவி, சாகி என்ற சாஸ்திரிய ஹரிகதைப் பந்தாக்களைக் கையாண்ட ராமச்சந்திர பாவாவுக்கு அற்புதமான சாரீரம்.

ராமச்சந்திர பாவாவின் ஹரிகதைகளைத் தமிழ் நாட்டு இளைஞர் ஒருவர் உன்னிப்பாகக் கேட்கத் தொடங்கினார். 'ஏன் தமிழிலும் இப்படி இசையுடன் கலந்த கதைகளை, அந்தப் பாணியின் அடிப்படையிலேயே சொல்லக் கூடாது' என்ற ஆர்வம் துளிர்த்தது. அந்த இளைஞர் ஏற்கனவே சங்கீதக் கலையின் உபாசகர். ஆகவே, வெகு விரைவாகவே அந்த இளைஞர் மகாராஷ்டிர பந்தாவை அஸ்திவாரமாகக் கொண்டு தமிழில் ஹரிகதைகள் செய்யத் தொடங்



தொழில் நினைவுகள்

கிறார். தஞ்சைப் பிரதேசம் முழுதும் அவர் புகழ் பரவ ஆரம்பித்தது. அந்த இளைஞர் தான் பிரபல கிருஷ்ண பாகவதர். தமிழ் நாட்டில் காலட்சேபக் கலைக்கு வித்திட்டவர்.

ராமச்சந்திர பாவா நிகழ்த்திய காலட்சேபங்களையும் கிருஷ்ண பாகவதர் நிகழ்த்திய காலட்சேபங்களையும் கேட்டு ரசிக்கக் கொடுத்து வைத்தவர்கள் 'பாவா கதையைக் கேட்கணும். ஐயன் கதையைக் கேட்பதோடு பார்க்கவும் பார்க்கணும்!' என்று சொல்வார்களாம். கிருஷ்ண பாகவதர் காலட்சேபக் கலைக்கு அவசியமான, இசை, பேச்சு ஆகிய இரண்டு அம்சங்களுடன் நடிப்பு என்ற முக்கியமான புது அம்சத்தையும் சேர்த்துக் கொண்டார். மேடையில் நின்று கதை சொல்லும்போது அந்தந்த விநாடியில் வெவ்வேறு கதாபாத்திரங்களாகவே, குரல் மாறுதலாலும் முகபாவத்தினாலும் மாறி விடுவார். இந்த உத்தி ஜனரஞ்சகமாக அமைந்து விட்டது. கிருஷ்ண பாகவதரின் பாணியைத்தான் எல்லோரும் பின்பற்றினார்கள். அவர்களில் ஒருவர்தான் திருவையாறு டி. கிருஷ்ணாசார் என்பவர். அவர்தான் சரஸ்வதிபாய் அவர்களின் குருவாக விளங்கினார்!

ரயில்வே இலாகாவில் பணியாற்றிய குப்தி ராமாராவின் ஒரே புதல்வி சரஸ்வதி பாய். மகளுக்கு இசையில் ஈடுபாடு இருப்பதை உணர்ந்து சங்கீதம் கற்க ஏற்பாடு செய்தார். கிருஷ்ண பாகவதரின் பின்பாட்டுக்காரராக இருந்த பஞ்சாபகேச ஐயர்தான் முதல் உபாத்தியாயர். ஒன்பதாவது வயதிலேயே, தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்துஸ்தானி சாகித்தியங்களை அற்புதமாகப் பாடும் ஆற்றலைப் பெற்றார் சரஸ்வதி பாய்.

'தம் குழந்தையின் திறமையும் ஞானமும் அந்த நாளில் பிரபலமடைந்திருந்த பல வித்துவான்களுக்குத் தெரியட்டும், அவர்கள் ஆசீர்வாதம் செய்யட்டும்' என்ற ஆசையில் தம் வீட்டிலேயே பல வித்துவான்களை வரவழைத்துப் பெண்ணைப் பாடச் சொன்னார் தந்தை. கேட்டவர்கள் பிரமித்துப் போனார்கள். திகைத்துப் போனார்கள். 'ஆஹா! பிரமாதம்! நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது' என்று உதட்டளவில் சொன்னாலும் உள்ளூற அவர்களுக்குப் பொறாமை தான்! பயம்தான்!

சிறுமி சரஸ்வதி பாய்க்கு என்னவோ தனி சங்கீதத் துறையை விடக் காலட்சேபக் கலை மீது ஆர்வம் கனிந்தது. பல பாஷைகளைச் சுலபமாகப் பேசும் பழக்கம் ஏற்கனவே இருந்ததால் ஹரிகதைகளுக்குத் தேவையான சம்பாஷணைக் கலை லாகவமாக ஒத்துழைத்தது. இரண்டே ஆண்டுகளில் ஹரிகதை செய்யும் திறமை பெற்று விட்டாள். சங்கீதத் திறமையை வீட்டளவில் அரங்கேற்றம் செய்த தந்தை இப்போது காலட்சேபத் திறமையை வெளியிலேயே அரங்கேற்ற ஆசைப்பட்டார்.

அந்த நாட்களில் வட சென்னையில் 'தொண்டைமண்டலம் சொஸைட்டி' என்ற ஸ்தாபனம் இயங்கி வந்தது. அங்குதான் எல்லாப் பிரபல வித்துவான்களும் கச்சேரி செய்வார்கள். அதன் காரியதரிசியான முனிசாமி நாயுடு, சரஸ்வதிபாயின் காலட்சேப அரங்கேற்றத்தைத் தம் சொஸைட்டியிலேயே வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லித் தேதியும் குறிப்பிட்டு எல்லாருக்கும் அழைப்புக் கார்டுகள் அனுப்பிவிட்டார்.

ஆபத்து அப்போதுதான் எழுந்தது. சரஸ்வதிபாயை அங்கே அரங்கேற்றம் செய்ய அனுமதித்தால், தாங்கள் தொண்டைமண்டலம் சொஸைட்டியைப் பகிஷ்கரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று பல பிரபல சீனியர் வித்துவான்கள் முனிசாமி நாயுடுவுக்குக் கடிதம் எழுதி விட்டார்கள். அவர்களில் அநேகர் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்குமுன் அந்தச் சிறுமியின் கானத்தைக் கேட்டிருக்கிறார்கள். அரங்கேற்றத்துக்குப் பிறகு பொதுமக்களின் பாராட்டு அமோகமாக அவள் பக்கம் திரும்பிவிடுமோ என்ற பொறாமையிலேயே ஆட்சேபக் குரலை எழுப்பினார்கள்.

பாவம்! முனிசாமி நாயுடு மனம் தத்தளித்தார். அரங்கேற்றத்தை ரத்து செய்வதா? அல்லது அநேக ஜாம்பவான்களின் கோபத்துக்கு ஆளாவதா என்று அவரால் தீர்மானிக்க முடியவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலைக்கு முடிவு காண முனிசாமி நாயுடுவுக்கு சரஸ்வதிபாயின் குருவே உதவி செய்தார். ''ஐயா! தயவுசெய்து இந்த நிகழ்ச்சியை ரத்துசெய்து விடுங்கள். என் சிஷ்யை நன்றாகக் கதை செய்து புகழுக்குப் பாத்திரமானாலும், பெரிய வித்துவான்கள், பொறாமையினால் உங்கள் சொஸைட்டியைப் பகிஷ்கரிப்பார்கள். அவள் ஏமாற்றத்தை அளித்தால், இத்தகைய சாதாரண நிகழ்ச்சிக்கு நீர் ஏற்பாடு செய்த காரணத்தைக் காட்டி உம்மை ஒதுக்குவார்கள்'' என்றாராம்! அவருக்குத்தான் எத்தகைய பரந்த மனம்!

ஆனால் இயலாதிகல் சொஸைட்டியைச் சேர்ந்த வீரராகவ ஐயங்கார் என்பவர் இந்த அரங்கேற்றத்தைத் தம் ஸ்தாபனத்தில் வைத்துக் கொள்ள முன்வந்தார். அதற்கான அழைப்புக் கார்டுகளைப் பார்த்தசாரதி என்னும் கையெழுத்துடன் அனுப்பினார். பார்த்தசாரதி என்று எந்த நிர்வாகியும் அந்த ஸ்தாபனத்தில் இல்லை. திருவல்லிக்கேணி பெருமாள் பார்த்தசாரதிதான் அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தப் பெயரைப் போட்டார்!

முதல் தடவையாக ரசிகர்கள் முன் தம் பதினோராவது வயதிலேயே அன்று சரஸ்வதி பாய் 'கருட கர்வ பங்கம்' என்னும் ஹரி கதையை நிகழ்த்தினார். முழு வெற்றி. கேட்டவர்கள் சிலையாக மெய்ம்மறந்து அமர்ந்திருந்தனர். பொறாமைக்காரர்களின் கர்வபங்கமாகவும் கதை அமைந்தது.

வெளியூரில் முதல் தடவையாக சரஸ்வதி பாய் நிகழ்த்திய காலட்சேபம் 'திரௌபதி மான சம்ரட்சணம்'. தஞ்சாவூர் சுந்தரமய்யர் வீட்டுக் கல்யாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி. அந்த நாளில் பிரபல



ஹிந்து தினசரி பத்திரிகையின் டெபுடி ஆசிரியர் திரு வி. கே. நரசிம்மனின் புதல்வி சௌ. இந்திராவுக்கும் மதுரை தியாகராஜர் கல்லூரி பிரின்ஸிபால் திரு ஜி. வரதாச்சாரியாரின் புதல்வர் சிரஞ்சீவி டாக்டர் ஆர். வி. கோபாலகிருஷ்ணனுக்கும் சென்ற மாதம் திருமணம் மைலாப்பூரில் மிக விமரிசையாக நடந்தது.

வாழ்க மணமக்கள்!



"இதென்ன! இரண்டு வீட்டிலும் கருப்புக் கொடி......?"

"இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு கொடி. கருப்புக்கு மறுப்புத் தெரிவித்து ஒரு கொடி!"

மடைந்திருந்த 'மற்றொரு சீனியர் பாகவதர், கல்யாண வீட்டுக்கு மிகவும் வேண்டிய விருந்தினராக வந்திருந்தவர், தாம் இருந்தால், அந்தச் சிறுமியின் கதையைக் கேட்க உட்கார்ந்து அதற்குக் கௌரவம் அளிக்க நேரிடுமோவென்று பயந்து ஏதோ சாக்குச் சொல்லி விடைபெற்றுப் போவதில் தீவிரம் காட்டினார். இதை அறிந்த கல்யாண வீட்டுக்காரர் அவரை வற்புறுத்தி இருக்கச் செய்து கதையையும் கேட்கச் செய்தார். கடைசியில் அந்த சீனியர் தம்மை மறந்து அந்தச் சிறுமியைப் பாராட்டினார். அதுவே ஆத்மார்த்தமான ஆசிர்வாதமாக அமைந்தது!

தஞ்சையில் கிடைத்த புகழ் தமிழக மெங்கும் பரவி, பிறகு அதையும் தாண்டி வடநாடு முழுதும் ஒலித்தது. சென்ற இடமெல்லாம் அந்தந்தப் பிராந்திய மொழியில் பேசவும் பாடவும் திறமை இருந்ததால் கேட்போர்களின் பரவசத்துக்குப் பாத்திரமாகும் வாய்ப்பும் நிறைய இருந்தது. 1916ல் பூனாவிலுள்ள கந்தர்வ மகா வித்யாலயாவைச் சேர்ந்த பண்டித விஷ்ணு திகம்பர் 'காயன படு' என்ற விருதை அளித்தார். 1920ல் லோகமான்ய கங்காதர திலகர் 'கீர்த்தன படு' என்ற பட்டத்தைக் கொடுத்தார்.

மைசூர் மகாராஜாவிடம் பெறுதற்கரிய 'கில்லத்' மரியாதையைப் பெற்றவர் சரஸ்வதிபாய். பொதுவாக மைசூர் மகாராஜாவின் முன் தங்கள் திறமையைக் காண்பிக்க வித்வான்கள் அங்கு போய்ப் பல நாட்கள் காத்திருந்து தர்பாரிலிருந்து அழைப்பை எதிர்பார்ப்பது வழக்கம். ஆனால் ராமநாதபுரம் மகாராஜா மூலம் சரஸ்வதி பாயின் புகழ் பற்றிக் கேட்டிருந்த மைசூர் திவான், தாமாகவே சரஸ்வதிபாய்க்கு அழைப்பு விடுத்தார். தர்பாரில் கன்னடக் கீர்த்தனைகளை அவர் தம் இனிய குரலில் பாடவே, மகாராஜாவுக்கு அபரிமித உற்சாகம் ஏற்பட்டது. ஜகன்மோகன மாளிகையில் அந்த அம்மையார் ஒன்றரை மணி நேர அவகாசத்துக்குக் கன்னடத்திலேயே ஹரிகதை செய்ய வேண்டும் என்றும், தாம் கேட்டு ரசிக்க விரும்புவதாகவும் சொல்லி அனுப்பினார்.

கதை ஆரம்பமாகி ஒரு மணி அவகாசம் ஆயிற்று. ரசிகர்களின் முன் வரிசையில் அமர்ந்திருந்த மகாராஜா கதையை அவசரப்பட்டு ஒன்றரை மணி நேரத்தில் முடிக்க வேண்டாம் என்றும், மேலும் கொஞ்சம் அவகாசம் எடுத்து விஸ்தாரமாகவே செய்து முடிக்கலாமென்றும் தகவல் அனுப்பி விட்டுக் கதையைத் தொடர்ந்து கேட்கலானார்.

இது மாதிரி எத்தனையோ சந்தர்ப்பங்கள். ராஜ மரியாதைகள்!

இன்றும் சாதாரண சம்பாஷணையின் போது கூட சரஸ்வதிபாய் அவர்கள் தம்மை மறந்து ஹரிகதை பாணியிலேயே திரும்பிவிடுவதைக் காணலாம். சுவாரசியமாக ஒரு நிகழ்ச்சியைப் பற்றி விவரித்துக் கொண்டு வரும்போதே, 'இந்தக் கட்டத்திலே அங்குஎன்ன நடக்கிறது பார்க்கலாம்' என்று அவர் சொல்லும் போது அவர் காலட்சேபத்தைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்ற பிரமை ஏற்படுகிறது. அதேபோல் பழைய நினைவுகளைக் கொண்டு வரும் சில பாட்டுக்களையும் அநாயாசமாகப் பாடிக் காட்டும் உற்சாகம் இருக்கிறது. முன்பு நைஜாமின் முன் பாடிய 'கோயி ஷாரு கோயி ஃபக்கிர் ஹை?' என்ற பாட்டைப் பாடிக் காண்பித்தபோது நைஜாம் எப்படி ரசித்திருப்பார் என்பதை உணர முடிந்தது.

நந்தன் சரித்திரமும் பக்த ராமதாசும் சரஸ்வதிபாய்க்கு மிகவும் பிடித்தமான கதைகள். எத்தனை தடவை சொன்னாலும் அலுக்காத உணர்ச்சிப் பிரவாகம் அந்த இரண்டு கதைகளிலும் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

'ஹரிகதை பல முக்கிய கலைகளின் சம்மேளனம். இசைத் திறமை மாத்திரம் நம்பியிருப்பவர்களால் அதில் பரிமளிக்க முடியாது. ஆனாலும் இன்னும் வானொலி நிறுவனத்தார் அகில பாரத நிகழ்ச்சிகளில் காலட்சேபத்துக்கு இடம் அளிப்பதில்லை. சங்கீதத்தை விட அது உயர்ந்ததில்லை என்பது அவர்கள் எண்ணம் போலும்' என்று குறிப்பிட்டார் அவர்.

உள்ளூர் வானொலி நிலையங்களில் இப்போதெல்லாம் ஒதுக்கும் முக்கால் மணி நேர அவகாசம் குறைவு என்று தோன்றினாலும், பங்கெடுத்துக் கொள்பவர்கள், முன் யோசனையாகத் தகுதிக்கேற்ற சம்பவங்களை நிர்ணயித்துக் கொண்டால் அவசரப்பட்டுப் பிற்பகுதியில் ஓட்டமாக ஓடி முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது என்றும் அநுபவ பூர்வமாகக் குறிப்பிட்டார்.

அன்றைய நினைவுகளை இன்றும் பசுமையாக மனத்தில் கொண்டு உற்சாகத்துடன் சரஸ்வதிபாய் அவர்கள் சொல்லிக்கொண்டு வந்தபோது சிப்ளாக் கட்டை ஒலி எங்கிருந்தோ மறைவிலிருந்து ஒலிப்பதுபோலவே ஒரு பிரமை!

—கோமதி சுவாமிநாதன்



ஜனநாயகத்தினால் "பெருத்த நன்மை ஏற்படும் என்று ஒரு காலத்தில் எதிர்பார்த்தார்கள். ஆனால் ஜனநாயகமென்பது பொது மக்களுக்காக, பொதுமக்களைக் கொண்டு பொதுமக்களை நையப் புடைப்பதாக இருக்கிறது. — **ஆஸ்கார் ஒயில்ட்**

('ஸோஷலிஸ ஆட்சியில் மனிதனது ஆத்மா' என்ற புத்தகத்திலிருந்து.)

❀ ❀ ❀

இந்த மாதம் கடவுளுக்குப் பலத்த யோகம் அடிக்கும் மாதம் போலிருக்கிறது. கோயில்கள், மாதா கோவில்கள், மசூதிகள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்காக நன்கொடையளித்தால் வருமான வரிக்காக இரண்டு லட்சம் ரூபாய் வரைதான் சலுகை காட்டி வந்தார்கள். நிதி மந்திரி டி.டி.கே.யே அந்தத் தொகையைப் புது வருடத்திலிருந்து ஐந்து லட்சமாக அதிகரித்திருக்கிறார்!



கேரளத் தேர்தலில் பட்டம்பி தொகுதியில் அபேட்சகராக நின்ற இடதுசாரி கம்யூனிஸ்ட் தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு, ஒரு மசூதிக்கு ரூ. 25 (இருபத்தைந்து மாத்திரம்): நன்கொடையாக அளித்தார். மறுநிமிடம், அவருக்குப் போட்டியாக நின்ற வலதுசாரி கம்யூனிஸ்டு அபேட்சகர், ரூ. 26 (ஒரு ரூபாய் அதிகமாகவே) நன்கொடையளித்தார். ஆனால் பின்னவர், தேர்தலில் தோற்று விட்டதால் நன்கொடையை வாபீஸ் செய்து விடும்படி நீதி ஸ்தலத்தில் ரிட் மனு தாக்கல் செய்யக் கூடும். இந்த இரண்டு தோழர்கள் கடவுளுக்குக் காணிக்கை செலுத்தியதைக் கேட்டுக் கார்ல் மார்க்ஸ், லெனின் இவர்களுடைய ஆத்மா (அவர்களுக்கு ஆத்மா இருந்தால்) கழி பேருவகை யடைந்திருக்கும்.

அடுத்த அகில இந்திய தேர்தல் சமயம் ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர், கும்பகோணம் ராமர் கோவிலுக்கும் திருப்பணிக்காக ஏதாவது நன்கொடையளிப்பதைப் பற்றித் திட்டம் போட்டுக் கொண்டிருப்பார்.

❀ ❀ ❀

சென்னை மவுண்ரோட் காரியாலயமொன்றின் தலைவர் ஒரு நாள் பிற்பகல் சேவகரைக் கூப்பிடுவதற்காக மணியை அடித்தார். அவர் வரவில்லை; அடித்துக் கொண்டேயிருந்தார்; பயனில்லை. மணியைக் கையில் எடுத்து அடித்துக் கொண்டே வெளியே வந்தார். காரியாலயத்தைச் சேர்ந்த சேவகர்கள் ஐந்தாறு பேரையும் காணோம். புலன் விசாரித்ததில் சேவகர்களின் உறவினர்கள் எல்லாரும் நோய் நொடியற்று இருக்கின்றனர் என்றும் யாருக்கும் உயிருக்கு ஆபத்தில்லை என்றும் தெரிந்தது! பின்னே அவர்கள் எங்கே? இரண்டொருன்று குமாஸ்தாக்கள்கூட அவர்கள் ஆசனத்தில் இல்லை. ஆனால் அவர்கள் காணாமற் போய்விடவில்லை.

சமீபத்தில் உள்ள இந்தியன் காப்பி போர்டின் காப்பிக் கொட்டை விற்பனைக் காரியாலய வாசலில் ஒரு பர்லாங்கு நீளமுள்ள கியூவில் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்!

கியூ வரிசைகளை அடிக்கடி பார்த்தோ, அல்லது அவற்றில் நின்றோ பழக்கப்பட்டு வந்துள்ள நமக்கு அவை திடீரென்று மறைந்து விட்டால் ஹிருதயம் அதிர்ச்சி யடைந்துவிடுமே. அத்தகைய ஆபத்து எதுவும் ஏற்படாமல் புது கியூ வரிசைகள் ஏற்பட்டு வந்து கொண்டிருக்கின்றன.

காப்பி நமக்கு இன்றியமையாத பானமாகப் போய் விட்டது. ஏன், இப்போதெல்லாம் கடவுளுக்கும் கடச்கட வைத்து, அதை நைவேத்தியம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இந்தக் காப்பி போடுவதற்குச் சர்க்கரை, பால், காப்பிக் கொட்டை ஆகியவை தேவை.

சர்க்கரைக்குக் கார்டு — கியூ வரிசை நிற்கிறோம். பாலுக்குக் கார்டு — கியூவரிசை நிற்கிறோம்.

அந்தக் கியூ வரிசை அந்தஸ்து ஏற்படாதிருக்கக் காப்பிக் கொட்டை மட்டும் என்ன பாபம் செய்து விட்டது? எனவே அதற்கும் இப்போது அந்தப் பாக்கியம் கிடைத்துவிட்டது.

காப்பிபோர்டின் கடைவாசலில் 'மத்தியதர' வகுப்பைச் சேர்ந்த இளம் ஆண்களும், பெண்களுமாக நன்றாக உடை உடுத்துக்கொண்டு நடுத் தெருவில் கியூ வரிசையில் நிற்கின்றனர். மற்றக் கடைகளில் இங்கே விற்கும் விலையைவிட மூன்றில் ஒரு பங்கு அதிகமான விலை.

காப்பி விஷயத்தில் கியூ வரிசைகள் பூரணமாவதற்கு இன்னும் ஒரே ஒரு அம்சம் பாக்கியிருக்கிறது. காப்பி போட, அடுப்பு மூட்ட மண்ணெண்ணெய் வேண்டுமே. இப்போது அரசாங்கமும் மண்ணெண்ணெய் விற்க ஆரம்பித்திருக்கிறது. அதற்கும் மற்ற எண்ணெய்க் கம்பெனிகளுக்கும் அடிக்கடி, 'லடாய்' ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. திடீரென்று ஒருநாள் இந்திய அரசாங்கம் அன்னிய நாட்டுக் கம்பெனிகள் எண்ணெய் விற்பதைத் தடை செய்து விடலாம். அல்லது அந்தக் கம்பெனிகள் தாமாகவே வியாபாரத்தை நிறுத்தி விடலாம். அப்போது அரசாங்க

மண்ணெண்ணெய் வாங்குவதற்கு நாம் கட்டாயம் இரவில் நிற்கும்படியா யிருக்கும்! இது வரிசை ஜிந்தாபாத்!

''அப்படியாவது காப்பி பானம் சாப்பிட்டாக வேண்டுமா?'' என்று ஒரு குரல் பனிமலைச் சாரலிலிருந்து காதில் வந்து விழுகிறது.

ஸ்ரீமந் நாராயணன்தான் அப்படிச் சொல்கிறார். விஷ்ணு பகவானில்லை. நேபாளத்தில் இந்திய தூதரா யிருக்கும் மாஜி திட்டக் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமன் நாராயணன்.

''நான் இங்கே அன்னிய நாட்டுத் தூதர்களுக்கெல்லாம் துளசி தீர்த்தம்தான் பானமாகக் கொடுக்கிறேன். நீங்களும் காப்பிக்குப் பதிலாக அதைச் சாப்பிட்டு வரலாம்'' என்று அவர் சொல்லாமல்லவா?

ஃ ஃ ஃ


யாராவது வடக்கத்தியர் ஒருவர் தமிழில் பேசி விட்டால் அதைப் பற்றி நாம் ஆச்சரியப்படுகிறோம். பத்திரிகைகள் 'தமிழில் பேசினார்' என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்புப் போடுகின்றன. அவர் ஏதோ மகத்தான தியாகம் செய்து விட்டதாகப் பலர் எண்ணுகிறார்கள்.

இராணுவத் தலைவரான ஜெனரல் சௌதரி சில தினங்கள் முன்னர், பதினாறாவது 'லைட் காவல்ரி' படையைச் சேர்ந்த துருப்புகளைப் பாராட்டிப் பேசிய போது தமிழிலேயே முழுதும் பேசினாராம். அந்தப் படையிலுள்ள போர் வீரர்கள் அனேகமாகத் தமிழர்களாம்.

கொண்டாட்டத்தின் போது வழக்கமான 'படா கானா'வும் நடைபெற்றதாம். இந்த ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி வார்த்தைக்கு 'விருந்து' என்று அர்த்தம். இதைப் பார்த்தபோது சென்னையில் இராணுவ முகாமுக்குப் பக்கத்தில் 'ஆர்ம்ட் போர்ஸஸ் அவன்ஸீர்' என்று ஒரு பெரிய பலகை தொங்கிக் கொண்டிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. முதல் இரண்டு ஆங்கில வார்த்தைகளும் 'ஆயுதப் படை' என்பதைக் குறிக்கிறதென்று தெரியும். மூன்றாவது வார்த்தை எனக்கு வெகு காலம் வரை புரியாதிருந்தது. அது, ஔரங்கசீப் சம்பந்தப்பட்டதாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன். இதைப் பற்றிச் சமீபத்தில் என்னைப் போன்று குழம்பிய ஒருவர் ஒரு பத்திரிகைக்குக் கடிதம் எழுதினார். இப்போது, 'அவன்ஸீர்' என்பதற்குப் பதிலாக 'கான்டீன்' என்ற வார்த்தை அந்த போர்டில் காட்சி அளிக்கிறது!

ஃ ஃ ஃ

மேலேகூறிய 'பதினாறாவது லைட் காவல்ரி' படையினர் மத்திய பிரதேசத்தில் எங்கேயோ ஓரிடத்தில் 'டாங்கு' ஆயுதப் போர்ப் பயிற்சி செய்து கொண்



டிருந்தார்களாம்.... 'காவல்ரி' என்றால் 'குதிரைப் படை' ஆயிற்றே! வீரர்கள் டாங்கு'களை இழுத்துச் செல்வார்களா?

'ரௌடி' என்ற வார்த்தையைச் சட்டசபையில் உபயோகிப்பது சரியா என்பது பற்றிச் சென்னை சட்டசபையில் ருசிகரமான விவாதம் நடைபெற்றது. அதற்குப் பதிலாகக் 'கொடியவர்கள்', கயவர்கள்', 'சமூகத் துரோகிகள்' 'போக்கிரிகள்' என்ற வார்த்தைகளுள் ஒன்றை உபயோகிக்கலாம் என்று சொன்னார்கள்.

இவற்றுள் 'போக்கிரிகள்' என்ற வார்த்தைதான் மிகவும் பொருத்தமானது என்று முதன் மந்திரி அபிப்பிராயப்பட்டார். ஆனால், 'போக்கிரி' என்பது பொய் சொல்வது, ஏமாற்றுவது, ஏமாற்றிப் பணம் பறிப்பது, லஞ்சம் வாங்குவது முதலியவற்றைக் குறிக்கும். பெரும்பாலான அரசியல்வாதிகள், சில உத்தியோகஸ்தர்கள், சில மந்திரிகள் விஷயத்தில்கூட இந்த வார்த்தை பொருத்தமாக அமையக் கூடுமாதலால் அந்த வார்த்தையை உபயோகிப்பதற்கில்லை.

போக்கிரி என்பதற்குச் சரியான ஆங்கில பதம் 'ராஸ்கல்' என்பதா




கும். இதைச் செல்லப் பெயராகவும் உபயோகிப்பதுண்டு.

சபாநாயகர், 'ஆக்ஸ்போர்டு அகராதி'யைப் பார்த்துவிட்டு '''ரௌடி' என்ற ஆங்கில வார்த்தைக்கு முரட்டுத்தனமான, கலாட்டா செய்து, கூச்சலிடும் நபர்'' என்று பொருள் கூறினார். பிரெஞ்சு சட்டசபை அங்கத்தினர்கள் சபையில் கூச்சலிடுவதும், மேஜைகளைத் தட்டிச் சாமான்களை எறிந்து கலாட்டா செய்வதும், ஒவ்வொரு சமயம் ஒருவரையொருவர் தாக்கி முரட்டுத்தனமாக நடந்து கொள்வதும் வழக்கம். (பிரெஞ்சு சட்டசபை அங்கத்தினர்கள் என்மீது உரிமைப் பிரச்னையைக் கிளப்பமாட்டார்கள் என்ற தைரியத்தினால் இப்படி எழுதுகிறேன்.) ஆகையால் 'ரௌடி' என்பது ஒரொரு சமயம் சில சட்டசபை அங்கத்தினர்களைக் குறிப்பதுமாகும்!

'விஷமிகள்' என்ற வார்த்தை கூடிய வரை பொருத்தமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

—என். ஆர்.


SANKAR BRAND
CALCIUM CARBIDE


"ஸார்!...."

கேட்டுக்கு அப்பாலிருந்து அடக்கமான முறையில் எழுந்த குரல் பங்களாவின் உள்ளே புகுந்து எவர் கவனத்தையும் ஈர்க்கவில்லை. கோபாலன் தன் குரலில் சிறிது வலுவைக் கூட்டினான். பயன் இருக்கத்தான் செய்தது. உட்புறமிருந்து எதிர்க் குரல் வந்தது.

"யார்?... என்ன வேண்டும்?" — தேனினும் இனிய குரலும், மானினம் போன்ற நடையுமாய் எழிலின் முழு வடிவாய் மங்கை ஒருத்தி உள்ளேயிருந்து வந்தவண்ணம் மேற் கூறியவாறு கேட்டாள்.

கோபாலன் அவளைப் பார்த்ததும், அவள் குரலைக் கேட்டதும் பேச மறந்தான், கண்ணை இமைக்க மறந்தான்.

அவனுடைய அந்நிலை அவள் உள்ளத்தைத் தொட்டு விட்டது. அதனால் அவள் நடையிலும் சற்றுத் தடுமாற்றம். மெல்ல நடந்து



கேட்டை அணுகினாள். கேட்டின் ஒரு புறம் அவள்; மறுபுறம் அவன்.

"மிஸ்டர் பசுபதிராம் அவர்களைக் காண வேண்டும்."

அவன் கையிலிருந்த கடித உறை அவன் வந்த அலுவலை அவளுக்கு உணர்த்திவிட்டது போலும்! இதழ்களில் குறுநகை நெளிய, "நெடு நேரமாக நிற்கிறீர்களோ? தர்வான் காய்ச்சலில் படுத்ததால் வருகிறவர்களுக்கு இப்படி ஒரு தொல்லை!" என்றபடி அவள் பூட்டையும் கேட்டையும் திறந்து விட்டுத் திரும்பி நடந்தாள்.

இருவரும் முன்புற ஹாலை அடைந்தார்கள். "சற்று உட்காருங்கள். அப்பா பூஜையில் இருக்கிறார். இதோ வந்துவிடுவார்" என்று கூறி மின்சார விசிறியைப் போட்டுவிட்டு அவள் உள்ளே சென்றாள்.

அவள் உட்புறத்தில் ஏதோ அலுவலாக இங்கும் அங்கும் நடமாடினாள். இடையிடையே அவன் பார்வை ஹாலின் பக்கம் வந்து வந்து மீண்டது. அவளைத் தவிர முதிர்ந்த வயதுடைய அம்மாள் ஒருத்தி வளைய வருவதையும் கோபாலன் கண்டான்.

நிமிடங்கள் சில சென்றன. பெரியவர் ஒருவர் ஹாலில் பிரவேசித்தார். கோபாலன் எழுந்து நின்று கரம் கூப்பினான். பெரியவர் சோபா ஒன்றில் அமர்ந்துகொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தார். அவருடைய பார்வை கேள்விகளைக் கேட்டது. அவன் தன் கையிலிருந்த உறையை அவரிடம் பவ்வியமாக நீட்டினான். அவர் அதைப் பெற்றுக்கொண்டு உட்காருமாறு அவனுக்குச் சைகை செய்தார்.

அவன் உட்காரவில்லை. அவரிடமிருந்து சற்று விலகி நின்று கொண்டான். அவர் நிதானமாக அந்த உறையைக் கிழித்துப் பார்த்தார். பிறகு அவனை நோக்கினார். பார்வையாலேயே அவன் தகுதிகளை அளந்தார். பிறகு வெகு நிதானமாக ஒருசில கேள்விகளைக் கேட்டார். கோபாலன் 'பளிச் பளிச்'சென்று விடைகளை இறுத்தான்.

"நேற்று இரண்டு மூன்று பேர்கள் வந்தார்கள். சனிக்கிழமையன்று அவர்களுக்குப் பதில் தருவதாகச் சொல்லி அனுப்பினேன். உனக்கு இப்பொழுதே பதில் சொல்லிவிடுகிறேன். ஏனென்றால் உன்னிடம் நான் எதிர்பார்க்கிற முக்கிய தகுதி இருக்கிறது. அதாவது நீ உண்மை பேசுகிறாய். இதற்கு முன் இரண்டு இடங்களில் நீ வேலை பார்த்ததையும், நீயாகவே அந்த இடங்களிலிருந்து விலகிக் கொண்டதையும் நான் அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. நீயே அதைச் சொல்கிறாய். இரண்டு வேலைகளையும் உதறி

விட்டதற்கு நீ கூறிய காரணங்களும் உன்னுடைய பண்புக்கு எடுத்துக்காட்டுக்களாக இருக்கின்றன. எனவே உன்னை ஏற்றுக் கொள்கிறேன்.

"டவுனில் நடைபெறும் கம்பெனியை என் புதல்வன் சுதர்சனனிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவன் அங்கேயே குடியிருப்பை அமைத்துக் கொண்டு கம்பெனியைக் கண்காணித்து வருகிறான். என்றாலும் என்னுடைய ஆலோசனைகளும் தொழில் நுணுக்கங்களும் தொடர்ந்து அவனுக்குத் தேவைப்படுகின்றன. அடிக்கடி இங்கே வந்து போக அவனுக்கு நேரம் இருப்பதில்லை. வாரத்தில் இரண்டொரு முறை வந்து போகிறான். தொலைபேசியின் உதவியையும் மீறிச் சில வேலைகளில் நானே அங்கே போய் வர வேண்டியிருக்கிறது.

"இந்த நிலையைத் தவிர்க்க இடையே ஒருவர் தேவை. படிப்பறிவு, உலகறிவு, இரண்டினோடு — இரண்டையும் கடந்து — 'உண்மை' என்ற சிறந்த தகுதி உடைய ஒருவரை எண்ணி எதிர்பார்த்துச் செய்தித்தாளில் விளம்பரம் செய்தேன். நாளை முதல் என் உதவியாளனாக நீ வந்து விடு. அந்தரங்கச் செய்திகள், தபால்கள் இவற்றைக் கையாள்வது, அடிக்கடி டவுனுக்குப் போய் வருவது — இவை உன் அலுவல்கள். இப்போதைக்கு இருநூறு என்று உன் ஊதியத்தை நிர்ணயித்துக் கொள்வோம். பிறகு போகப் போகப் பார்த்துக் கொள்வோம். கம்பெனியின் முகவரி தருகிறேன். நீ நேரே அங்கே செல். நான் போன் செய்கிறேன்" என்றார் பெரியவர்.

இரண்டு மாதங்கள் இரண்டே விநாடிகளைப் போல் ஓடி மறைந்தன. பசுபதிராம் எதிர்பார்த்த அளவுக்கு மிகுதியாகவே இருந்தன, கோபாலனின் உழைப்பு, நேர்மை, சாதுரியம் முதலிய நடவடிக்கைகள். அவர் அவனை விரும்பினார். அவருக்கு அவனிடம் அத்தகைய மதிப்பும் பிடிப்பும் ஏற்பட அவனுடைய போக்குத்தான் காரணம் என்றாலும் அதையும் கடந்து இன்னொரு காரணமும் இருந்தது என்பதுதான் உண்மை.

பசுபதிராமின் செல்வப் புதல்வி அஞ்சனா கோபாலனின் வசீகரமான தோற்றத்திலும், சாதுர்யமான பேச்சிலும், நேர்மையான செயல்களிலும் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டாள்; அவள் அடிக்கடி அவனைப் பற்றி அவரிடம் பேசுவதிலிருந்து அவளுடைய மனநிலையை அவர் நன்றாகப் புரிந்துகொண்டு விட்டார்.

நல்ல நாள் ஒன்றில் பசுபதிராம் கோபாலனை அழைத்து அந்தரங்கமாக உரையாடினார்: "அஞ்சனாவுக்கு மனநிறைவைத் தரும் கணவனைத் தேடினேன். இன்று நல்ல நாள். உன் கருத்தை அறிய விரும்புகிறேன்."

அடக்கமும், லஜ்ஜையும் கலந்த குரலில் கோபாலன் சுருக்கமாகச் சொன்னான்: "உத்தியோகம், பொருள் ஈட்டல், திருமணம், வாழ்க்கை என்பன நம் அகராதியில் இல்லை என்கிற குருட்டு நினைப்போடுதான் இரண்டு மாதங்களுக்கு முன்பு வரையில் நாளைக் கடத்திக் கொண்டிருந்தேன். பெரு மழையை அறியாத பாலையும் சோலைவளம் பெறும் என்பது போல் நல்லவர்கள் கூட்டுறவால் பாலையாக இருந்த என் உள்ளம் சோலையாக மாறிவிட்டது. நன்றாக வாழ ஆசைப்படுகிறேன். உங்கள் அன்பும் ஆசியுமே என்னை வாழவைக்க வேண்டும்."

"கல்யாண விஷயமாக உன்னைச் சார்ந்த பெரியவர்கள் யாரை நான் பார்க்க வேண்டும்?"

"எனக்குப் பெரியவர்கள் — கண்கண்ட தெய்வம் — என் தாய்தான். அவர்களின் ஆசி ஒன்றுதான் தேவை. முன்பு அவர்கள் டவுனுக்கு அப்பால் மாதவபுரத்தில் இருந்தார்கள். இப்போது இங்கே வெகு அண்மையிலேயே குடிவந்து விட்டார்கள்."

"அப்படியா! உன் முகவரியைக் கொடு; இப்பொழுதே போய்ப் பார்த்து வருகிறேன்."

கோபாலன் கொடுத்த முகவரியைக் கையில் வாங்கிக் கொண்டவர் டிரைவரைக் கூவிக் காரை எடுக்கச் சொன்னார்.

காரில் அமர்ந்ததும் போக வேண்டிய இடத்தை டிரைவருக்குச் சொன்னவர் யோசனையில் ஆழ்ந்தார்.

சிவகாமி அம்மாள்! இந்தப் பெயர் எங்கோ கேள்விப்பட்டதுபோல் இருந்தது. மாதவபுரத்தில் முன்பு இருந்ததாகக் கோபாலன் சொன்னதையும் இணைத்துப் பார்த்தபோது கனவு போல் ஒரு நினைவு அவர் மனத்தைச் சூழ்ந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள் அவருடைய மைத்துனர் துணை வர அவர் மாதவபுரம் சென்றார். 'சந்தானம் என்ற வாலிபன் சிறந்த படிப்பும் உயர்ந்த உத்தியோகமும் உடையவன்' என்று நண்பர் ஒருவர் அஞ்சனாவுக்குச் சிபாரிசு செய்தார். குலம், கோத்திரம் முதலியவை பற்றி அவரே உறுதி கூறிவிட்டார். ஜாதகத்தில் பசுபதிராமுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, நேரில் பார்த்துப் பேசக் கிளம்பிச் சென்றார். சென்ற இடம் மாதவபுரம்; அந்த அம்மாள் பெயரும் சிவகாமி அம்மாள்தான்.

"மூத்த பிள்ளை இருக்க இளையவனுக்குக் கல்யாணம் செய்வது நம்மில் வழக்கம் இல்லையே!" என்று அந்த அம்மாள் கூறி அனுப்பி விட்டாள்.

'ஒரு வேளை அதே அம்மாள்தானோ! அவள் குறிப்பிட்ட மூத்த பிள்ளை இந்தக் கோபாலன் தானோ! 'உத்தியோகம், பொருள் ஈட்டல், திருமணம், வாழ்க்கை முதலியன நம் அகராதியில் இல்லை என்றுதான் இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை இருந்தேன்' என்று அவனும் சொன்னானே! ஏன் அப்படி விரக்தியாக இருந்தான்? குறை ஏதாவது உடையவனோ?'

அவர் மனம் குழம்பிற்று. சோர்வுடன் இருக்கையில் சாய்ந்தார்.

பசுபதிராமின் ஊகத்தில் தவறு சிறிதும் இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன் அவர் மாதவபுரம் சென்றது உண்மை. சிவகாமி அம்மாளைப் பார்த்துப் பேசியதும் உண்மை



ஜெமினியின்

மகத்தான சமூகச்சித்திரம்

வாழ்க்கைப் படகு

தமிழ் நாடெங்கும்

வெளிவருகிறது

காலகேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயிலை உபயோகித்து உங்கள் கேசத்திற்குப் போஷாக்கையும்



நறுமணத்தையும் அழகையும் அளியுங்கள்...

புதிய காலகேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயிலை தினந்தோறும் தேய்த்துக் கொள்வதனால், உங்கள் மயிர்க்கால்கள் புத்துயிர் பெற்று அபரிமிதமான, நீண்ட கேசவளர்ச்சிக்கு உதவுகிறது; நெளி நெளியான கேசத்தின் இயற்கை அழகை வெளிப்படுத்துகிறது...உங்களுக்குப் பிடித்தமான கேச அலங்கரிப்பை எடுத்துக் காட்டுகிறது. அழகிய கேசத்தைப் பெற, காலகேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயிலை உபயோகியுங்கள்.



உங்கள் கேசத்தின் உண்மை அழகை
வெளிப்படுத்த உதவுவதும், குடும்பத்தினர்
விரும்பும் நறுமணத்துடனும் கூடிய
காலகேட் காஸ்டர் ஹேர் ஆயிலின்
ஒரு உன்னதமான துணைத்தயாரிப்பு.

COHQ.G.3. TAM.

தான்; ஆனால் அதன்பின் விளைவுகளோ அவர் அறியார்.

அப்போது சந்தானம் வீட்டில் இல்லை. ஏதோ அலுவலாக எங்கோ சென்றிருந்தான். வீட்டை நோக்கித் திரும்பியபோது தன் வீட்டு வாசலில் கார் நிற்பதைக் கண்டான். உள்ளம் பரபரக்க வேகமாக நடந்து வீட்டை அடைந்தான். அப்போதுதான் அவன் தாயார், 'மூத்தவன் இருக்க இளையவனுக்குக் கல்யாணம் செய்வது நம்மில் வழக்கம் இல்லையே !' என்று வந்தவரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

இடைகழியில் நின்று இதைச் செவியுற்ற சந்தானம் பல்லைக் கடித்தான். பகபதிராமும் அவர் மைத்துனரும் நிராசையுடன் விடைபெற்றார்கள்.

''ஒன்று செய்யலாம். என் பெண் கல்யாணத்துக்கு இப்பொழுது அப்படி ஒன்றும் அவசரம் இல்லை. 'சந்தானம் ஒரு நல்ல வரன்' என்றார் என் நண்பர். மூத்த பையன் மணமாகாமல் இருக்கிறான் என்று அவர் ஏனோ சொல்லவில்லை. பிராப்தம் இருந்தால் பின்னும் பார்க்கலாம்.''

இவ்வாறு சொல்லிக் கொண்டே பகபதிராம் இருக்கையினின்றும் எழுந்தார். இடைகழியில் நிற்பதோ, உள்ளே போவதோ சரியாகப்படவில்லை சந்தானத்துக்கு. சட்டென்று வாசிற்புறம் வந்து தெருவில் இறங்கி வேகமாக நடந்தான். நாலு வீடு களைக் கடந்து நின்று திரும்பிப் பார்த்தான். பரங்கிப் பழம்போல் சிவந்த மேனியும் முதிர்ந்த வயதுமாய் ஒருவரும் காமார் நாற்பது வயதுடைய ஒருவருமாய் வந்து காரில் ஏறுவதைக் கண்டான். அப்போது தான், வந்து திரும்புபவர் செல்வந்தர் பகபதிராம் என்பதை அறிந்தான்; பேரிழப்பை எண்ணி மனம் நெகிழ்ந்தான்.

எதிர் வீட்டு வாசலில் நின்றிருந்த டிரைவர் விரைந்து வந்து காரைச் செலுத்தலானன். சந்தானம் நெடுமூச்செறிந்து விட்டு முகத்தில் எள்ளும்கொள்ளும் வெடிக்கத் தன் வீட்டையடைந்தான். ''அம்மா!'' என்ற அவன் குரல் வீட்டையே அதிர வைத்தது. சிவகாமியம்மாள் எதிரே வந்தாள்.

''வந்து போனவர்கள் யார்?....''

''என்னவோ பேர் சொன்னார். உனக்கு அவர் பெண்ணைக் கொடுக்கிறேன் என்று வந்தார்.''

''இரண்டு பேர் வந்திருந்தார்களே?''

''ஆமாம்; ஒருவர் பெண்ணின் தகப்பனார்; மற்றவர் பெண்ணின் மாமாவாம்.''

''சிவப்பாக இருந்தாரே ஒருவர், அவர் தானே பெண்ணின் தகப்பனார் ?''

''ஆமாம்; ஆமாம். உனக்கு எப்படித் தெரியும் ?''

'' அது இருக்கட்டும் : நீ என்ன சொன்னாய்?''

''என்னத்தைச் சொல்வது? கோபாலன்..''

வாய் மணக்கத் தாம்பூலமும் செவி இனிக்க இன்னிசையுமாய்ப் பாடிவேறிய கோபாலன் இடைகழியில் நின்று செருப்பைக் கழற்றினான். சந்தானம் போட்ட கூச்சல் அவனை அப்படியே நிற்க வைத்தது.

''எதற்கு அம்மா சுற்றி வளைத்து நீட்டி முழக்குகிறாய்? 'கோபாலன் என்று எனக்கு ஓர் உதவாக்கரைப் பிள்ளை இருக்கிறான் ; அவன் மூத்தவன்; தண்டச்சோற்றுத் தடிராமன்; அவனுக்குக் கலியாணம் செய்து விட்டுத்தான் இளையவனுக்குச் செய்ய வேண்டும்; பிள்ளையாருக்குக் கலியாணம் நடக்கிறபோதுதான் என் மூத்த பிள்ளைக்குக் கலியாணம் நடக்கும்; ஆகவே, என் இளைய பிள்ளைக்குத் திருமணம், வாழ்க்கை எதுவுமே இந்தப் பிறவியில் இல்லை; நீங்கள் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போய்ச் சேருங்கள் என்றேன்' என்று சொல்லேன்....!''

''எதற்கடா சந்தானம் இப்படிக் கூச்சல் போட்டு ஊரைக் கூட்டுகிறாய்?''

''உனக்கு என்ன அம்மா? வந்து போனவர் எத்தகைய மனிதர், எவ்வளவு செல்வந்தர், அவருடைய பெண் எப்பேர்ப்பட்ட அழகி என்பன உனக்குத் தெரியுமா? நீ வெகு சுலபமாக என்னைத் தேடி வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளி விட்டாய். உனக்கும் உன் அருமைப் பிள்ளைக்கும் சம்பாதித்துப் போடுவதற்காக என்னை நீ தனிக் கட்டையாக நிறுத்திப் பார்க்க உறுதி கொண்டிருக்கிறாய் ! அந்தக் கூறு கெட்டவனால் காலணாவுக்குப் பயன் இல்லை; என் கௌரவத்தையும் குலைக்கிறான். அவை போதாவென்று என்வாழ்க்கைப் பாதையிலும்நந்திபோல்...''

சிவகாமிக்கு ரோசமும் கோபமும் பொத்துக் கொண்டு வந்தன. ''ஏன்? என்னிடம் இவ்வளவு பேசுகிற நீ அந்த மனிதர்களிடம் நேரில் பேசிக் காரியத்தை முடித்துக் கொள்வதுதானே ?''

''வந்தவர்கள் கார் ஏறிச் செல்கிற போதுதான் யார் என்று தெரிந்தது. மேலும்,



நீ ஒரு முடிவைச் சொல்லி, அவர்களும் ஏற்றுக் கொண்டபின் நான் பேசுவதா ?''

''தெரியாத்தனமாக இது வரை நடந்து கொண்டுவிட்டேன். இனி யார் வந்தாலும் நீயே......''

''ஹாம்! இனி யார் வந்தாலென்ன ? இந்த இடமும் இந்தப் பெண்ணும் போல் அமையுமா?... ம்... உன்னைச் சொல்லித் தான் என்ன பயன்? நான் வந்த வழி!''

நடையில் நின்று கொண்டிருந்த கோபாலனின் உடம்பு குலுங்கிற்று. கழற்றிவிட்ட செருப்புக்களை அணிந்து கொண்டான். சந்தடியின்றி அங்கிருந்து வெளியேறினான். அதன் பின்னர் அந்த வீட்டில் அவன் அடி வைக்கவில்லை. இந்த விவரமெல்லாம் பகபதிராமுக்குத் தெரிய வாய்ப்பு ஏது ?

கார் வந்து வாசலில் நிற்பதைத் தாழ்வாரத்திலிருந்து சிவகாமி அம்மாள் பார்த்தாள். வண்டியிலிருந்து இறங்கி உள்ளே சென்ற பகபதிராம் சிவகாமி அம்மாளைக் கூர்ந்து நோக்கினார். ''சிவகாமி அம்மாள் நீங்கள்தான் இல்லையா?'' என்று கேட்டார். பழைய நிகழ்ச்சியை நொடிக்குள் நினைவு கூர்ந்த சிவகாமி முகமெல்லாம் சோகத்தின் நிழல் படிய, ''ஆம், வாருங்கள்'' என்றாள்.

''இரண்டு மாதங்களுக்கு முன் நான் மாதவபுரத்தில் வந்து உங்களைப் பார்த்துப் பேசினேனே, நினைவிருக்கிறதா ?''

''ஆமாம்.''

அறையினுள் மும்முரமாக முக க்ஷவரத்தில் ஈடுபட்டிருந்த சந்தானம் கூடத்தில் நிகழும் உரையாடலில் கவனத்தைச் செலுத்தினான்.

''முன்பு உங்கள் இளைய புதல்வன் சந்தானத்துக்குப் பெண்ணைக் கொடுக்கிறேன் என்று வந்தேன். 'மூத்தவன் இருக்க இளையவனுக்கு மணம் முடிப்பது நம்மில் வழக்கம் இல்லை' என்று நீங்கள் கூறினீர்கள்.''

''ஆமாம். அப்பொழுது அப்படிச் சொன்னேன்; இப்போது மாற்றிச் சொல்கிறேன். நீங்கள் முன்பு சொல்லி விட்டுச் சென்றபடி மூத்தவனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இப்போது அவன் எங்கேயிருக்கிறான் என்பதே எனக்குத் தெரியாது. ஆகவே, அவனுக்காக எதையும் தள்ளிப் போட வேண்டாம். உங்கள் விருப்பப்படி நீங்கள் முன்பு கூறி வந்த செயலை இப்பொழுது தடையின்றி நடத்தலாம்'' என்றபோது அவள் கண்களில் நீர் வழியவிட்டது.

பகபதிராம் இலேசாகச் சிரித்தார். பிறகு சொன்னார்: ''இல்லை, இல்லை; அந்த நோக்கத்தில் இப்பொழுது நான் வரவில்லை.''

இவ்வாறு அவர் கூறியதைக் கேட்டதும் அறையில் இருந்த சந்தானத்தின் நெஞ்சம் துணுக்குற்றது. காரில் வந்து தாயுடன் பேசுபவர் பகபதிராம் என்று அறிந்தபோது உருப்புரியாத பரபரப்பும், தாயின் விடையினால் ஒரு கிளுகிளுப்பும் ஏற்பட்டிருந்த அவனுடைய உள்ளத்தில் அவருடைய சொற்கள் குழப்பத்தை உண்டு பண்ணி விட்டன. பகபதிராமின் செல்வ நிலையையும், அவரோடு சில முறை கடற்கரையிலும் கோயிலிலும் பார்த்திருந்த அவர் புதல்வி அஞ்சனாவின் பேரெழிலையும் நன்கு அறிந்திருந்ததால்தான் முன்பு அவர் வந்துசென்றதும் அவன் தாயிடம் அப்படிச் சீறினான்; ஆனால் இப்போது...?

''உங்கள் மூத்த புதல்வன் கோபாலனுக்கு என் இளைய புதல்வி அஞ்சனாவை..''

சிவகாமியின் உள்ளமும் சந்தானத்தின் உள்ளமும் ஒரே நேரத்தில் 'ஆ!' என்றன.

''கோபாலனுக்கா....! அவன்......''

'' எங்கள் கம்பெனியில் கௌரவமான உத்தியோகத்தில் இருக்கிறான்.''

''அப்படியா!'' என்ற சிவகாமியின் குரலிலும் முகத்திலும் மகிழ்ச்சி பெருகி நின்றது. அதே நேரத்தில் சந்தானத்தின் முகம் தொங்கியது.

''இன்று நல்ல நாள். உங்களைப் பார்த்துப் பேசி உங்கள் சம்மதத்தைப் பெற வந்தேன். மாலையில் வண்டியை அனுப்பி வைக்கிறேன். குழந்தை அஞ்சனாவைப் பார்க்க நீங்கள் வரவேண்டும்.'' அவர் புறப்பட்டார்.

அடுத்த நிமிடத்தில் கார் புறப்பட்டுச் செல்லும் ஒலி சந்தானத்தின் செவியிலே கேட்டது.

''சந்தானம்!'' என்று மெல்ல அழைத்தபடி சிவகாமி அவன் இருந்த அறைக்கு வந்தாள். அவன் சோர்ந்து சாய்ந்து கிடந்த நிலை கண்டு திடுக்கிட்டாள்.

வெறி கொண்டவன் போல் சந்தானம் துள்ளி எழுந்தான். ''என் நலத்தில் மண் போடவென்றே அம்மாவும் பிள்ளையும் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தீர்கள்; மண் போட்டாயிற்று. இனி நீ நிம்மதியோடு உறங்குவாய். போ! போய்ப் பாலைக் காய்ச்சி வயிறு நிறையக் குடி!''

சிவகாமியும் பொறுமையை இழந்தாள். அவள் உள்ளத்தில் இப்பொழுது புதிய தெம்பு கூடியிருந்தது. படபடவென்று பேசினாள்: ''யாரும் தன்னுடைய இரு கண்களில் ஒன்றில் வெண்ணெயும் மற்றொன்றில் சுண்ணாம்பும் ஏற்றிக் கொள்ள மாட்டார்கள். பெற்ற தாய்க்கு மக்கள் அனைவரும் ஒரு போலத்தான். படித்து, பட்டம் பெற்று, உத்தியோகத்தில் ஈடுபட்டு உலக அறிவில் ஓரளவு தேர்ந்தும் உன் நெஞ்சில் இந்த விவேகம் இடம் பெறவில்லையே ! அன்று அவன் சீராக வாழவில்லையே என்று கரித்துக் கொட்டினாய்; பேசக் கூடாததெல்லாம் பேசினாய்; உன் கௌரவம் பாழாகிறது என்று பொருமினாய். இன்று அவன் சீரான வாழ்க்கையில் அமர்ந்து விட்டதை எண்ணி, அவனுக்குக் கிடைத்த நல்வாய்ப்பைக் கண்டு பொருமுகிறாய். உன்னுடைய சுயநலம் மேலோங்கி அன்றும் அவனைக் கரித்தாய்; இன்றும் அவனைக் கரிக்கிறாய்! உனக்கு ஆண்டவன்தான் நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்.'' — இப்படிக் கூறி முடித்தபோது அவள் கண்கள் உதிர்த்த நீர்த் துளிகளை அவன் கண்டான். அந்தக் கண்ணீர் அவன் உள்ளத்தில் புகுந்து அங்கே புரையோடியிருந்த கரிப்பு உணர்ச்சியைக் கரைத்ததா? அல்லது மேலும் அவ்வுணர்ச்சியை வளர்த்ததா? அது அவனுக்குத்தான் தெரியும்.


நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

வட்டமேஜை

கேள்வி: ஹிந்தி தேசிய மொழியாவதால் கேடு என்ன ?

பதில்: ஹிந்தி ஆட்சி மொழியாகும் அளவுக்கு வளர்ச்சி பெறவில்லை என்பது ஒருபுறமிருக்கட்டும். சரிசமமான ஒரு சமுதாயத்தில் ஓர் இனத்தாரின் பாஷையைக் கற்றால்தான் மற்றோர் இனத்தார் முன்னேற முடியும் என்ற நிலை ஏற்பட்டால், அந்த பாஷையைத் தாய்மொழியாகக் கொண்டவர் இறுமாப்புக் கொள்வதும், தாங்களே ஆளப் பிறந்தவர் என எண்ணுவதும் இயல்பு. (இதைச் சென்ற காலங்களில் ஆங்கிலேயரி முதலானோரிடம் கண்டோம்.) அங்ஙனமே அந்த மற்ற பல இனத்தவர் தாழ்வுணர்ச்சியால் குன்றிப் போவதும் இயல்பு. இது மக்களிடையே பெரிய பிளவுக்குக் காரணமாக முடியும்.

கேள்வி: ஆங்கிலம் வேற்று மொழிதானே? அதை மட்டும் ஏற்றால் மேற்சொன்ன தவறு ஏன் நேராது?

பதில்: நம் நாட்டைத் தற்சமயம் ஆங்கிலேயர் ஆளவில்லை. ஆக அவர்கள் தங்களை நம் நாட்டை ஆளப் பிறந்தவராக எண்ணப் போவதே இல்லை. பாஷைப் பிரயுக்தமான பெருமை ஆங்கிலேயர்களுக்கு இன்றும் உண்டு. ஆங்கிலம் ஏறக்குறைய ஓர் உலக இணைப்பு மொழியாக உருவாகி வருகிறது. நாமும் அதை அடியோடு புறக்கணிக்கத் தயாராக இல்லை. மொத்தத்தில் அம்மொழி வடநாடு, தென்நாடு எல்லாவற்றுக்கும் பொது மொழியாக இருக்கும் — ஆனால் இறுமாப்புக்கோ, அவமானத்துக்கோ வழியே இல்லை.

கேள்வி: வெளிநாட்டாரின் மொழியை ஆட்சி மொழியாக ஏற்றால் நமக்கு அது அவமானமில்லையா ?

பதில்: நாம் புதிதாக அதை ஏற்க வேண்டியதில்லை. இது வரை அதை ஏற்றதால் நம்மை யாரும் தாழ்வாக நினைக்கவுமில்லை. வீண் ஜம்பத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு பலவிதத் தொல்லைகளுக்குக் காரணமாகும்படி ஆங்கிலத்தை மாற்றத் தேவையே இல்லை.

கேள்வி: நாம் ஹிந்தியை எதிர்ப்பதுபோல் வடநாட்டினர் ஆங்கிலத்தை எதிர்க்கும் போது நாம் இவ்விதம் கூறுவது அவர்கள் மேல் ஆங்கிலத்தைத் திணிப்பதாகாதா?

பதில்: நாம் கேட்பது உத்தரப் பிரதேச அரசாங்கத்தில் அல்ல. மத்திய அரசாங்கத்தில் தான். மத்திய அரசாங்கம் வடநாட்டாரின் அரசாங்கமோ ?

கேள்வி: இதற்குப் பரிகாரமாக ஹிந்தி ஆங்கிலம் இரண்டையுமே சமமாக ஆட்சி மொழியாக ஆக்கினால் போதாதா?

பதில்: இதுவும் போதாது. ஆங்கிலத்தை ஏற்ற பிறகு மறுபடியும் ஹிந்தியையும் எதற்காக ஏற்க வேண்டும் ? இரட்டைச் செலவுக்காகவா? எந்தப் பிராந்திய மொழிக்கும் கொடுக்காத அந்தஸ்தை அதற்கு மட்டும் ஏன் கொடுக்க வேண்டும் ?

கேள்வி: தென்னாட்டினருக்கு எந்தவிதமான இடைஞ்சலும் நேராதபடி பார்த்துக் கொள்வதாக மேலிடத்தார் உறுதி கூறியுள்ளனரே ?

பதில்: ஸ்ரீ நேரு போன்ற மாபெரும் தலைவர்கள் கொடுத்த வாக்கையே நிறைவேற்ற முடியாமல் போய்விட்டதே!

கேள்வி: முடிவாக என்னதான் செய்ய வேண்டும்?

பதில்: ஆங்கிலம் ஒன்றே ஆட்சி மொழியாகும்படி அரசியல் சட்டத்தையே மாற்றுவது ஒன்றுதான் நிரந்தரப் பரிகாரமாகும். இல்லாவிடில் முடிவில் இந்தியா துண்டுபடுவது திண்ணம்.

மைசூர்
13–2–65 கே.எஸ்.வரதாச்சார்யா

ஹிந்தி எதிர்ப்பு உணர்ச்சிகளுக்குக் கட்சி வர்ணம் பூசப்படுகிறது. பண்பாட்டுக்கும், பொறுமைக்கும் பெயர்பெற்ற நமது தமிழகத்தில் சட்டவரம்புக்கு மீறிய செயல்கள் நடப்பது வேதனை தரக்கூடியது.

ஹிந்தியை ஆட்சிமொழியாக 26–1–65 முதல் கொண்டு வந்து விட்டார்கள். முன்னாள் பிரதம மந்திரி ஸ்ரீ நேருவின் உறுதிமொழி சரிவரக் காப்பாற்றப்படவில்லை எனத் தென்னகத்து மக்கள் ஐயப்படுகின்றனர். பொறுப்பு மிக்க அமைச்சர்கள் ஹிந்தி ஆட்சி மொழியாவது பற்றி முரண்பாடான கருத்துக்களைக் கூறி வருகின்றனர். அறிஞர்களின் கருத்துரைகளைக்கூட மதியாமல் பெரும்பான்மையான வாக்குகளால் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றி விட்டனர். சிவப்படையெடுப்பு, விலைவாசி உயர்வு போன்றவைகளினால் அவதியுறும் மக்களுக்கு மொழி பற்றிய குழப்பத்தையும் ஏற்படுத்தி விட்டனர்.

ஹிந்தித் திணிப்பினால் வரும் தீமைகளை ஆளும் கட்சியினர் அறிவார்கள். ஆனால் கௌரவம், கட்சிக்கட்டுப்பாடு முதலியவை அவர்களைப் பேச விடவில்லை.

தென்னக முதன்மந்திரிகள் ஒன்றுசேர்ந்து செயல்பட வேண்டும். இங்குள்ள நிலைமையைத் தில்லியில் எடுத்துச் சொல்லி விளக்க வேண்டும். தில்லி சொன்னபடியே ''ஆமாம் சாமிகளாக'க் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது. பிரத்யட்ச நிலையை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

கருங்கல்பாளையம் வி. விஜயேந்திரன்
15–2–65 டி. ஆர். நரசிம்மன்

சென்னை ரிஸர்வ் பாங்கி ஊழியர்கள் சங்கத்தின் செயற்குழுவினர் பிப்ரவரி 10ந் தேதி யன்று கூடி நிறைவேற்றிய தீர்மானங்களுள் சில பின்வருமாறு :

தமிழக மாணவர்கள் அற்புதமான முறையில் ஹிந்தித் திணிப்பை எதிர்த்துக் கிளர்ச்சி நடத்தியதைப் பாராட்டுகிறோம்.

உன்னதமான சரித்திரமும், உயர்தரமான இலக்கியங்களும், பண்பாடும், இதர கலைகளும் மலிந்துள்ள பிற இந்திய மொழிகளை ஒதுக்கி விட்டு ஹிந்திக்கு மட்டுமே உயரிய ஸ்தானம் கொடுக்கப்படுவதைக் கண்டிக்கிறோம். வேறு எத்தனையோ அதி முக்கியமான விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியிருக்க ஹிந்தியைத் திணிக்க மத்திய அரசாங்

கம் ஏற்பாடு செய்து வருகிறது. இதனால் ஒரு நெருக்கடி நிலைமை தமிழகத்தில் உருவாகியுள்ளது. ஹிந்தி பேசாத ராஜ்ய மக்களின் வாழ்வைப் பாதிக்கும் விஷயமாக இதனைக் கருதாமல் தமிழக முதல் அமைச்சர் இதனை ஒரு சட்ட ஒழுக்கப் பிரச்னையாகக் கருதிப் போலீஸாரின் துணையை நாடியிருக்கிறார்.

மத்தியதர வகுப்பினர், மாணவர்கள் ஆகியோரின் எதிர்காலம் பாதிக்கப்படுமென்றும் உத்தியோக வாய்ப்புக்கள், பதவி உயர்வுகள், சுயமதிப்பு, கௌரவம் இவை எதிர்காலத்தில் எவ்வாறு இருக்குமோ என்றும் அச்சம் மக்களைப் பற்றியுள்ளது.

இதற்கெல்லாம் பரிகாரமாக ஜனவரி 25ந் தேதி எப்படி நிலவரம் இருந்ததோ, அதே போல் இனியும் இருந்து வரும் என்கிற முறையில் அரசியல் நிர்ணய சட்டத்தைத் தக்கபடி மாற்றியமைத்துத்தானாக வேண்டும்.

சென்னை—1
15—2—65 ரிஸர்வ் பாங்க் ஊழியர்கள்சங்கம்

குடந்தை வேத விழா

ஸ்ரீமான் அக்னிஹோத்திரம் தாதாசாரியர் அவர்களின் சதாபிஷேகத்தை யொட்டிக் குடந்தையில் பிப்ரவரி மாதம் 17ந் தேதி முதல் 23ம் தேதி வரை கோலாகலமான வேத விழா நடைபெற்றது. வட நாட்டு வேத வித்பன்னர்களும் தென்னாட்டு வேத வித்பன்னர்களும் வேத பாராயணம் செய்ததைக் கேட்க ஆயிரக் கணக்கில் மக்கள் கூடியிருந்தது வேதத்திடம் மக்களுக்குப் புத்துணர்ச்சி ஏற்பட்டிருப்பதை நிதரிசனமாகக் காண்பித்தது. தென் இந்தியாவின் சரித்திரத்திலேயே முதன் முதலாகப் பல வேதசாகைகள் பாராயணம் செய்யப்பட்டன.

வேதமூர்த்தி, மஹர்ஷி, தேவராத சர்மா பாராயணத்திலும் மகாநாட்டிலும் கலந்து கொண்டு அவ்வப்போது வேத மந்திரங்களுக்கு விளக்கம் கூறி எல்லோரையும் ஞான உணர்ச்சியில் மூழ்கச் செய்தார்.

ஒரே அதர்வ வேதியான வாஸுதேவ ரமணிக்கிலால் அவர்களின சாந்தமான தோற்றம் சபைக்குத் தனியான சோபையைக் கொடுத்தது. அக்னிஹோத்ரி நாராயணாச்சார் ஸ்வாமிகள் தம்முடைய தள்ளாமையையும் கவனியாது நாவல்பாக்கத்திலிருந்து வந்து பாராயணத்தை நடத்தி வைத்தது விழாவின் புனிதத் தன்மையை உயர்த்தியது. ராஷ்டிரபதியிடம் இந்த வருட விருதைப் பெற்ற தாதாசாரியார் ஸ்வாமிகளின் கம்பீர ப்ரவசனங்கள் சித்தத்தை ஆகர்ஷித்தன.


மகாநாடு ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி ஆலயத்தில் நடந்தது. டாக்டர் வே. ராகவன் அவர்கள் இரு தினங்கள் உடன் இருந்து பல அபூர்வக் கருத்துக்களை வெளியிட்டுச் சபையோர்களை ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுத்தினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறை ஆராய்ச்சித் தலைவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சங்க நூல்களில் வேதங்களைப் பற்றியுள்ள குறிப்புக்களைப் பற்றியும் அவை வைதிக வாழ்வைப் பெருமையுடன் பேசுகின்றன என்றும் குறிப்பிட்டார். தத்துவத் துறை ஆசிரியர் திரு இராமலிங்கம், திரு பழனியப்பன் ஆகியோர் தமிழ்ப் பண்பாட்டுடன் எப்படி வேதம் ஒன்றாகக் கலந்திருக்கிறது என்பதை விளக்கினர்.

மறை மாநாட்டுக்குத் தொடர்பாக நடைபெற்ற வேதக் கண்காட்சி மக்களின் கவனத்தை மிகவும் கவர்ந்தது. ஆயிரக் கணக்கில் மக்கள் இதனைக் கண்டு களித்தார்கள். பிரளய காலத்தில் வேதம் எப்படி இருந்தது. மகரிஷிகள் வேதத்தை எப்படிக் கண்டார்கள், மகா விஷ்ணு வேதத்தை எப்படிக் காப்பாற்றினார். பரமேசுவரன் சதுர்வேத மூர்த்திக் கோலத்தில் எப்படி விளங்குவார் என்பன போன்ற கருத்துக்கள் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருந்தன. திருஞான சம்பந்தர் தமிழ் நாட்டில் வேத தர்மங்களைப் பாதுகாத்ததையும் விளக்கப்பட்டிருந்தது. பல வேதக் கதைகளும் படங்கள் மூலம் நன்கு விளக்கப்பட்டிருந்தன.

சதாபிஷேகத்துக்குப் பாத்திரமாயிருந்த தாதாசாரியரின் குமாரரான அக்னி ஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் பேசுகையில் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஆசார்யாளின் அநுக்ரஹத்தை முன்னிட்டே இந்த வைபவம் நடந்தது என்று கூறினார். வேத ஒலி எம்பிரானையே எழுந்தருளச் செய்தாற் போல ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி எல்லா வேதங்களும் சூழ வீதி வலம் வந்தது விழாவுக்குச் சிகரம் வைத்தது போல் விளங்கியது.

ஸ்ரீமான் அக்னிஹோத்திரம் தாதாசாரியர் அவர்களின் சதாபிஷேக வேத உத்சவத்தில் டாக்டர் வே. ராகவன் பேசுகிறார்.



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்

ஜீவாம்ருதம்

ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்

ஆயுர்வேதாஸ்ரமம்
லிமிடெட்.
மதராஸ்-17

மூலத்தைச் சுருக்குவதற்குப் புதிய வழி

அரிச்சலைப் போக்குகிறது • வலியிலிருந்து
துரித நிவாரணம் அளிக்கிறது.

முதல் தடவையாக, விஞ்ஞானம் மூலத்தைச் சுருக்கவும், அரிச்சல், இரத்தப்போக்கு மற்றும் வலியிலிருந்தும், புதியதொரு வலியில்லாத முறையில் நிவாரணம் அளிக்கக் கூடிய மருந்தொன்றைக் கண்டுபிடித்திருக்கிறது.

டாக்டர்களின் கண்காணிப்பில் நடத்தப்பட்ட சோதனைகளும் இதை நிரூபித்தன. வலியும் அரிச்சலும் உடனேயே குணப்படுத்தப்பட்டன. மேலும், இதமாக வலியைப் போக்குவதுடன் உண்மையாகவே சுருக்கமும் ஏற்பட்டது.

மேலும், வியக்கத்தக்கதென்னவென்றால் இந்த நல்ல முன்னேற்றம் 10-20 வருடங்களாகப் பாதிக்கப்பட்டவர்களிடமும்கூடக் காணப்பட்டது.

இதன் இரகசியம் ஒரு புதிய குணமளிக்கும் மருந்தாகும்-பயோ-டைன்*-உலகப்பிரசித்தமான ஒரு ஆராய்ச்சிக்கூடத்தின் கண்டுபிடிப்பு. இந்த புதிய குணமளிக்கும் மருந்து ப்ரிப்பரேஷன் H* என்ற பெயரில் களிம்பு வடிவத்தில் கிடைக்கிறது. உண்மையிலேயே மூலத்தைச் சுருக்குவதுடன், ப்ரிப்பரேஷன் H வழவழப்பாக்குவதன் மூலம் மலம் கழிக்கும்போதுள்ள வலியைக் குறைக்கிறது.

நீங்கள் மூலத்தால் அவதிப்பட்டால் ப்ரிப்பரேஷன் H புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு (ஆங்கிலம்-ஹிந்தி) இன்றே கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் 38, ஜாப்ரே மனேர்ஸ் & கோ லிட்., த. பெ. நி. 976, பம்பாய்-1

ப்ரிப்பரேஷன் H *ட்ரேட் மார்க

P-H-5 TAM

கோபால் பல்பொடி




பல் வலி பல் அரணை, வாய் நாற்றம்
பல்லில் இரத்தம் வடிதல், முதலிய
பல் வியாதிகளை குணப்படுத்தி
பல்களுக்கு வெண்மையும்
பலத்தையும் தருகிறது.



தயாரிப்பவர்கள்:- எஸ்.பி.எஸ்.ஜெயம் அன் கோ,
25, கீழ நாப்பாளையத் தெரு....... மதுரை.

MINERVA


ராஜயோகம் - 27
கதை: தம்பு
சித்திரம்: செல்வம்
அந்த கேடி பேர்வழி, அந்தப் பயலை லாக்கப்புக்குக் கொண்டு போகும் போது ஓடிப்போய்விட்டானாம். வழியில் சென்ற வான் வண்டியில் ஏறிக்கொண்டானாம். அதன் நம்பர் தெரியவில்லையாம். போலீஸார் அதைத் தேடிக்கொண்டிருக்கிறார்களாம். நாம் எல்லோரும் சிக்கல் சிக்கலாய் மாட்டிக் கொள்ளப் போகிறோம்...
நீ சுத்தப் பைத்தியக்காரன்! அவன் ஓடிப்போனது ஒரு விதத்தில் நல்லதாய்ப் போயிற்று. அவன் தான் குற்றவாளி நகையை மோசடி செய்தவன் என்பது ஊர்ஜிதமாகும்.
இருந்தாலும் நாம் முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவனைக் கண்டு பிடித்து ஒழித்துவிட வேண்டும். அவன் போலீஸாரிடம் மறுபடியும் அகப்படும்படி விட்டுவிடக்கூடாது. துரையை வரச் சொல்கிறேன்...
யார்? நீங்களா? எப்போது இங்கே வந்தீர்கள்!
என் கண்ணே, ரேவதி!
இதோ வந்துவிட்டேன், என் ராஜா!


நீ தேவகி இல்லே, இதோ இருக்கிறாள் என் தேவகி!
அவள் போகம் அம்மா? பைத்தியம்! போகம், நீ எப்படி இங்கே வந்தாய்?
நான் ராஜாவின் அந்தரங்கக் காரியதரிசி!
இப்போது அந்தரங்கக் காரியதரிசியாக்கும்? தேவகியைப் பிடித்து இழுத்து வா.
தேவகி நீ போ! நான் உன்னை வந்து காப்பாற்றுகிறேன்.
டாக்டர், அவளைச் சரியாகக் கவனியுங்கள்.
போகம் என்று சொல்லிக் கொள்கிற பெண்ணே! உன்னைப் பற்றிய உண்மையைக் கூறும்படி உத்தரவிடுகிறேன்.
உண்மையில் நான் போகம் தான். ராஜாவுடன் ஒருநாள் தெருவில் மோதிக்கொண்டேன். காதல் ஏற்பட்டது. அதனால் பைத்தியம்போல் நடிக்க ஆரம்பித்தேன். பைத்தியமே பிடித்துவிட்டது. எனக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. அதை வைத்திய சாலைக்கு எழுதி வைக்கப்போகிறேன். நான் இப்போது போகம் தான்.
அப்படிச் சொல்!


யாரோ புதுசாகப் பேசுகிறார்களே யார்? புதுக் குரலாயிருக்கிறதே. கண்களைத் திறக்க முடியவில்லையே!
நீங்கள் போகலாம். நான் பேசிவிட்டு வருகிறேன். கட்டை அவிழ்த்து விடுகிறேன்.
நான்தான் வந்திருக்கிறேன். யோகம் நீ மயக்கத்தில் என்னைப் பற்றிச் சொன்னதைக் கேட்டு ஆனந்தமடைந்தேன். நீ வந்தது முதல் சொன்ன உன்னை...
துரை! என்னை இந்த அயோக்கியனிடமிருந்து காப்பாற்றுங்கள்!
பயப்படாதே யோகம்! வக்கீல் உன்னைக் காப்பாற்றுவார். உனக்கும் கல்யாணம் ஆகவில்லை. அவருக்கும் மனைவி இல்லை....
உன்னைப் போலவே அவளும் பைத்தியம் மாதிரி நடித்திருக்கிறாள். அவள் போலீஸ் உளவாளி ஜெயா! எங்கள் உளவாளியாக்கும்.
அயோக்கியா! உன் ஒருவனிடம் தான் நான் ஏமாந்தேன்.

நர்மதாவின் புன்னகை

நான் இளைத்துக் குழம்பி நின்றிருந்தபோது அவள், ''உட்காருங்கள், ஸார்! என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்று கேட்டாள். மேஜை மேலிருந்த பெயர்ப் பலகையைக் கவனித்தேன். வார்னிஷ் பூசிய புதிய பலகையில் வெள்ளைப் பெயிண்டால் புதிதாக எழுதியிருந்த எழுத்துக்கள் பளிச்சிட்டன: 'நர்மதா, பி.ஏ., தலைமைக் குமாஸ்தா'— யோசித்துக் கொண்டே அவள் மேஜை முன்னால் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். சில தினங்களுக்கு முன் அங்கேயிருந்த 'சேஷாசலம்' என்ற பெயர்ப் பலகையையும் அந்தப் பெயருக்குரிய மனிதரையும் காணோம். அவருக்குப் பதில் இந்தப் பெண்மணியோ ஜாம்!

நான் காரியாலயத்துக்கு வந்த காரணத்தைச் சொன்னேன். ''ஓ! ராமபத்ரனா நீங்கள்? வந்தவுடனேயே கேள்விப்பட்டேன், 'ட்ரபிள் ஸம்' இல்லாத நேர்மையான கண்டிராக்டர் என்று. நான் இந்த நாற்காலியில் அமர்ந்த பிறகு உங்களைச் சந்திக்கும் முதல் தடவையில் நல்ல செய்தி சொல்ல வாய்த்திருப்பது பற்றி சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய பில் பாஸ் ஆகி விட்டது. பேமெண்ட் ரெடி!'' என்றாள் நர்மதா, சரளமான ஆங்கிலத்தில், கான்வெண்டில் படித்தோ, படிப்புச் சொல்லிக் கொடுத்தோ பெற்ற அநுபவத்தில் பேசுவது போல், பொருத்தமான உச்சரிப்புடன் பேசினாள்.



அந்த நிமிஷத்துக்கு முன் வரை பில் விஷயம் எனக்குப் பெரிதாகத்தான் இருந்தது. நர்மதாவுடன் நொடி நேரத்தில் ஏற்பட்ட பரிசயம் என் நினைவில் பில், அடுத்த டெண்டர் ஆகிய மாமூல் விஷயங்களிலிருந்தும் மாற்றி விட்டது. என்னை இன்னும் வேறோர் நினைவு வெட்டி இழுத்தது. அந்த அதிர்ச்சியில் சிறிது சூழ்ந்திருந்த நான் எல்லாவற்றையும் மறந்த நிலையில் அவள் முகத்தை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தேன்.

'அடடா! இந்த நர்மதாவுக்கு இப்படி ஒரு துர்ப்பாக்கியமா?' என்று நினைத்தது மனம்.

என் மன உணர்வுகளை அவள் மனமும் படித்துக் கொண்டிருந்தது போலும். ஏதோ குறிப்புடன் முன்பு நிமிர்ந்த அவளது முகம் இப்போது கவிழ்ந்தது. அந்த நிலையிலேயே என் பில் பாஸாகி விருப்பதைப் பற்றி இன்னொரு முறை எனக்கு நினைவுபடுத்துவது போன்று கூறினாள். எனக்கு அது அவள் அளித்துவிட்ட ஓர் உத்தரவு போலக்கூடத் தோன்றியதால் விடைபெற்று எழுந்தேன்.

நர்மதாவை உற்று நோக்கிய போது என்னை வெட்டி இழுத்த நினைவு வேறு; ஆனால் அவள் முகத்தில் கண்ட வெறுமை உணர்த்திய வேதனையுடன் கூடிய நினைவு வேறு. வீட்டுக்கு



வை. சுப்பிரமணியன்

வரும்போது யோசித்துக் கொண்டே வந்தேன். அந்தப் பெயர்ப் பலகையில் 'நர்மதா' என்று அவள் பெயரைப் 'பளிச்'சென்று எழுதியிராது போனாலும் அவளைச் சைலா என்றே நினைத்திருப்பேன். "சைலா, நீ எங்கே, இங்கே...?" என்ற கேள்வியுடனேயே சோக க்ஷேமங்களை ஆரம்பித்திருப்பேன். அந்த நினைவுதான் என்னை முதலில் கொக்கி போட்டு இழுத்தாற் போல் வெட்டி இழுத்து, நர்மதாவை எட்டிப் பார்க்கத் தூண்டியது. ஆனால் கைதீரான் சங்கிலியின் நுனிக் கொக்கி எதிரும் புதிருமாய் இருப்பது போல், நர்மதாவின் குலேமுண்ட கோலத்தை அவள் நெற்றி இன்னொரு கொக்கியாய் எதிர்நின்று காண்பிக்கது.

சைலாவும் நர்மதாவும் இரட்டையாய்ப் பிறக்காத ஒரே உருவத்தினர். அவள் யாரோ இவள் யாரோவென்ற உண்மையின் மேல் இருவரும் கூடிய ஒருருவாய் நர்மதா இப்போது தோன்றுவதும் மற்றோர் உண்மை தான். சைலாவின் உருவில், அமைப்பில், அழகில், எனக்குச் சந்தேகம் கிடையாது. அவளை இப்போது நினைத்துக் கொண்டாலும் அந்தந்த அசைவுடன், அதே அழகுடன், மின்வெட்டும் மீன் கண்களுடன் எதிரே மனக் கண் முன் தோன்றுவாள். அவள் தோற்றத்தை மனம் காணக் கண் மூடி நினைத்துக் கிடப்பதையே ஒரு காலத்தில் சுவாரசியமான செயலாக எண்ணிக்கொண்டிருந்திருக்கிறேன். அதனாலும் சொல்லலாம்: அவளும் நர்மதாவும் தோற்றத்தில் வித்தியாசப்படவில்லை. சைலாவே இன்றைக்கு நர்மதா என்ற பெயருடன் அப்படி ஒரு பெயர்ப் பலகை முன் காணப்படுகிறாளோ என்ற கதை ரீதியான யூகங்களுக்கு அவசியமில்லை. எனக்கு அது உறுதி. சைலா நர்மதாவாக மாறி வந்திருக்கவில்லை. நர்மதா சைலாவை நினைவூட்டும் ஒரு புதுமையாக—புதிராக வந்திருக்கிறாள்: கூடவே ஒரு சோக நாட்டத்தையும் தன் மேல் சுமந்து கொண்டு வந்திருக்கிறாள். சாயல் ஒற்றுமையில் இணைந்த என் மனம் இன்னொரு கிளையாகப் பிரிந்து அவள் நிலைக்கு வருந்தவும் செய்தது.

மறுநாளும் நான் அந்தக் காரியாலயத்துக்குப் போக வேண்டியிருந்தது. எனது அடுத்த டெண்டர் விஷயம் விவாதிக்கப்பட வேண்டியிருந்தது. அலுவலை முடித்துக் கொண்டு நர்மதா இருந்த இடம் வழியாக வந்து பொது நடையில் வெளியேறத் தொடங்கினேன்.

"மிஸ்டர் ராமபத்ரன்!" என்று அழைத்தாள் நர்மதா.

அவள் அழைப்புக்கு என் முகத்தில் எதிரொலி காட்டிக் கொண்டு 'வணக்கம்' என்று சொல்லி அவள் எதிரே உட்கார்ந்தேன்.

"நான் இப்போது உங்களைக் கூப்பிட்டது உங்களுடைய காண்ட்ராக்ட் சம்பந்தமான அலுவலக விஷயம் இல்லை. அப்படி நீங்கள் நினைக்க நான் இடம் ஏற்படுத்தியிருந்தால் தயவுசெய்து முதலில் என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள் நர்மதா.

"நான் அப்படி எதும் நினைக்கவில்லை. உங்களுக்கு நான் என்ன செய்யக் கூடும்?"

"என்னுடைய சொந்த விஷயம் ஒன்று: எனக்கு இருப்பதற்கு ஓர் இடம் வேண்டும்; இங்கே வந்தவுடன் இதே மாதிரி ஒருவரிடம் கேட்டுக் கொண்டதற்கு அவர் என்மேல் அநுதாபம் கொண்டோ என்னவோ உடனேயே ஓர் இடத்தைக் காட்டி விட்டார்; அது ஒரு ஸ்டோர்!... பார்த்துக் கொள்ளுங்களேன், அந்தச் சூழ்நிலை எப்படி இருக்குமென்று.... உண்மையில் இப்போதுதான் நான் அநுதாபத்துக்கு உரியவள். கூடிய சீக்கிரம் அந்த இடத்திலிருந்து மாறி வர ஓர் இடம் பார்த்துச் சொல்லுங்களேன்: நான் ஒண்டிக்கட்டைதான். டீஸண்டான ஒரு ரூம், ஒரு ஹால், ஒரு கிச்சன் கொண்ட இடம் போதும்...." என்றாள்.

"அதற்கென்ன, பார்த்துத் தருகிறேன்" என்று நான் சொல்லி முடிக்கு முன் நர்மதா கூறினாள்:

"நேற்றைக்கு நீங்கள் நடந்து கொண்ட விதம், நான் கேள்வியுற்றிருந்ததற்கேற்ப, கௌரவமான முறையில் இருந்தது. அதனால் தான் உங்களுக்கு இந்தச் சிறிய கஷ்டத்தைக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். இந்த உதவிக்கு முன்கூட்டியே என் நன்றியைத் தெரிவித்து விடுகிறேன்."

"இதென்ன பெரிய விஷயம்...?" என்று எழுந்தேன். நர்மதாவும் எழுந்து நின்று கை கூப்பி விடை கொடுத்தாள்.

நர்மதாவுக்காகப் பல இடங்களை மனசிலேயே ஓட விட்டுப் பார்த்தேன். என் வீடே பெரிய கப்பல்போல் கிடக்கிறது. எனக்கு இரண்டு அறைகளையும் சமையலுக்கு ஓர் இடத்தையும் தவிர மற்றதையெல்லாம் என் தொழில் சம்பந்தப்பட்ட சாமான்கள் நிரப்பிக் கொண்டிருக்கின்றன. அவைகளை அவுட்ஹவுஸுக்கு மாற்றி விட்டால்...?

நர்மதாவின் கருத்தைத் தெரிந்துகொண்டு தான் எதையும் செய்ய வேண்டும் என்று கருதி அவளுக்கு டெலிபோன் செய்தேன். என் வீட்டிலேயே அவளுக்கு இடம் தருவதைப் பற்றிச் சொன்னதும் அவள் மகிழ்ச்சியுடன் இசைந்தாள்.

அடுத்த நாள் காலை சில சாமான்களுடன் ஒரு பெரிய டாக்ஸியில் வந்து இறங்கினாள் நர்மதா. பின்னால் ஒரு லாரியில் கொஞ்சம் சாமான்கள் வருகின்றன என்று சொல்லி விட்டு வீட்டைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினாள் அவள். நர்மதாவுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த இடங்களைக் காண்பித்தேன்.

"எனக்கு இவ்வளவு இடம் எதற்கு? உங்கள் வீட்டாருக்கு அசௌகரியமாக்கிக் கொண்டு எனக்கு இடம் கொடுத்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் நர்மதா.

"அதெல்லாம் ஒரு அசௌகரியமும் இல்லை. என் வீட்டார் யார்? நான் ஒருவன்தான்.." என்னும்போதே என் பற்கள் நாக்கைப் பற்றின. 'இதை டெலிபோனில் பேசும்போதே அவளிடம் தெரிவித்திருக்க வேண்டாமோ? தெரிவிக்காமல் போனதைத் தவறாக எடுத்துக்கொள்வாளோ அவள்....?' என்று எண்ணினேன். நர்மதாவும் சில விநாடிகள் அயர்ந்தாற்போல் நின்றுவிட்டு, "அப்படியா? எனக்குத் தெரியவே தெரியாதே... மிஸ்டர் ராமபத்ரனுக்கு இன்னும் ஒரு மிஸஸ் வர

சிவப்பு கார்டினல் பாலிஷ்

தரைகளையும் படிக்கட்டுகளையும் பளபளப்பான செந்நிற ஒளிபெறச் செய்கிறது!





உங்கள் வீட்டுத் தரைகளை சிவப்பு கார்டினல் பாலிஷ் மூலம் உயிர்கொடுத்து ஒளிபெறச செய்யுங்கள். சிவப்பு கார்டினல் பாலிஷ், உடனே ஒளி கொடுத்து தரைகளைப் பிரகாசிக்கச் செய்கிறது. மினுமினுப்பற்ற சாதாரண கல் தரையிலும் சிமிட்டித் தரையிலும் பரீட்சை செய்து பாருங்கள். சிவப்பு கார்டினல் பாலிஷ் சீக்கிரத்திலேயே மங்கலான தரைகளை, புதியதோர் செந்நிற ஒளியுடன் பிரகாசிக்கும்படி செய்துவிடும்.

உங்கள் வீட்டுத் தரைகள் உயிருடன் கூடிய ஒளிபெற, இன்றே சிவப்பு கார்டினல் பாலிஷை உபயோகியுங்கள்!

அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

CP 1611

வில்லை என்று அர்த்தமா?.... அல்லது நான் ஏதாவது வெளிக் கூடாத குடும்ப ரகசியங்களை அம்பலப்படுத்துகிற கட்டத்துக்கு வந்துவிட்டேனா?'' என்று கேட்டாள்.

''நான் 'மெஷின்மேன்' என்று சொல்லுகிறதற்கு இணங்க என் தொழில் சம்பந்தப்பட்ட மெஷின்களில் ஒன்றுபோல் வாழ்கிறேன். சின்ன வயசிலேயே நான்தான் அப்பா அம்மாவை 'ஸ்வாகா' பண்ணிவிட்டேனாம்: அந்தக் குறை நீங்க, இன்னும் யாரையேனும் 'ஸ்வாகா' பண்ண இடம் இல்லாமல் ஒண்டிக் கட்டையாக இருந்து கொண்டிருக்கிறேன்!'' என்றேன் நான்.



''ஐயா சாமி! பிச்சை போடுங்களேன். இதுக்கு இந்தியிலே என்ன சார் சொல்லணும்?''

''அப்படியா?'' என்று வியந்தபடி என்னை ஏறிட்டுப் பார்த்தாள் நர்மதா.

என் வீட்டில் நர்மதா நடமாடிக் கொண்டிருந்த தோற்றம் எனக்குச் சைலாவைத்தான் நினைவூட்டியது. அவளுடைய நடைதான்; அவளுடையது போன்ற மருண்ட பார்வைதான்; அவளைப் போன்றே நர்மதாவும் கலகலப்பாகவும் நகைச்சுவையுடனும் பேசிக் கொண்டிருந்தாள். ஒரே ஒரு சிறு வித்தியாசம்: சைலா சமயங்களில் என்னைச் சொல்லால் சுட்டு விடுவாள். அந்தச் சூடு பட்டு நான் பொருமிப் பேசுவதும், படபடப்பதும் அவளுக்கு ஓர் ஆனந்தத்தைக் கொடுக்கும்: அந்த விஷயத்தில் நர்மதா மாறுபட்டிருந்தாள். என்னிடம் அப்படி வாதாடுவதற்கும் வாயாடுவதில் போய் நிற்பதற்கும் சைலாவைப் போன்று உரிமையும் உறவும் இல்லாதவள் நர்மதா என்பது உண்மைதான். ஆனாலும் அவளுடைய இயல்பே தனியானது.

என்னுடைய சமையற்காரரின் உதவியை முதலில் சில நாட்கள் ஏற்றுக் கொண்ட நர்மதா பிறகு தன் கை கொண்டு எதையும் செய்து கொள்ளத் தொடங்கி விட்டாள். சமையற்காரரும், என் பங்குக்கு நானும் வற்புறுத்தியும் அவள் சொல்லால் ஓர் அணை போட்டு மறுத்து விட்டாள். ''என் கைகளும் கால்களும் ஸ்வாதீனமின்றி நான் முடமாக இருக்கிறேனா? ஒரு பெண் பிள்ளை எதற்குச் சமையற்காரரின் உதவியை எதிர்பார்த்துச் சாப்பிட வேண்டும்?''

ஆனால் என்னுடன் பழகுவதில் பத்தாம் பசலிக் கொள்கையுடன் இல்லாமல் சகஜமாகப் பழகி வந்தாள் நர்மதா. காரியாலயத்துக்கு என் காரில் அவளைக் கொண்டு விட்டுப் போவேன். சில சமயங்களில் திருப்பி அழைத்துக் கொண்டு வருவேன்;

ஒரு நாள் மாடி முகப்பில் நாற்காலியைப் போட்டுக் கொண்டு ஒரு கட்டிடப் பிளானை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். கீழே நர்மதா பூவாளியை ஏந்திக் கொண்டு தரையில் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தாள். அவள் ஏதோ பூச் செடிகளுக்காகவோ, கறி காய்களுக்கோ விதை விதைத்திருக்க வேண்டும். அந்த நாட்கள் சில நாட்கள் முந்தி வரை கான்கிரீட் மிக்சர் யந்திரம் நிறுத்துவதற்கு உபயோகப்பட்டிருந்த இடம். இன்னும் கூட வாசல் முகப்பு முற்றிலும் சீர்ப்படுத்தப்படவில்லை. அதற்குள் நர்மதா தன் உழைப்பினால் ஒரு பகுதியைச் சமன் செய்து தோட்டவேலை தொடங்கி யிருக்கிறாள்.

இந்தக் காட்சி சைலாவுடன் அவளை ஒப்பிடுவதற்கு இன்னும் சிறிது ஏதாவது மீதி இருந்தாலும் அதை இட்டு நிரப்பி விட்டது. சைலாவும் இந்த மாதிரி ஒரு தோட்டப் பைத்தியம். அந்தக் காட்சி என் அகத் தோற்றத்தில் இப்போது நடப்பது போல் சலனமிட்டது. எட்டு ஆண்டுகளுக்கு முன்பு...எங்கள் ஊரில் நான் எங்கள் வீட்டு மாடி முகப்பில் உட்கார்ந்திருக்கிறேன். நான் கொணர்ந்து தயார்ப்படுத்தியிருந்த ரோஜாப் பதியன்களைத் தொட்டிகளில் வைத்து, பூவாளியால் சைலா தண்ணீர் வார்த்துக் கொண்டிருக்கிறாள். வேலை மும்முரத்தில் அவள் தன் சேலை முந்தானையைச் சிறிதே தூக்கி இடுப்பில் செருகியிருந்தாள். மாலை வெயிலின் இள மஞ்சள் நிறம் அவள் மீது படர்ந்திருக்கிறது. அவளது நீலச் சேலை காற்றில் படபடப்பது அவளை பூமியில் பாவாமல் இங்குமங்கும் பறந்து கொண்டிருப்பதுபோல் ஒரு தோற்றத்தை உண்டுபண்ணியது. ஒரு தேவதை அங்கு வந்து சஞ்சரிப்பதுபோல் தோன்றினாள் சைலா: காற்றைத் தழுவி அடி வைக்கும் அவள் பாதங்களையே பார்த்தவாறிருந்தேன் நான். யதேச்சையாக என் புறம் திரும்பிய சைலா முகம் தாழத் தன் சேலைத் தலைப்பை அவிழ்த்து விட்டுக்கொண்டு பூவாளியுடன் கிணற்றடியை நோக்கி நடந்து மறைந்தாள்.

ஓர் அம்சம்கூட இங்கே இப்போது நர்மதாவிடம் வித்தியாசப்படவில்லை என்றே சொல்லி விடலாம். ஆனால் சைலா முகம் தாழ்த்தியபோது மஞ்சள் வெயில் பட்ர்ந்த அவளது செம்மை முகத்தில் தன் வெட்கம் இன்னும் சிறிது தீர்க்கமாக வலியுறுத்திய அந்தக் குங்குமப் பொட்டு....! அது இன்றி மற்ற எல்லாவற்றிலும் பூரணமாக விளங்கினாள் நர்மதா. அதே மாதிரி நீலச் சேலை காற்றில் படபடத்தது: என்னைத் தற்செயலாக ஏறிட்டுப் பார்த்த பின் சிரித்துக் கொண்டே சிறிதுநேரம் வேலையைத் தொடர்ந்தாள் அவள். சேலைத் தலைப்பை அவிழ்த்து விட்டுக் கொண்டு பின்புறம் சென்றாள்.

சிறிது நேரத்தில் மாடிப் படி ஏறி வந்த நர்மதாவை வரவேற்று, ''வாருங்கள், நர்மதா, உட்காருங்கள்'' என்று எதிரிலிருந்த நாற்காலியைக் காண்பித்தேன்.



''இன்று என்ன டிபன்?''
''மாடிப் போர்ஷன்காரர், பூரி கிழங்கு செய்தாள். வலதுபுற போர்ஷனிலே உப்புமா. இடது பக்கத்துக்காரர் இட்லி. நான் பழையசோறு செய்திருக்கிறேன்.''

''என் தோட்ட வேலையை நீங்கள் சூபர்வைஸ் பண்ணிக் கொண்டிருந்தீர்கள் போலிருக்கிறது'' என்றாள் சிரித்துக் கொண்டே.

என் உணர்வுகள் இன்னும் நைலாவினின்றும் விடுபடாததால் நான் மௌனமாய் இருந்திருக்கிறேன். சற்று உரத்த குரலில், ''நான் கேட்டது கூடக் காதில் விழாமல் என்ன சிந்தனை?'' என்றாள்.

''மன்னிக்க வேண்டும், நர்மதா! நான் பழைய நினைவொன்றில் மூழ்கியிருந்தேன். சுற்றுப்புறம் மறந்து விட்டது'' என்றேன்.

''என்ன அது, அதிசயம்? 'அதிசயம் ஆனால் உண்மை'கள் எனக்கு நிறையப் பிடிக்கும். சொல்லுங்கள்.''

''நீங்கள் சற்று முன் தோட்ட வேலை செய்துகொண்டிருந்த காட்சியை உங்கள் தோற்றத்துடன், உங்கள் உடையில், உங்கள் நடையில் உங்கள் வாகனத்துடன் எட்டு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் பார்த்து ரசித்தேன், நர்மதா. அது நினைவுக்கு வந்து என்னை ஊமையாக்கி விட்டது.''

''இது அதிசயமில்லை; புதிர்!''

''புதிர் ஒன்றுமில்லை. உங்களுடன் இரட்டையாய்ப் பிறக்காத தோஷத்துடன் உங்கள் சாயலைக் கொண்டு என்னை அலைக்கழித்த என் அத்தை பெண் நைலா இந்தக் காட்சியை அன்று தோற்றுவித்தாள்.''

''என்னுடைய சாயலா? ஒருகால் உண்மையிலேயே நைலாவுடன் நான் கூடப் பிறந்திருக்கிறேனோ என்னவோ? இடையில் மர்மம் ஏதாவது நிகழ்ந்து நானும் அவளும் பிரிக்கப் பட்டிருக்கலாம். நானும் உங்கள் அத்தையின் இன்னொரு பெண்ணுவதில் மகிழ்ச்சியே கொள்வேன்.'' உதட்டோரம் குவிந்த அந்தச் சிரிப்பு அவள் வேடிக்கையாகப் பேசுகிறாள் என்பதைத் தெளிவுபடுத்தியது.

''அவள் மிகவும் சுவாரஸ்யமான பெண், நர்மதா. துடுக்குத்தனம், வாயாடும் கலை, குறுகுறுப்பு எல்லாம் கொண்டவள்.''

''அந்தக் குணங்களும் என் உடன்பிறப்புத் தான்.''

''இவை மட்டும் இருக்கலாம். ஆனால், உங்களிடம் இல்லாதது அவளிடம் நிறைந்திருந்தது. அதுதான் செருக்கு!''

''அப்படித் தோன்றியிருக்கலாம் உங்களுக்கு. செருக்கை அறுக்க வேண்டியது உங்கள் கையில்தானே இருந்திருக்கிறது. அவளை அத்தை பெண்ணுகவே தனித்து விட்டு வைத்திருந்ததில் அந்தக் கோளாறு இருந்திருக்கலாம். உங்களுடையவளாக ஒரு காலோக கூட நினைத்தில் முடித்துக் கொண்டிருந்தீர்களானால்....''

நான் குறுக்கிட்டுச் சொன்னேன்: ''அந்தச் செருக்குத்தான் நீங்கள் சொன்ன முயற்சிக்கும் முற்றுப்புள்ளி இட்டுவிட்டது. நான் இப்போது போலத்தான் ஆரம்ப நாட்களில் பிஸினஸ் தொடங்கி யிருந்தேன். மிலிடரி காண்ட்ராக்டர்களுக்குக் கருங்கல் ஜல்லி சப்ளை பண்ணுவதில் என் எதிர்காலத்தைத் தொடங்கினேன். அப்போது வீட்டில் யாரோ நைலாவையும் என்னையும் இணைத்துக் கல்யாணப் பேச்சுத் தொடங்கினர். அவள் 'பளிச்' சென்று வெண்கலத்தை விட்டெறிந்த மாதிரி சொன்னது இப்போதும் என் காதில் ஒலிக்கிறது: 'அத்தான் என்ன, தான் சப்ளை பண்ணும் ஒவ்வொரு ஜல்லிக் கல்லுமே ஒவ்வொரு ரூபாய் நாணயம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாரோ? கல்லைக் காசாக்கி இவர் மாடி வீடு கட்டும்போது நான் கிழவியாகி விடுவேன். இப்படியெல்லாம் இனி யாரும் பேச வேண்டாம்!' அவளுடைய ஆணி அறைந்த அந்த வார்த்தைகளே அவளையும் என்னையும் எட்ட எட்டப் பிரித்துவிட்டன; அன்றே நான் வீட்டை விட்டு வந்து விட்டேன். இன்று அவள் நினைவோடு மட்டும் வாழ்கிறேன்....''

''உங்கள் ஊர் எங்கே? எது? அதை மட்டும் சொல்லி விடுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்!'' என்று நர்மதா முடிக்கு முன் நான் சொன்னேன்: ''நைலா இப்போது இல்லை, நர்மதா! இருந்தவளாக, அம்மையில் குளிர்ந்தவளாகப் போய் விட்டாள்.''

'ம்'மென்று உணர்வு தாக்கப்பட்ட நிலையில் எதிரொலித்து மௌனமானாள் நர்மதா.

நைலாவின் நிலை அறிந்த நெகிழ்ச்சியில் நர்மதா தன் நிலையையும் பற்றி ஒருநாள் என்னிடம் கூறினாள். அவள் கணவன் கான்பூரில் ஓர் ஆயுதத் தொழிற்சாலையைச் சேர்ந்த நிர்வாக ஸ்தாபனத்தில் ஓர் இஞ்சினியராக இருந்தார். தொழில் நுணுக்கப் பயிற்சிக்காக மேல்நாடுகளுக்குச் சென்று இரண்டு ஆண்டுகள் படித்துப் பட்டம், அனுபவம், அறிவு முதிர்ச்சி ஆகியவற்றோடு திரும்பி வந்தார். நர்மதாவும் கணவருடன் மேல்நாடுகளுக்குச் சென்றிருந்தாள். தாய் நாடு திரும்பி, அனுபவம் பெற்ற புதிய மனிதராக — பெரிய பதவியோடு — காரியாலயத்துக்குள் நுழைந்த அவள் கணவன் சில மணி நேரத்தில் மாரடைப்பினால் மரணமடைந்து விட்டார். கணவன் வீட்டார் தவிர வேறு ஆதரவு இல்லாத நர்மதா துயரத்தையும் பொறுப்பையும் சுமந்து கொண்டு தென்னாட்டுக்குத் திரும்பிவிட்டாள்.

அவள் கதை என் நெஞ்சையே பிளப்பதாக இருந்தது. நலிந்த தன் நிலையைச் சீர்ப்படுத்திக்கொண்டு அவள் எதுவுமே நிக

மூாத ஓர் இயல்பான சூழ்நிலையில் இருப்பது போல் அமைதியாகவும் அடக்கமாகவும் இயல்குவதைக் கண்டு நான் வியந்தேன்.

என் காரில் சென்று சென்னையில் சில இடங்களைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தாள் நர்மதா. நான் இத்தகைய சந்தர்ப்பத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தவன்.

''நான் கல்லூரியில் படித்த பிறகு வடக்கே போய்விட்டேன். நீங்கள் குறிப்பிடுகிற எட்டு வருஷங்களுக்கு முன்பு என்று வைத்துக் கொள்ளுங்களேன். கல்லூரி உண்டு நான் உண்டு என்று இருந்தவள்; அதனால் மாறிப் போயிருக்கிற இந்த நகரத்தை ஒரு ரவுண்ட் பார்க்கலாம் என்று ஆசை. உங்களுக்கு இடைஞ்சலாக இருந்தால் வேண்டாம்'' என்றாள் நர்மதா.

''இடைஞ்சல் என்ன இதில்? இறங்கி வாருங்கள்; காரை எடுக்கிறேன்'' என்று வேகமாக ஷெட்டுக்குப் போனேன்.

அங்கங்கு தோன்றிய மாறுதல்களைக் கண்டு வியந்தபடி என்னையும் சில கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தாள் நர்மதா. நான் பதில் சொல்லிக் கொண்டு வந்தேன். இரவில் மின் விளக்குகள் நகரை வளைத்து ஒரு பெரிய ஒளிக் கோலம் இட்டிருந்தன. இறுதியாகக் கடற்கரைக்கு வந்தோம்.

''மைதலாவை இப்படிக் காரில் அழைத்துச் சென்று களிக்க வேண்டியவர்கள் நீங்கள் மிஸ்டர் ராமபத்ரன்!'' என்றாள் நர்மதா.

''மைதலாவை உங்கள் உருவில்தான் காண்கிறேனே'' என்று சொல்ல நினைத்தேன் நான். நல்ல வேளையாக, இறுக வாயை மூடிக் கொண்டேன்.

''நான் ப்ளெஷரை அனுபவிக்கிற லட்சியத்துடன் இப்படி இன்று சுற்றவில்லை; ஒரு நாள் எல்லாவற்றையும் பார்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தீவிர எண்ணம்; இன்று நேர்ந்தது'' என்றாள் நர்மதா.

''நீங்கள் எப்படியும் வாழ்க்கையை அமைதியான வழியில் மாற்றிக் கொள்ள வேண்டியவதுதானே!'' என்றேன்.

''ஆமாம்; உண்மை.''

''நீங்கள் வெளிநாட்டுக்கெல்லாம் போய் விட்டு வந்தவர்கள். உங்கள் வாழ்க்கை மலர இன்னும் இடம் இருப்பதால் நீங்கள் நடந்தவைகளை ஒரு கனவாகக் கருத முதலில் துணிய வேண்டும்!'' நானே இதைச் சொல்ல எப்படித் துணிந்தேன் என்று வியந்தேன்.

''நீங்கள் சொல்வது வாஸ்தவம். நான் அது பற்றியும் யோசித்து வைத்திருக்கிறேன்'' என்றாள் நர்மதா. இதைச் சொல்லும் போது அவள் முகத்தில் உதயமான புன்னகையைக் கண்டு நான் மகிழ்ந்தேன்.

விடியும்போது நான் வியப்புடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். அந்தக் கனவு......! அது நர்மதாவின் பொருள் பொதிந்த புன்னகையின் அடிப்படையில் எழுந்த இனிய கனவு; நர்மதாவை நான் மணம் புரிந்து கொள்வதைப் பற்றி வெளிப்படையாகவே கேட்பதிலும், அவள் மௌனத்துடன் அதே புன்னகையுடன் தலை குனிந்து சம்மதிப்பதிலும் கனவு தொடங்கியது.

''நான் என் மைதலாவை இழந்துவிட்ட நஷ்டத்தை அச்சுப் போன்ற அவள் உருவிலேயே உள்ள உன்னை அடைவதன் மூலம் சரிக் கட்டிக் கொள்கிறேன், நர்மதா!'' என்றேன் நான்.

''இதற்குத்தான் நேற்றுக் கடற்கரையில் காரில் வைத்து என்னிடம் இவ்வளவு பீடிகை போட்டுப் பேசினீர்களா?''

அவளது போன்று ஒரு புன்னகையைப் பதிலுக்கு அளிக்க முயன்றேன் நான்.

''கல்யாணத்தை எங்கேயாவது கோயிலில் வைத்துக் கொள்ளலாமா?''

அவள் இடைமறித்தாள்: ''இப்படிப் பட்ட திருமணத்தைக் கடவுள் ஏற்பாரா? ரிஜிஸ்திரேஷன் ஆபீஸில் முடித்துக் கொண்டு வேண்டுமானால் சுவாமி தரிசனம் செய்யக் கோயிலுக்குப் போகலாம்.''

''திருமணத்துக்குப் பிறகு நான் உன்னைத் 'மைதலா' என்று அழைக்கலாமா நர்மதா?''

''சுயநலம்தானே முன்னால் நிற்கிறது! செய்யுங்கள்!''

இந்தக் கனவைப் பற்றி நர்மதாவிடம் சொல்ல நேற்றையத் தொடர்பாக ரகுவில் பேச்செடுக்க வேண்டும் என்று நினைத்தேன்.


பல் துலக்கிக் கொண்டு மாடி முகப்புக்குப் போனேன்; நர்மதாவும் வந்தாள். அவள் கையில் ஒரு சூட்கேஸ் இருந்தது.

பெட்டியும் கையுமாய் அவளைக் கண்டதும் என்னுள் துணுக்கென்றது.

''பிரதர்!'' என்று அழைத்தாள் நர்மதா. என் உணர்வுகள் கூடி என்னையே எங்கோ கொண்டு ஒளிக்கத் துடித்தன போல் படபடத்தன. ''இந்த ஸூட்கேஸை மட்டும் இப்போது எடுத்துப் போகிறேன். சாயங்காலம் லாரி வரும். அதில் தயவுசெய்து என் சாமான்களைப் போட்டு அனுப்பி விடுங்கள்'' என்றாள் நர்மதா.

''ஏன் நர்மதா?.....''

''ஏன் என்று உங்களுக்கே தெரியும்: உங்கள் மீது குற்றம் ஒன்றும் நான் சுமத்தவில்லை. நான் வெறும் நர்மதாவாக இருந்தால் பரவாயில்லை. உங்கள் மன எழுச்சிகளுக்குச் சமாதானம் கூறிவிட்டு இங்கேயே இருப்பேன். நான் மைதலாவின் கோலத்தைக் கொண்டு உங்களை உறுத்திக் கொண்டிருக்கிறேன். அதனால் உங்கள் பக்கலில் இருப்பது உசிதமல்ல. இன்னொன்று. நீங்கள் ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணத்தை முடித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால், உங்கள் பிஸினஸ் விஷயமாக எங்கள் காரியாலயத்துக்கும் நீங்கள் அடிக்கடி வரவேண்டியிருக்கிறதல்லவா? நானே அதற்கு ஏற்பாடு செய்கிறேன். ஓர் அண்ணி இங்கே வந்த பிறகு நானும் மீண்டும் இங்கேயே குடி வந்து விடுகிறேன்'' என்று எழுந்தாள் நர்மதா. இதைத் தொடர்ந்து நேற்று அவள் முகத்தில் சுடர்விசிய புன்னகை இப்போதும் தோன்றியது அவள் அதரங்களில். அந்தப் புன்னகை இத்தனை மாற்றத்தையும் தன்னுள் அடக்கிய ஒன்று என்று இப்போதுதான் எனக்குப் புரிந்தது!



இந்த வீட்டில்தான் சௌபாக்கியவதி கௌரிக்கும், சிரஞ்சீவி கோபாலனுக்கும் கலியாணம்.

நாதசுர இசை காதைத் துளைத்தது.

வீட்டின் முன் பந்தல் இல்லை. வாழை மரம், தோரணங்கள் இல்லை. கூட்டமும் இல்லை....

நாதசுர இசை காற்றில் கலந்து வந்தது....

கௌரியின் தாயார் 'கடு கடு'வென்ற முகத்துடன் வாசலில் வந்து எட்டிப் பார்த்தாள். நல்ல காலம்..... வீதி முனையில் வரும் பால்காரனைப் பார்த்ததும்தான் அவள் முகம் மலர்ந்தது. பால்காரன் அருகில் நெருங்கியதும் அவன் மேல் ஒரு வசைமாரி பொழிந்து விட்டு அவசரமாகப் பால் பாத்திரத்துடன் உள்ளே நுழைந்து மறைந்தாள்.

தவில்காரன் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தான். சத்தம் காதைப் பிளந்தது.

அப்பொழுது கௌரியின் தகப்பனார் ஒரு சிறிய பையில் காய்கறிகளுடன் உள்ளே நுழைந்தார். அவர் வருவதைப் பார்த்ததும், அவருடைய அருமை நாய் வேகமாகத் தாவி வந்து அவர் மேல் ஏறியது. அவர் ஒரு பொட்டலத்தைப் பிரித்து அதனுள்ளிருந்த ரொட்டியை எடுத்துச் சாவகாசமாகப் பிய்த்துப் பிய்த்துத் தம் அருமை நாய்க்குப் போட்டார். சமையலறையிலிருந்து கௌரியின் தாயார் குரல் கொடுத்தாள்: ''நன்றாக இருக்கிறது.... நேரமாகவில்லையா? சாவகாசமாக உட்கார்ந்து விட்டீர்களே! உங்கள் செல்லப் பெண்ணை எழுப்புங்கள்.....'' என்று. உடனே அவர் தம் கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

இப்பொழுது தவிலின் சத்தம் மண்டையைப் பிளந்தது. உடனே வேகமாக அறையில் நுழைந்து.... கோடியிலிருந்த அறையின் முன் தொங்கிய படுதாவை விலக்கி மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தார். அங்கு பஞ்சணையில் கௌரி சுகமாக நித்திரையில் ஆழ்ந்திருந்தாள். ஒரு கணம் தயங்கியவர், பிறகு நேரம் வேகமாக ஓடுவது ஞாபகம் வந்ததால், மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, ''கௌரி! கௌரி!'' என்று அழைத்தார்.

கலியாணப் பெண் கௌரி மெதுவாகத் தன் இமைகளை நீக்கி அறையை ஒரு நோட்டமிட்டாள். நாணம் கலந்த புன்னகை அவள் முகத்தில் பரவியது. அங்கிருந்த கடிகாரத்தைப் பார்த்தவள் திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தாள்.

''இன்றைக்காவது நீங்கள் எழுப்பாமல் சீக்கிரம் எழுந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். எப்படித்தான் இவ்வளவு நேரம் தூங்கினேனோ...?'' என்று மொழிந்துவிட்டு.... கையில் பிரஷ்....டூத் பேஸ்ட், சோப்பு, துவாலை எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு பின்னால் ஓடினாள்.

நடு வழியில் அவள் தாயார், ''நன்னா யிருக்கு மேளச் சப்தம் காதைத் துளைக்கிறது. எப்படித்தான் நீ எழுப்புகிறவரையில் தூங்கினயோ! சரி! 'மசமச'வென்று நிற்காமல் சீக்கிரம் குளித்துவிட்டு வா'' என்றாள்.

நாதசுர இசை வீட்டை இரண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

பூஜை அறையில் கௌரியின் அத்தை சுவாமிக்கு விளக்கேற்றி விட்டு, ''சுவாமி! பகவானே! நல்லபடியாகக் கலியாணத்தை நீதான் நடத்திக் கொடுக்கணும். ஒரு விக்னமும் இல்லாமல் கலியாணம் நடந்தா பிள்ளையார் அப்பனே! உனக்கு நூறு தேங்காய் உடைக்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டாள்.

தவில்காரன் தன் கைவரிசையைக் காட்டி காதைப் பிளந்தான்.

இதற்கு மேல் கௌரியின் தாயாருக்குப் பொறுமை இல்லை. ''ஏண்டா, மணி! நன்னா யிருக்கு நீ பரீட்சைக்குப் படிக்கிற லட்சணம்..! இப்படித்தானா ரேடியோவை அலற விட்டுப் படிப்பார்கள்.....?''

அதற்கு மணி, ''என்ன செய்வது! சரியா இன்னும் பதினைந்து நாட்களில் கௌரிக்குக் கலியாணம்; எனக்குப் பரீட்சை; அந்தச் சமயத்தில் இந்த மேள சப்தத்தில் எப்படிப் படிக்கிறது என்று இப்பொழுதே பழக்கப்படுத்திக் கொள்கிறேன்'' என்றான்.

ஆமாம்...... இந்த வீட்டில்தான் இன்னும் பதினைந்து தினங்களில் சௌபாக்கியவதி — கௌரிக்கும், சிரஞ்சீவி கோபாலனுக்கும்... கலியாணம்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: I. Sadasivam

அஜீரணத்தால்
அவஸ்தைப்பட
வேண்டாம்!



ஹ்யூலெட்ஸ் மிக்சர்

அருந்தி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

வேலை மும்மரமும் கவலையும் ஜீரணத்தை பாதிக்கின்றன; பசியை மந்திக்கச்செய்து, தளர்ச்சியூட்டுகின்றன. ஹ்யூலெட்ஸ் மிக்சர் விரைவில் நீடித்த பரிகாரம் அளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் வயிற்று உபாதையை விரைவில் போக்கி, நிரந்தரமாக குணமளிக்கிறது. வலியுண்டாக்கும் அமிலங்களை அகற்றி, ஜீரண கோசத்திற்கு அதன் வேலையை சரிவர செய்வதற்கேற்ப பாதுகாப்பளிக்கிறது. ஹ்யூலெட்ஸ் மிக்சர் குழந்தைகளின் வயிற்றுக் கோளாறுகளுக்கும் கூட சிறந்தது. வயிற்றுப் போக்குக்கு அபினி சேர்ந்த ஹ்யூலெட்ஸ் மிக்சர் குணமளிக்கும்

ஹ்யூலெட்ஸ் மிக்சர் ஜீரணத்திற்கு சிறந்தது.



C. J. ஹ்யூலெட் & ஸன் (இந்தியா)-பிரைவேட் லிமிடெட்
86 A, நைனியப்ப நாயக் தெரு, மதராஸ் 3

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon